# மடலேறிய ஓவியம்

விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பெரிய கல்யாண மண்டபத்தின் மொட்டை மாடியில் நின்று சிகரெட்டை ஊதினான் யுவன்.

அவளுக்குப் பிடித்தால் திருமணம்!

ஈர்ப்பும் துளியும் இல்லை!

தாயின் ஒருவிதமான பாச மிரட்டலில் தலையை ஆட்டி விட்டான். திருமண நாள் நெருங்க நெருங்க மனதில் அவனறியாத இறுக்கம் பரவியது.

பிரீத்தாவை நினைத்தான். இதுவரை இரண்டு மூன்று முறை பார்த்துப் பேசியும் இருக்கிறான். அவன் பார்க்கையில் தழைத்த கண்களை அவன் நகரும் வரை நிமிர்த்தவேயில்லை. அவன் பேச்சிற்கு எதிராக ஒன்றுமே பேசவில்லை. ஆமாம், சரி, ஆகட்டும். இதெல்லாம் அவனின் கேள்விகளுக்கு அவள் தந்த பதில்கள். அழகில் குறைவில்லை, படிப்பில் குறைவில்லை, வசதியில் குறைவில்லை ஆனால் அவனுள் அவளைப் பார்க்கையில் எந்தவிதமான ஈர்ப்பும் நிகழவில்லை.

கடந்த சில நாட்களாக அண்ணனின் முகத்தில் இருந்த புருவ சுழிப்பைப் பார்த்து காதம்பரிக்கு உள்ளூர பயம் கலந்த குழப்பம்தான். கல்யாணம் ஆனால் எல்லாம் சரியாகப் போகும்ணா. திருமணத்தை எவ்வளவு வருஷம் தான் தள்ளிப் போடுவீங்க. நாங்களும் எத்தனை வருஷம் தான் காத்திருப்பது. பின்னே அண்ணா, என்று ஏதேதோ சொல்லி அவனை மசித்துவிட்டார்கள். அது என்னவோ, அம்மாவும் தங்கையும் பேசினால் தான் எவ்வளவு எளிதாக வளைந்து கொடுக்கிறோம் என்று அவனுக்கே மலைப்பாக இருந்தது.

வெளியில் அவன் முன் நின்று பேசக்கூட எல்லோரும் பயப்படுவார்கள். அவன் சொன்னதுதான் சட்டம். அவன் பேச்சில் இருக்கும் அழுத்தத்தில், எதிர்த்து ஒரு வார்த்தைகூட யாரும் கேள்வி எழுப்பமாட்டார்கள். அப்பேர்ப்பட்டவனை வீட்டுப் பெண்களிருவரும் சுண்டு விரலில்தான் முடிந்திருந்தார்கள்.

காதம்பரி சொல்வதும் ஒரு விதத்தில் சரிதான். பேச்சிலர் லைப்பில்

· சித்ராபாலா ·



இருந்து, சம்சார வாழ்வில் நுழைவதில் ஏற்படும் கலக்கம்தான் என்று தன்னைத் தானே சமாதானப்படுத்தினான்.

நாளை இந்த நேரத்தில் அவனுடன் அவள் இருப்பாள். இனி வாழ்நாள் முழுவதும்...

புகைத்த சிகரெட்டை கீழே போட்டு விட்டு திரும்பினான். அதே நேரத்தில் அவன் முகத்துக்கு நேராக, கொசு மருந்து புகை போல ஏதோ புகை மூட்டம் வேகமாக நாசியைத் துளைக்க, அதன் நெடியில் அவன் புருவம் நெரிய, என்ன? ஏது? என்று உணராமலே வேகமாக அனிச்சை செயலாக அந்த புகை வரும் சாதனத்தை தள்ளினான்.

யாரோ அவனை மயக்க மருந்து ஸ்பிரே செய்து மயக்க நினைக்கிறார்கள் என்று நொடியில் புரிந்தது.

ஏன் ? அவனுள் கேள்வி எழுந்தது.

அவன் சுவாசித்த அந்த சிறு அளவு மயக்க மருந்து அவனை தடுமாற வைத்தது. வித்தையான முறையில் தடுமாற்றத்திலும் முகமூடி அணிந்திருந்த அந்த ஒரு ஜோடி கண்கள் அவன் கவனத்தை ஈர்த்தது.

பெண் யாரிவள்? எத்தனை துணிச்சல்? ஆனால் எதற்காக?

தொடர்ச்சியாக அடித்த அந்த வீரியமான மருந்து, யுவன் மூச்சை இழுத்துப் பிடித்தும் முடியாமல் ஓரளவு மயக்கமடைய செய்தது. அரைகுறை மயக்கத்தில் அவனுக்கு பேச்சுக்குரல் கேட்டுக் கொண்டு தான் இருந்தது.

''முழுதாக மயங்கிய மாதிரி தெரியவில்லையே?''

''அவன் மூக்கில் ஓங்கி ஒரு குத்து விடுவோமா?''

''மூக்கில் குத்தினால் முழு மயக்கம் வந்து விடுமா?''

''யாருக்குத் தெரியும் ? சினிமாவில் அப்படித்தான் காட்டுவாங்க.''

''இல்லை என்றால் இந்த கம்பை எடுத்து மண்டையில் இரண்டு போடு, போடுவோமா.''

''ஓரேடியாக போய்விட்டால்...? நாம போய் ஜெயிலில் களி திங்க வேண்டியது தான்.''

''இப்போ ஜெயிலில் களி போடுவதில்லை யாம்ப்பா. கறி சாப்பாடு போடுகிறார்களாம்.''

''அப்போ கம்பி எண்ணுவதற்கு நீ ரெடின்னு சொல்லு.''

''ஐயோ, பேசி நேரமாக்க வேண்டாம். இவனை எப்படி தூக்கிப் போவது? எப்பா.. என்ன உயரம் ...? ஆனால் நம்ம ரக்ஷிதா இவன் இத்தனை உயரம் என்று சொல்லவேயில்லையே.''

''மறந்திருப்பாளாயிருக்கும்.''

ஆனால் அந்த உயர வித்தியாசத்தில் அந்த அழகிய பெண்களிருவரும் யோசித்திருந்தால் ஆள் 'மாறிய' விஷயம் புரிந்திருக்கும். பிறகு ஏற்படப் போகும் பெரும் குழப்பத்திலிருந்து தப்பியிருக்கலாம்.

திட்டமிட்டபடி கொண்டு வந்திருந்த வீல் சேரில் அவனை அமர்த்தி வெள்ளை டவலால் அவனின் தோள்புறம் மூடி, கண்களில் கூலிங்கிளாஸ் அணிவித்து, தலையில் பெரிய தொப்பியை கவிழ்த்து, வண்டியை உருட்டிக் கொண்டு லிப்ட்டை நோக்கிப் போனார்கள். அவன் மயங்கிவிட்டதும் தங்களின் முகமூடியை கழற்றி பைக்குள் வைத்துக்

கொண்டார்கள். அக்கம் பக்கம் கண்களால் அளந்தபடி புரபஷனல் கடத்தல்காரர்கள் போல் பிழையின்றி கடத்துவதாக நினைத்துக் கொண்டாலும், உள்ளூர திகிலாக இருந்தது.

லேகா ஜீப்பை ஓட்ட, வீல் சேரிலிருந்து இடம் பெயர்ந்து இன்னும் அரை குறை மயக்க நிலையில் இருந்த யுவனுடன் மதன் பின்புறம் அமர்ந்திருந்தான். "நல்லவேளை 'ஜீப்' பை எடுத்துட்டு வந்தோம். விஷ்வா சொன்னது போல் மாருதிகார் என்றால், அந்த சின்ன காரில் இவனைத் தூக்கி வைக்கிறதுக்கெல்லாம் கஷ்டப்பட்டிருப்போம்.

"இவனுக்கு மயக்கம் இன்னும் எவ்வளவு நேரம் இருக்கும்ப்பா? இப்பவே கண் லேசா ஆடுற மாதிரியிருக்கு. இன்னொரு வாட்டி மயக்க மருந்தை 'ஸ்பிரே' பண்ணுவோமா?"

"இதெல்லாம் இவனுக்கு தேவையா?" என்று திரும்பி மயங்கியிருந்தவனை கை காட்டிப் பேசினாள் லேகா.

"திரும்பாதே ரோட்டை பார்த்து வண்டி ஓட்டு."

"ம்ம்.... எத்தனை வாட்டி இவன் கிட்டே கல்யாணத்தை நிறுத்து என்று ரக்ஷிதா கெஞ்சி கெஞ்சி கேட்டாள். லவ் மேட்டரை வேறு எடுத்துச் சொல்லி, ப்ளீஸ் என்னோட 'லவ்'வரோட என்னை வாழ விடுன்னு கேட்டப்பவும், காது குடுத்துக் கேக்கலைன்னா பட்டுத்தான் ஆகணும்".

என்று காரை ஓரமாக நிறுத்தி, இன்னும் தாராளமாக மயக்க மருந்தை ஸ்பிரே செய்தார்கள். எங்கே பாதி மயக்கத்தில் அவன் எழும்பி விட்டால் காரியம் கெட்டு விடுமோ என்ற கவலை அவர்களுக்கு.

மறுபடி வண்டியை இயக்கிய லேகா, "காலையில் மாப்பிள்ளையை காணோம் என்று கண்டிப்பாக கல்யாணம் நின்று போகும்."

"அப்புறம் நம்ம ப்ளான்படி மதனும், நீருவும் முகூர்த்த நேரம் முடிவதற்குள், 'இதோ..' 'இதை பத்தி..' என்று அரை மயக்கத்திலிருந்த யுவனை கட்டிக்காட்டி 'கண்ட கதை சொல்லி கெட்ட பேர் உண்டு பண்ணி நம்ம ப்ளான்படி நம்ம ரோமியோவை 'ஹீரோ'வாக்கி மாப்பிள்ளையாக்கி விடுவார்கள்.

எல்லாம் ப்ளான்படி நடக்க வேண்டும் என்று மனசுக்குள் வேண்டிக் கொண்டார்கள். பெண்களிருவரும் காதல் ரோமியோ, ஜூலியட்டான ரக்ஷிதா விஷ்வா கல்யாணம் சுபம் ஆக முடிய வேண்டுமே என்ற கவலை அவர்களுக்கு. காதலை உரம் போட்டு வளர்த்த தோழியராயிற்றே. வளர்த்தபாவம்....?

சென்னை ஊர்வாசிகளான இருவருக்கும் கல்யாணத்திற்கு என்று வந்து இருந்த மதுரையை தெரியாதவர்கள் என்பதால் கடத்தியவனை மறைவாக வைப்பதற்கு என்று ஒரு இடம் நண்பர்களால் வாடகை பேசி வைக்கப்பட்டிருந்தது. ஊருக்கு மத்தியில் ஒரு சின்னஞ் சிறு தனி வீடு. கல்யாணம், அதனால் சொந்தக்காரர்கள் தங்கிப் போக வீடு வேண்டும் என்று பேசி முடிக்கிறார்கள்.

நண்பர்கள் [illegible], லேகா, மதன், ரக்ஷிதா, நிருபன் இவரும் காலேஜில் வைத்து பெயர் போனவர்கள். பண்ணுகிற ஜுட்டிக்கு ஒருத்தரை ஒருத்தர் காட்டிக் கொடுப்பதும் அவர்கள் அகராதியில்



இல்லை. பயம் அறியா கன்றுக் குட்டிகள் விளையாட்டு விளையாட்டாய் அவர்கள் நடத்தும் கடத்தல் எப்பேர்ப்பட்ட குழப்பத்தில் கொண்டு விடப்போகிறது என்பதை அவர்கள் அப்போது உணரவில்லை.

ஒரு வழியாக அவனை மீண்டும் வீல் சேரில் அமர வைத்து வீட்டிற்குள் உருட்டிப் போனார்கள். பிறகு சேரில் இருந்து இறக்கி தூண்புறமாக உட்கார வைத்து தடியான சணல் கயிறு கொண்டு அவனை தூணோடு கட்டினார்கள்.

சிப்பை ஒளித்து வைத்தால் கல்யாணம் நிற்காது. ஆனால் மாப்பிள்ளையை ஒளித்து வைத்தால் கல்யாணம் நின்று தானே போகும் என்று தங்களுக்குள் சொல்லிச் சிரித்து கொண்டாலும் அவர்களின் நெஞ்சு திக் திக் என்று அடித்துக் கொண்டது உண்மை.

## 2

**வி**டியற்காலை, கண் அயராமல் கடத்தியவனை காவல் காத்த இருவருக்கும் மனசில் இருந்த சிறிய பயம் கலவரமாகியது. எல்லாம் நினைத்தது போல் நடக்க வேண்டுமே?

"லேகா செல்போன் வீட்டுக்குள்ளே சிக்னல் கிடைக்க மாட்டேங்குது. அவன் இன்னும் நல்ல மயக்கத்திலேதான் இருக்கான். பிரச்சனையில்லை. நீ வெளியே சிக்னல் கிடைக்குதா பார். மண்டபத்துல என்ன நிலைமைன்னு மனசு அடிச்சுக்குது."

"ஒரே டென்ஷனா இருக்குப்பா."


"சீக்கிரம் போ. என்னாச்சுன்னு தெரியலைன்னா மண்டை வெடிச்சுறும் போல இருக்கு."

லேகாவிற்கு வீட்டின் வெளியேயும் சிக்னல் கிடைக்கவில்லை. கொஞ்சம் நடந்து பார்ப்போம் என்று கொஞ்சம் மேடாக இருந்த இடமாக நடந்தாள். உடைக்க வைக்கப்பட்ட செங்கல் குன்றின் மேல் ஏறினாள். லைன் கிடைத்தது.

"என்னங்க நான் உங்கம் மாவுக்கு கால் அமுக்கி விட்டேன்!"

"அதெல்லாம் சரி... எக்காரணத்தைக் கொண்டும் கழுத்தை மட்டும் அமுக்கி விடாதே!"

—வைகை. ஆறுமுகம் மதுரை.



இங்கே.
"இன்னும் நல்ல மயக்க நிலையில் தானே இருக்கின்றான்" என்று முணுமுணுத்தபடி பழக்கமற்று பாதுகாப்பிற்கு என்று மீண்டும் அணிந்திருந்த முகமூடி உறுத்த சிறிது தளர்த்தி, அங்கிருந்த சோபாவில் கண்மூடி அமர்ந்தாள் மஹதி.

ரக்ஷிதாவின் அம்மாவும், அப்பாவும் அவள் விரும்பியபடி திருமணம் செய்ய சம்மதித்திருந்தால் இந்த மாதிரி கூத்தெல்லாம் நடத்திருக்காது என்று மனதுள் எண்ணினாள்.

இந்த கடத்தல் எவ்வளவு தூரம் வெற்றியடையும் என்று யோசித்தாலும், தோழர் தோழிகளுடன் அடுத்த ஹாட்டிவிலும் இரவெல்லாம் கண் விழித்து மறுநாள் திட்டத்தைப் பற்றி விவாதித்ததிலும் கண்களை மூடிய மஹதி சில பல நொடிகளில் அவளறியாமல் தூங்கியும் விட்டாள்.

ஏதோ நாற்காலி நகரும் சப்தம் போல கேட்கவே, தூக்கம் கலைந்து 'திடுக்' என்று நிமிர்ந்தாள்.

கண்கள் வேகமாக இமை கொட்டாது கடத்தப்பட்டவனை நோக்க, அங்கே.. அவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்ப்...பா.... எவ்வளவு ஷார்ப்பான கண்கள் கடத்தப்பட்ட நிலையிலும் என்ன கம்பீரமான தோற்றம். கல்யாண மாப்பிள்ளை கல்யாண நேரத்தில் கடத்தப்பட்டிருக்கிறான். ஒரு பதட்டம் வேண்டாமா மனிதனுக்கு? என்ன நிதானமாக என்னை ஆராய்கின்றான்? முட்டாள். அதுதான் முகமூடி அணிந்திருக்கிறேனே. என்னை அடையாளம் கண்டு பிடித்து விடுவானா என்ன? என்று நினைக்கும் போதே முகத்தில் சுதந்திரமாக காற்று வந்து மோதுவது உரைத்தது.

அடக்கடவுளே! 'படக்' என்று மூக்கு வரை துணியை இழுத்தாள்.

"ஏய்... ஏய்... பார்த்தாயா என்னை..?" என்று பதட்டத்தில் அவள் உளறி கொட்ட, அவளையும் மீறி அவளின் பாவனையில் அவன் உதடு சிரிப்பில் விரிந்தது. ஆனால் நொடியில் அவன் கண்களின் பார்வை தீவிரமானது. உதடு அழுத்தமாக இறுகிக் கிடந்தது. மஹதிக்கு இதயம் படபடவென்று அடிக்கத் தொடங்கியது.

"லே...லேகா...." - என்று சத்தமாகக் குரல் கொடுத்தாள். மஹதி பதில் ஒன்றும் காணாது போகவே. "அதற்குள் இவனுக்கு எப்படி மயக்கம் தெளிந்தது" என்று முணுமுணுத்தபடி அமர்ந்திருந்த சோபாவில் இருந்து வேகமாக எழுந்தாள்.

"நல்ல வேளை இவனை கட்டிப் போட்டோம்" - என்று தனக்குள் மீண்டும் முணுமுணுத்தபடி கைப்பையிலிருந்த ஸ்பிரேயை எடுத்தாள்.

அவன் கண்களில் இருந்த தீர்க்கத்தில், மஹதிக்கு உள்ளூர உதைப்பாகத்தான் இருந்தது. பின்னே.. கல்யாண கனவுடன் இருந்தவனை கடத்தி வந்தால் சும்மா விடுவானா? ச்சே.. இந்த மயக்க மருந்தை வாசித்தால் பன்னிரெண்டு மணி நேரம் நினைவு திரும்பாது என்று மதன் சொன்னது பொய்யா...? முதலில் அவன் மேல் மயக்க மருந்தை அடித்து சோதித்திருக்க வேண்டும். முட்டாள் என்று



எரிச்சலுடன் எண்ணியபடி கடத்தப்பட்டவன் அருகில் வந்தாள். அதிர்ந்து போனாள். அவளின் அழகிய மீன் விழிகள் பயத்தில் விரிந்தன. சில விநாடிகள் அவள் மூளை வேலை நிறுத்தம் செய்தது.

அங்கே.. அவன்... கைகட்டு கால் கட்டின்றி சுதந்திரமாக தூணில் சாய்ந்திருந்தான். எப்படி அவிழ்த்தான்? நெஞ்சம் வேலையை இரட்டிப்பாக்கியது.

"மைகாட்..." - என்று மஹதி ஓரளவு சுதாரித்து ஸ்பிரேயை அவன் முகத்தில் அடிக்க எத்தனிக்க, மின்னல் விரைவென அவன் கை நீண்டு அவள் கரத்தைப் பற்ற, என்ன ஏது என்று அறியுமுன் அவனருகில் தரையில் 'பொத்தென்று' விழுந்தாள் மஹதி.

கண்கள் கலவரத்தில் விரிந்து சுருங்கியது. அவள் நெஞ்சில் என்னவெல்லாமோ எண்ணங்கள் நொடியில் உருப்பெற்று அவளை கலங்கடித்தது. அவளை செயலாற்ற விடாமல் விரைந்து வந்த பழக்கமற்ற ஆண் கரம் அவளை சுற்றி வளைக்க, மயக்க மருந்து இல்லாமலே அவளுக்கு மயக்கம் வரும் போல் இருந்தது.

அதே சமயம் வீட்டிற்குள் பதட்டத்துடன் நுழைந்த லேகா, தன் தோழி இருந்த நிலை கண்டு அதிர்ச்சியடைந்தாள். இது என்ன புது திருப்பம்...? என்று அரற்றியபடி அறையின் மூலையில் கிடந்த பொருட்களை நொடியில் ஆராய்ந்தாள், பின் கையில் கிடைத்த ஸ்டிக்கால் ஓங்கி அவன் தலையில் அடிக்க, இம்முறை நிஜமாகவே முழு மூர்ச்சையானான் யுவன்.

அவனின் அணைப்பிலிருந்து 'அம்பாக' விடுபட்ட மஹதிக்கு உடல் நடுக்கம் கொண்டது. ஆனால் தொடர்ந்து லேகா சொன்ன செய்தியில் நடுக்கம் அடங்கி உடல் விரைத்துப் போனது.

"மஹதி... என்றவள் மேலே பேச முடியாமல் திடுக்கிடபடி, பின் சமாளித்து, "பெரிய தப்பு நடத்திடுச்சு மஹதி..."

"எ... என்ன.. சொல்றப்பா..."

"நாம... தப்பான ஆளை கடத்திட்டோம்..."

"என்..னது...?"

"அங்கே மாப்பிள்ளை கல்யாணத்திற்கு மேடையில் வந்து அமர்ந்தாச்சாம். மதனும், திருபனும் சுத்தறாங்க."

சொன்ன லேகாவின் முகம் ரத்தப் பசையற்று வெளிறிப் போனது.

"அப்போ.. இது யாரு?"

'என்ன மடத்தனமான காரியம்!'

'யார் இவன்?'

இப்போது கண்ணையும், கருத்தையும் திறந்து வைத்துப் பார்க்கும் போது யாரோ பெரிய இடத்து மனிதன் என்று புரிகிறது. இது எங்கே போய் முடியுமோ? என்று இருவருக்கும் கதி கலங்கியது.

"ரக்ஷிதா டென்ஷனாகி விட்டாளாம். இப்ப என்ன பண்றது?"

"நல்லா விசாரிச்சுதானேப்பா கடத்தினோம். மாப்பிள்ளை எப்படி மாறிச்சு?"

"அப்போ... நம்ம.. பிளான்.. இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டது மெனக்கெட்டது... பாழ்தானா?" - இருவரின் முகமும் வியர்த்துப்

போனது.

கல்யாண மண்டபத்தில் இனி செய்வதற்கு ஒன்றும் இல்லை என்று அரக்க பரக்க வந்த மதனும் திருபனும் பெண்களிடம் சண்டை விட்டனர்.

"நான் அப்பவே சொன்னேன். அந்த கடத்தல் வேலை வேலைக்கு வேலை வேடாது. நாங்க கடத்தறோம்னு மண்டபத்து வேலையை நீங்க செய்யுங்கன்னு. உடனே அதுக்கும் சண்டை..."

"ஓ.. வேலன்னா இளப்பமா? உங்களுக்கு நாங்க சக்குவல் அது இது என்று பெரிய பட்டிமன்றமே நடத்தி எங்களை டார்ச்சர் பண்ணிட்டு..."

"இப்ப என்னத்த பண்ணி வைச்சிருக்கீங்க."

"நாசத்தமா.."

மாறிமாறி இருவரும் பேச,

"இப்ப பேசிகொண்டு என்ன பண்ணலாம்னு ஏதாவது யோசனை இருந்தா சொல்லுடா, சும்மா வாராதே...."

"அங்கே விஷ்வா வேற பாவம். மூஞ்சியை மூடிட்டு அழுறான். நம்ம குடுத்த நம்பிக்கையில் அவனும் மாப்பிள்ளை மாதிரி நின்னுட்டிருந்தான்.

"இனி அவனையும் ரக்ஷிதாவையும் மறடா. இந்த மனுஷனை என்ன பண்ண?" மஹதி நெற்றியில் வழிந்த வேர்வையை கைக்குட்டையால் துடைத்தபடி சொல்ல.

ஆண்கள் இருவரும் அவனை சோதனையிட்டனர். ஏதாவது விவரம் கிடைக்காதா என்று."

ஆனால் தோல்விதான்.

"அவன் பாக்கெட்டில் இருந்த பேனாவை கவனித்தாயா?" கண்களில் பிரமையோடு மதன்.

"அவன் கட்டியிருந்த வாட்சைப் பார்த்தாயா? உதட்டைக் கடித்தபடி திருபன்.

அவர்கள் பேசிய தொனியில் லேகாவிற்கும் மஹதிக்கும் பற்றிக் கொண்டு வந்தது.

"ஆமாம். இனி அவன் கண்ணைப் பார்த்தாயா? மூக்கை கவனித்தாயா? பேண்ட்டைப் பார்த்தாயா? சட்டையை கவனித்தாயா...?ன்னு மாறி மாறி பேசுங்க.

"பைத்தியமா பிடிச்சிருக்கு உங்களுக்கு ?"




பெண்களின் கிண்டலை மதனும், திருபனும் உள்வாங்கிக் கொள்ளவேயில்லை. அவர்கள் அதிர்ந்து போயிருந்தார்கள்.

"மஹதி அவன் பெல்ட்டில் வைரம் பதித்திருக்கிறது. மாண்டிகோ பெல்ட். அது மட்டுமே இரண்டு லட்சம் இருக்கும்.

வாட்சும் 'ஒமேகா' டயலை சுற்றிலும் சின்ன வைரங்கள். அது ஒரு ஐந்து லட்சம் இருக்கும்." என்று மதன் இடிந்து போய் சொல்ல.

"எனக்கு பிரூச்சரை நினைச்சா பயமா இருக்குடா" என்று திருபன் முழிக்க.

ஹாய்யாக ஊர் சுற்றிக் கொண்டிருந்த இளைஞர்களுக்குப் பதட்டமானது.

"ஏதோ பெரிய பார்ட்டி போலயிருக்குடா?"

"இனி இவனை என்ன செய்ய?"

"ஏதாவது பெரிய பழி ஏதேனும் அவர்கள் மீது விழுந்து விடுமோ? என்ற பயமே பிரதானமாக நெஞ்சை கவ்வியது.

முடிந்த அளவு தடயங்களை அழித்து விட்டு அவனை அந்த வீட்டில் போட்டு விட்டு பறந்தனர் இளைஞர்கள்.

## 3

நாட்கள் உருண்டோடின.

நண்பர்கள் கூடினால் இன்று நினைத்தாலும் விழுந்து விழுந்து சிரிக்கும் விஷயம் அந்த கடத்தல் விவகாரம் தான்.

கீழ் தளத்திலும், முதல் தளத்திலும் வேறு வேறு கல்யாண மண்டபம் இருந்ததால், மாப்பிள்ளை குழப்பமாகி, மாறி கடத்தி வந்து, கண்டு பிடித்தவுடன் அப்படியே அவனை போட்டு விட்டு தப்பி வந்த விஷயம் எல்லோருக்கும் கேலி கூத்துதான்.

ஆனால் மஹதிக்கு அது கேலி கூத்துப் போல இல்லை.

நண்பர்களுக்கு வேண்டி சிரித்தாலும். அவன் முகம் அவள் மனதில் அழுத்தமாகப் பதிந்திருந்தது. அதில் தெரிந்த சீற்றம் அவளை பாடாய்ப் படுத்தியது.

அவன் கல்யாணம் நின்று விட்டதே?

அவர்களால் நடந்த தீமையல்லவா?

தவறே செய்யாத மனிதன் தங்களின் தவறால் தண்டிக்கப்பட்டது அநியாயமல்லவா?

அவளின் நண்பர்களுக்கோ செய்த தவறு கண்களில் படவேயில்லை. அதில் இருந்த ஹாஸ்யம்தான் பட்டது.

கல்யாண தினத்தன்று கடத்தியவனை அதே வீட்டில் விட்டுவிட்டு ஓடி வந்த பின், நெஞ்சின் குறுகுறுப்பில் முதல் தளத்தில் சென்று நடந்த கூத்தைப் பார்த்துவிட்டு தானே வந்தாள். தங்கள் தோழிக்கு எது நடக்க வேண்டும் என்று நினைத்தார்களோ அது அந்த கல்யாண பெண்ணுக்கு நிகழ்ந்தது.

மாப்பிள்ளைக்கு பெண் பிடிக்கவில்லை போலும். அவருக்கு திருமணத்தில் இஷ்டமில்லையாயிருக்கும். இந்த மாதிரி சம்பந்தம் நமக்கு எப்படி வாய்க்கும் என்று எனக்கு அப்பவே சந்தேகம்தான். ஏதோ கனவு போல தான் இருக்கு என்று காணாமல் போன மாப்பிள்ளைக்கு இருந்த மரியாதையைக் கண்டு மஹதிக்கு விசித்திரமாயிருந்தது.

கடைசியில் ஆசைப்பட்ட பெண்ணின் மாமா மகளை மணமகளாக்கினார்கள். அந்த கணம் அவள் நெஞ்சு தவித்தது. அவர்கள் மாப்பிள்ளை மனதில் அந்த பெண் இருந்திருந்தால்?

அந்த மனிதன் அந்தப் பெண்ணைக் காதலித்திருந்தால்? திருமணம் நின்று போனதற்கு எவ்வளவு தவித்திருப்பான்? காத்திருந்தவன் பொண்டாட்டியை நேற்று வந்தவன் தள்ளி போன கதையாக.

''மஹதி ரெடியா? ரக்ஷித்தா ஏன் லேட்ன்னு இதோட பத்தாவது தடவை போன் பண்ணிட்டா?'' - லேகா அவசரப்பட,

ரக்ஷிதா திருமணம் முடித்து கணவனுடன் அமெரிக்கா போனவள், வீட்டில் விசேஷம் என்று மூன்று மாதம் கழித்து சென்னை வந்திருக்கிறாள் வந்தவளுக்கு ஒரே கணவன் புராணம் தான். கணவன் அப்படி தாங்குகிறானாம். அவளை மிகப் பிடித்துப் போனதால் கல்யாணத்தை நிறுத்தும்படி அவள் மிரட்டியும் 'ரிஸ்க்' எடுத்து அவளைத் திருமணம் புரிந்தானாம். இப்போது அவளும் அவனும் ஈருடல் ஓருயிர் போலவாம்.

என்ன, காதல் கத்திரிக்காய்? என்றிருந்தது மஹதிக்கு.

விஷ்வா கொஞ்ச நாட்கள் சோகத்தில் தாடியோடு திரிந்தான். பிறகு இந்த அவசர கால யுகத்தில் விரும்பியது கிடைக்கவில்லை என்றால், கிடைத்ததை விரும்ப வேண்டும் என்று நண்பர்கள் அவனுக்கு ஒரே அட்வைஸ் மழை. வாழ்க்கையின் முடிவு காதல் இல்லை. கடைசி வரை முயற்சி பண்ணி பார்த்தார்கள். அவனுக்கு விதித்திருப்பது வேறு. விதியை வெல்ல முடியுமா?

''ஏய் மஹதி வண்டியை மெதுவா ஓட்டு. ரோடெல்லாம் ஒரே மழை தண்ணியாயிருக்கு. ஸ்கூட்டி ஸ்கிட் ஆகிடப்போகுது'' - வண்டி பறக்கும் வேகத்தில் லேகா ஜாக்கிரதை என்று குரல் கொடுக்க,

மஹதியின் மனமோ அன்று கடத்தப்பட்டவனிடம் இருந்தது.

கொஞ்சகாலமாக அவள் மறந்திருந்த அவன் முகம், குற்றம் சாட்டிய அந்த முகம் ரக்ஷிதா பேசக் கேட்டதும் நினைவு வந்துவிட அல்லாடிப் போனாள் மஹதி. மனம் எவ்வளவு அடக்கினாலும், அந்த நாள் நினைவுக்கு வந்தான் செய்தது.

''உனக்கு குற்ற நெஞ்சு குறுகுறுக்க வேண்டியதில்லையா லேகா'' மஹதி வண்டியின் பின் அமர்ந்திருந்தவளிடம் கேட்க,

''நீ ஒரு டைப். அதையே நினைக்கிட்டு. நடந்தது நடந்து போச்சு. மறந்துட்டு அடுத்த வேலையைப் பார்ப்போமா? அதை விட்டுட்டு. அவன் பாவம், இவன் பாவம்னு பேசித்திக்கிட்டு.''

''இனி மதுரைப் பக்கமே போகக்கூடாது. எங்கேயாவது அவனைப் பார்க்க நேர்ந்தால், நாம செத்தோம்.''



''ஏய் மஹதி.. பார்த்து, அடிப்பாவி.. நிறுத்து''

அதற்குள்.

அவர்கள் இருசக்கர வாகனம் நின்று கொண்டிருந்த வெண்ணிற டொயாட்டாவின் மேல் இறங்கியது. பளபளவென்று பட்டாக பளபளத்த காரின் முன்பாகம், ஹெட்லைட் எல்லாம் நசுங்கி... பாலன்ஸ் தவறி விழுந்தவர்கள் இருவரும் சமாளித்துக் கொண்டு நிமிர.

''மஹதி... என்ன காரியம் பண்ணிட்டே... சுமான் சுமான் வேகமா வண்டியை எடு பறந்திடுவோம்...

லேகா நெற்றியில் துளிர்த்த வியர்வையை துடைத்தபடி பதற்றமாகச் சொல்ல,

''அவன் 'பார்க்' பண்ணியிருக்க இடத்தைப் பாரு ரோட்டின் குறுக்கே...''

''வாதிக்கெல்லாம் பேசக்கூடாது. பார்... பார்.. வண்டியைப் பார்த்தபடி வேகமாக ஓனர் வர்றான்....''

''ம... இவன் அவன் இல்லை.''

''எவன்...?''

நிமிர்ந்து கூர்ந்து பார்த்தார்கள் பெண்களிருவரும் நடையில் வேகத்தோடு, கம்பீரமாக நெரித்த புருவத்துடன் வந்து கொண்டிருந்தவனைக் கண்டதும், அவர்களிருவரும் 'ஸாரி' கூட சொல்லாமல், மாயமாக மறைந்தனர்.

''ஒப் மாப்பிள்ளைக்கு நம்மை அடையாளம் தெரிந்திருக்குமோ?''

''உடனே பறந்துட்டோமே. அவனுக்கும் நமக்கும் தான் அவ்வளவு தூரம் இருந்ததே ? எங்கே நம்மைக் கண்டுபிடிக்க முடியும்?

''அறிவே.. நமக்கு அவனை அடையாளம் தெரியுமாம். அவனுக்குத் தெரியாதா...?''

பயந்தது அவர்கள்தான். ஆனால் யாரும் அவர்களைத் தொடரவில்லை.

கண்டு பிடிக்கவில்லை. நிம்மதி.

அன்று இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை மஹதிக்கு. முழுவதும் அவன் பற்றிய சிந்தனைதான்.

ஆசைப்பட்டு அந்தப் பெண்ணை மணக்க காத்திருந்திருப்பானோ?

கல்யாண மாப்பிள்ளையை கடத்திவிட்டு ஆராய்ச்சி வேறா? நினைத்துப் பார்த்தால் அவன் பாவம் தான்.

ஆனாலும் அவனைப் பார்த்தால் பரிதாபப்படுகிறவனைப் போலவே இருந்தது ? உட்கார்ந்திருந்த மயக்க நிலையிலும் ஒரு கைவிழுப்பில் அவனை இழுத்து உடன் கருட்டியவன் தானோ?

அன்று மயக்கம் தெளிந்து கை கால் விடுபட்டு கிடந்தவனுக்கு கல்யாணத்திற்கு ஆர்வமிருந்தால் அவனை இந்த பெண்களிருவராலும் கட்டுப்படுத்தியிருக்க முடியாது. அவனுக்குள், தீர்க்க முடியாத ஒரு கேள்விக்குறி பெரியதாக, மின்னல் விரைவென எழும்பியது. நினைக்க நினைக்க அவர்கள் இருவரும் அவனை கடத்தியது போலவே அவனுக்கு தோன்றவில்லை!

பிரம்மையா?

ஆனால் சந்தேகப்படுவதற்கு, அவளுக்குள் நிறைய விஷயங்கள் இருந்தன.

'நீ' வண்டியில் அவனை கஷ்டப்பட்டு ஏற்றும் போது அவன் அவர்களுக்கு நிறைய அசைந்து கொடுத்தான். இறங்கும்போதும் அப்படித்தான் அந்த சமயம், ஏதோ இவன் அசைவதால் கொஞ்சம் இலகுவாக இருக்கிறதே என்று எண்ணிக் கொண்டார்கள். மயக்கமுற்றவனால் எப்படி இப்படி ஒரு ஒத்துழைப்பை தர முடியும்?

ஆனால் ஏன்?

அல்லது அது அவள் பிரம்மையா?

## 4

மஹதியின் வீடு வெகு கறுகறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. வீட்டின் முதல் பேரக்குழந்தை அமெரிக்காவில் நாளை பிறக்கப்போகிறது. தாயும், தந்தையும் அமெரிக்கா செல்ல தங்களை தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

"அம்மா புலம்பாமல் போயிட்டு வாங்கம்மா. பாவம் அக்கா எத்தனை வருஷம் கழிச்ச உண்டாயிருக்கா. என்னைப்பத்தி ரொம்ப யோசிக்காதீங்க. நான் ஒன்றும் சின்னப்பிள்ளை இல்லை. என்னை பார்த்துக் கொள்ள எனக்கு தெரியும்."

"அதனாலே பயமாயிருக்கு. இந்த ஓவர் கான்பிடன்ஸ், நாடு இருக்கிற இருப்பில் ஜாக்கிரதையா இருக்கணும் மஹதி. என்னதான் பெண் விடுதலை, பெண் சுதந்திரம்னு பேசினாலும், நமக்குன்னு எல்லைகள் இருக்கு."

அதற்குள் டெலிபோன் மணி அடிக்க, ரிஸீவரை கையில் எடுத்தாள் லீலா.

அமெரிக்காவில் இருந்து மூத்த மகள் ஹரிணி.

"அம்மா நாளைக்கு ஆஸ்பிட்டலில் அட்மிட் ஆகறேன். சிசேரியன். பயமாயிருக்கும்மா. ரொம்ப பயமா இருக்கும்மா. நீங்க சீக்கிரமா வாங்க."

"ச்சீ. இந்த நேரத்தில் பயப்படக்கூடாது. எனக்கும் அப்பாவுக்கும் விசா கிடைச்சாச்சு. நாளைக்கு ஈவினிங் பிளைட். ரொம்ப டென்ஷன் பண்ணிக்காதே" என்று மூத்த மகளுக்கு அறிவுரைகளை வாரி வழங்கிவிட்டு போனை வைத்தவளுக்கு கண்களில் குளம் கட்டியது.

"ச்சோ... ரொம்ப பயப்படறாளே. அதுவும் 'டுவின்ஸ்' என்று டாக்டர் சொன்னதிலிருந்து சந்தோஷமும், ஒழுங்கா இரண்டும் பிறக்கணுமே என்று பயமும் அவளை ஆட்டிப்படைக்குது."

அம்மாவின் பர்தவிப்பின் மஹதிக்கு சிரிப்பு வந்தது.

"என்ன சிக்கலே. நான் பெத்ததில் இரண்டும் இரண்டு திசை. நீ



தைரிய சிகாமணி. அவள் கொஞ்சம் பயந்த டைப். உன்னைப்பற்றி இந்த மாதிரி கவலை எனக்கில்லை. எப்படியும் எந்த சிக்கலையும் ஹேண்டில் பண்ணிப்பேன்னு தெரியும். ஆனால் துருதுருப்பா ஒன்று கிடக்க ஒன்று செய்விபோன்னு தான் பயம். மார்கெட்டிங் ஜாப் உண்டு. வொர்க்கிங் வுமன்ஸ் ஹாஸ்டல் உண்டுன்னு இருக்கணும். ஒரு ஆறு மாசம்."

மீண்டும் போன் அடிக்க, மறுபடியும் அமெரிக்காவிலிருந்து மூத்த மகள். மீண்டும் ஏதோ பயம் என்று தாயிடம் பேசி ஆறுதல் தேட, மஹதி மெல்ல நகர்ந்து தந்தைக்கு பெட்டியை 'பேக்' செய்வதற்கு உதவினாள். மூத்த மகளுக்கு அது பிடிக்கும், இது பிடிக்கும் என்று நிறையவே வாங்கியிருந்தார் லீலா.

"இரண்டு பேருக்கும் சேர்த்து 40 கிலோ தான் பிளைட்டில் அனுமதிப்பார்கள். இது ஜாஸ்தியா இருக்குமோ?" என்று இருவரும் பெட்டிகளை மாறி மாறி தூக்கி கனத்தை பரிசோதித்தனர்.

"இருங்கப்பா வெயிட் மிஷினை எடுத்துட்டு வரேன் எடையை சரி பார்த்துடுவோம்" - என்று கொஞ்ச நேரம் வேலை அதில் கழிந்தது.

வேலையினூடே "மஹதி ஹாஸ்டல்ல நேத்துக்கூட திரும்பவும் போய் பார்த்து, அங்கே இன்சார்ஜா இருக்கவங்ககிட்டே பேசிட்டு வந்தேன். ரொம்ப சேப்தான். இருந்தாலும் ஜாக்கிரதையா இருக்கணும். பிரெண்ட்ஸ் கூட ஜாஸ்தி வச்சுக்காதே. ஏதுவாயிருந்தாலும் நம்ம லிங்கம் அங்கிள்கிட்டே கன்சல்ட் பண்ணு. இல்லே எனக்கு போன் பண்ணு" என்று பலவாறு சின்ன மகளிடம் 'ஜாக்கிரதை' மந்திரத்தை போதித்தார் அவர்.

தாயும், தந்தையும் அமெரிக்கா சென்று மாதம் ஒன்று நிமிடத்தில் நகர்ந்தது. அக்காவையும் குழந்தைகளையும் பார்க்க ஆசை கழுத்து வரையிருந்தது. பெற்றவர்களிடம் நினைப்பு அடிக்கடி வந்தாலும் ஹாஸ்டல் வாழ்க்கையிலும் ஒரு சுவாரசியம் இருக்கத்தான் செய்தது.

ஏன்? எதுக்கு? என்று கேள்வி கேட்க ஆளில்லாமல், இட்ட ஆளில்லாமல் இதுவும் ஒரு தனி சுகம் தான்.

திங்கள் முதல் வெள்ளி வரை மார்க்கெட்டிங் ஜாபில் நாட்கள் பிஸியாக ஓடின. சனி, ஞாயிறு நகர்வது தான் கஷ்டமாகிப்போனது. பி.எஸ்ஸி. முடித்ததும் மேற்படிப்பிற்காக மார்க்கெட்டிங்கில் வேலையும்

"டாக்டர் பட்டத்தை தலைவருக்கு கொடுத்தது தப்பா போச்சுனு எப்படி சொல்றே?"

"ஊசலாடிட்டு இருக்கிற கட்சியை ஆபரேஷன் செய்து பிழைக்க வைக்க போறதா அறிவித்து இருக்காரே"

-க. கோபாலன், கும்மிடிப்பூண்டி



அவளும் சேர்ந்தாள்கள். நண்பர்கள் திருவும், மதுவும் மேற்படிப்பிற்கு அமெரிக்கா சென்றுவிட எஞ்சியது அவளும், லேகாவும் சனி, ஞாயிறு இருவருமாக சினிமா, ஷாப்பிங் என்று சுற்றினார்கள். இல்லையென்றால் டி.வி. முன் கிரிக்கெட். படிப்பு கொஞ்ச நேரம்.



அன்று சனிக்கிழமை.

காலையில் இருந்தே நல்ல மழை..

மஹதிக்கு பிடித்த ஆப்பம் ''ஸ்டூ'' என்று லேகா வீட்டிலிருந்து காலையிலேயே வந்த டிபன் பாக்ஸோடு மஹதியின் அறையில் வம்படித்துக் கொண்டிருந்தாள்.

கிரிக்கெட் மேட்சும் 'டி.வி.யில் போய்க்கொண்டிருக்க கொஞ்ச நேரம் சுவாரசியமாக நேரம் அதில் சென்றது. இந்தியா, ஆஸ்திரேலியா மேட்ச். கொஞ்ச நேரத்திலேயே வரிசையாக இந்திய பேட்ஸ்மேன்கள் அவுட் ஆக, இந்திய தோல்வி உறுதிப்பட்டதுடனே மேட்ச் போர் அடிக்கத் தொடங்கியது.

அதே சமயம் அங்கிருந்த வொர்கிங் வுமன்ஸ் ஹாஸ்டல் மேட் ஒருத்தி, ''பக்கத்து பார்க்கில் 'விஜய்' யோட ஷூட்டிங் நடக்குதாம். கூடவே, த்ரிஷா, வர்றியா மஹதி'' என்றபடி வந்தாள். அறையில் லேகாவையும் பார்த்தவுடன், ''ஹாய் லேகா... நீ எப்ப வந்தே?'' என்று விசாரித்தாள். ''விஜய்கிட்டே ஆட்டோகிராப் வாங்கிக்கலாம் நல்ல சான்ஸ்'' என்றபடி.

விஜய்யின் தீவிர ரசிகையான அந்த பெண் யுத்ரா செய்தி சொல்லிவிட்டு பறந்து விட்டாள்.

''நாமும் யுத்ராவின் வழிசலை வேடிக்கை பார்க்க போவோமா?'' என்று குறும்பாக ஸ்கூட்டியில் கிளம்பினார்கள். வண்டியில் வேகமாகச் சென்றவர்கள் ஜங்ஷனில் பச்சை சிக்னலைப் பிடிக்க குறியாக மஹதி ஓட்ட.... எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்து விட்டது.

அவள் வண்டி, எதிரில் ரெட் சிக்னல் ரோட்டை கடந்த பெண்ணின் மேல் மோதி விட்டது.

கடவுளே என்று அலறி விட்டாள் மஹதி.

வண்டி சரிந்து மஹதியும், லேகாவும் ஆளுக்கொரு புறமாக விழுந்தனர்.

[illegible] சைக, கால்களில் சின்ன சிராய்ப்புடன் எழுந்த இருவரும் ஓடினார்கள். அவள் அலங்கோலமாக விழுந்து கிடக்க, மஹதி, 'லைசன்ஸ்' என்று கத்தி பேசிவிட்டாள்.

''நம்ம மேல் தப்பே இல்லை மஹதி. டென்ஷனாகாதே. அந்த அம்மா 'ரெட்' சிக்னலில் ரோட்டை கடந்து வந்து வாங்கி கட்டிக்கிட்டா.''

''[illegible] சவாரியும் வாதிக் பேச டைம் இல்லை. நல்லா [illegible].''

அதற்குள் கூட்டம் கூட அந்த பெண் முகத்தில் தண்ணீர் அடித்தது.



வேடிக்கை பார்க்க நின்ற ஆட்டோவை நிறுத்தி காலை அசைக்க முடியாமல் வலியால் துடித்த அந்த பெண்ணை தூக்கச் சொல்லி ஆட்டோவில் ஏற்றி, தானும் ஏறி அதற்குள் ஓரமாக ஸ்கூட்டியை நிப்பாட்டி விட்டு லேகாவும் ஏற பக்கத்தில் உள்ள ஹாஸ்பிடலுக்குச் சென்றார்கள்.

யசோதாவின் காலில் எலும்பு முறிவு.

ஆபரேஷன்.

ஆபரேஷன் முடிந்து ஒரு வாரம் ஹாஸ்பிடலில் இருக்க வேண்டும். அதன் பிறகு வீட்டில் நான்கு மாதம் பெட் ரெஸ்டில் இருக்க வேண்டும் என்று டாக்டர்கள் சொல்லச்சொல்ல,

அந்த பெண்மணி யசோதா சப்தமேயில்லாமல் கண்ணீர் உகுத்தாள்.

''என் கஷ்டம் யாருக்கும் வரக்கூடாது. புருஷனை இழந்த பிறகு வீட்டில் சம்பாதிக்கும் ஒரே ஜீவன் நான் மட்டும் தான். அதுவும் என் பெண் கல்யாணம் இன்னும் நான்கு மாதத்தில் நடத்தி விடலாம் என்று தேதியெல்லாம் குறித்து விட்டேன். இனி எங்கே நடக்கும். நான் வேலைக்குப் போனால் தானே பணம் அரேஞ்ச் பண்ண முடியும். ஏற்கனவே ஆபீஸில் ஒரு லட்சம் லோன் கேட்டிருந்தேன். இப்ப டாக்டர் சொன்னாப்பல நான்கு மாசம் பெட் ரெஸ்ட் என்றால் அதுவும் கிடைக்கப்போறதில்லை''- அவரின் உடம்பு வலி, வேதனை அதனால் ஏற்பட்ட ஜுரம் என்று எதைப்பற்றியும் கம்ப்ளைண்ட் பண்ணாமல் பெண் கல்யாணம் 'பெண் கல்யாணம்' என்று அதிலேயே இருந்த யசோதாவின் மேல் பெண்களிருவருக்கும் பெரும் பரிதாபம் தான் தோன்றியது.

பெண்களிருவரும் தங்களால் நேர்ந்த துன்பமல்லவா என்று வருந்துவது யசோதாவிற்கு புரிந்து, அதற்கும் சமாதானம் செய்தார்.

''உங்க மேல் தப்பில்லை, நான் தான் ஏதோ நினைப்பில்... எல்லாம் இந்த பணத்தை எப்படி புரட்டலாம் என்ற நினைப்பில் ரெட் லைட்டை பார்க்காமல் கிராஸ் பண்ணிவேன். எல்லாம் என் விதி. என் பொண்ணுக்கு எத்தனை இடம் தட்டி போய்... இந்த மாப்பிள்ளை அமைஞ்சது தெரியுமா? அவளுக்கு பிறவியிலேயே கால் ஊனம் என்பதால், எத்தனை கஷ்டங்கள், அவமானங்கள்''- என்று நொந்து சொன்னதும் அவருக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்று பெண்கள் இருவரும் நினைத்தார்கள்.

ஒரு வழியாக அவரிடம் பேசி அவரின் வீட்டு அட்ரஸ் வாங்கி யசோதாவின் நிலைமையைச் சொல்வதற்காக போய் பார்த்தால், பல சினிமாவில் பார்த்தது போல், விந்தி விந்தி நடந்தபடி ஒரு பெண்ணும் பத்து வயசு பையனும் இருந்தார்கள். யசோதாவின் விபத்தை பெரிதாகச் சொல்லாமல் பயப்படும்படியாக இல்லை, இரண்டு நாட்களில் ஹாஸ்பிட்டலில் இருந்து வந்து விடலாம் என்று சொல்லி வைத்தார்கள்.

அங்கு அவர்களிடம் பேசிக் கொண்டிருந்த சிறிது நேரத்திலேயே நெஞ்சில் பெரிய சுமை ஏறியது போல் இருந்தது. அந்த பெண் ரதி பழகுவதற்கு மிகவும் இனியவளாய் இருந்தாள்.

வீட்டில் இருந்தபடி தையல் மிஷினில் அக்கம் பக்கம், பிளவுஸ் சாரி

பாம்ஸ், சக்ரா என்று தைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறாளாம்.

அவள் செய்திருந்த ஹேண்ட் எம்ப்ராய்டரி பெட்ஷீட் என்று கொண்டு வந்து காட்டிய பெட்ஷீட்டை கண் எடுக்காமல் மஹதி பார்த்தாள். அத்தனை அழகு. பெர்பெக்ஷன்.

"இது மாதிரி ஹேண்ட் எம்பிராய்டரி புடவைகளுக்கு போடுவாயா?" கண்கள் விரிய அதன் அழகில் மயங்கிப்போய் மஹதி கேட்க,

"ம்ம்... போடுவேனே. அம்மா தீபாவளிக்கு எனக்கு எடுத்துத் தந்த காட்டன் புடவையில் போட்டேன். அப்புறம் தம்பியோட சட்டை, என்னோட பிளவுஸ், சில்ப் தலையணை உறை. எனக்கு ரொம்ப இஷ்டம். உங்களுக்கு பிடிச்சிருக்கா... இதோ வருகிறேன் என்று கையில் எதையோ எடுத்து வந்து ஆளுக்கொன்றாய் அவர்களிடம் கொடுத்தாள்.

அது இரண்டு பிளவுஸ் துணி.

பிளவுஸ் துணி என்னவோ மலிவு விலை தான். ஆனால் அதில் இருந்த எம்ப்ராய்டரி வேலை... யப்பா... என்றிருந்தது. அத்தனை அழகு.

"நாங்கள் பட்டுப்புடவை வாங்கித்தந்தால் அந்த நிறத்திற்கு ஏற்றவாறு டிசைன் போட்டு எம்ப்ராய்டரி போட்டுத்தருவாயா?" மஹதி கேட்க,

ரதி முகத்தில் புன்னகை கீற்று.

"எனக்கு ரொம்ப ஆசை. ஆனால் என்னை நம்பி பட்டுப்புடவை யார் தருவா? அம்மாகிட்டே கேட்டால், சாப்பாட்டுக்கே வழியை காணும், இதில் உன் ஆசைக்காக பட்டுப்புடவைக்கு நான் எங்கே போகட்டும்னு ரொம்ப வருத்தப்படுவாங்க."

மஹதிக்கும் லேகாவிற்கும் மூளை பரபரவென்று இயங்கியது. ஒரு புடவை எம்ப்ராய்டரி போடுவதற்கு எத்தனை நாள் பிடிக்கும், முந்தானை மட்டும் போட்டால் எத்தனை நாள் பிடிக்கும் என்று மாறி மாறி கேள்விக் கணைகளை விடுத்தார்கள்.

கொஞ்ச நேரம் இப்படிப்பட்ட பேச்சில் கழிந்து போனது.


இருவரும் கிளம்புகையில் ரதியும், அவள் தம்பி சரணும் கூடவே வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்பினார்கள். ரதி அதற்குள் பிளாஸ்கில் பால், வெந்நீர், வாழைப்பழம், பன் என்று ரெடி செய்து கூடையுடன்

"நான் சின்ன வீடு வச்சு இருக்கிற விஷயம் என் மனைவிக்கு தெரிஞ்சு போச்சு."

"அப்புறம் என்னாச்சு...?"

"இப்போ இரண்டு பக்கமும் கஷ்டப்பட வேண்டியிருக்கு ரொம்ப வருத்தப்பட்டுதான்"

-எம். வி. அருண், பரியங்குளம்.





வந்தாள்.

"அம்மாவுக்கு நிஜம்மா... ரொம்ப ஒன்றும் அடியில்லையே" என்று நூறாவது முறையாக ரதி கேட்டாள்.

அந்த ஒரு வாரமும் ஏதோ அவர்களுக்கு நேர்ந்த துன்பம் போல, ஹாஸ்பிடலுக்கும் அந்த பெண்மணி யசோதாவின் வீட்டிற்கும் மஹதியும், லேகாவும் மாறி மாறி ஓடினார்கள்.

அட்லீஸ்ட் வண்டி ஓட்டுகையில் கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்திருக்கலாம், இருந்திருந்தால் விபத்து நிகழ்ந்திருக்காது. யசோதா ஆன்ட்டி திருமணத்தை நடத்திவிருப்பார்கள்.

அவர்களால் ஒரு துன்பம், என்கிறபோது உதவிட மனம் விழைந்தது.

## 6

மஹதிக்கும், லேகாவிற்கும் அன்று முழுவதும் ஒரே யோசனை தான்.

யசோதா ஆன்ட்டி, காதலித்து மணந்ததால் சுற்றத்தின் அரவணைப்பும் இல்லாமல், கணவன் இறந்ததும் தன்னந்தனியாக யாருடைய உதவியும் இன்றி அவர் இந்த ஆறு வருடத்தை கடத்தியது. மஹதிக்கும், லேகாவுக்கும் மிகப்பெரிய விஷயமாகப்பட்டது.

அதுவும் வளமுள்ள வயசுப்பெண்?

பால் மணம் மாறாச் சிறுவன்.

அந்த கால கட்டத்தில் மிகவும் கஷ்டப்பட்டு இருப்பாரே...

அவர்களுக்கு எப்படியாவது ரதியின் திருமணத்தை குறித்த முகூர்த்தத்தில் நடத்த வேண்டும் என்று எண்ணம் தான் பெரிதும் எழுந்தது.

ஆனால் எப்படி?

அமெரிக்காவில் இருக்கும் பெற்றோரிடம் கொஞ்சம் பணம் அனுப்பித்தாருங்கள் என்று கேட்டால், பெண் என்ன காரியம் பண்ணி தொலைத்திருக்கிறாளோ? என்று அடுத்த பிளைட்டில் ஏறி, சென்னை வந்து விடுவார்கள். ஏற்கனவே அவள் மீது அலாதியான நம்பிக்கை.

வேறு என்ன செய்வது?

"லேகா உன்னால் ஏதாவது பணம் புரட்ட முடியுமா?"

"ம்க்கும்... பத்து காசுக்கும் பெறாமல் ஊரைச்சுத்தறது இப்பதான் உறுத்தறது..."

"ஏன் நம்ம வேலைக்குப்போய் சம்பாதிப்போம்."

"நம்ம மார்க்கெட்டிங் கோர்ஸ் படிப்பு என்னத்திற்கு ஆகுறது?"

"அடுத்த செமஸ்டர்லே பார்த்துக்கலாம் லேகா."

"ஆமா... நாம டிஸைட் பண்ணிட்டாப்பல ஆச்சா?" வேலையை வெள்ளித் தாம்பாளத்தில் வைச்சுத்தான் நீட்டறாங்க. அனுபவம் ஒரு மண்ணாங்கட்டி கூட கிடையாது? வேணும்னா நம்ம கடத்தல் அனுபவத்திற்கு மாபியா கேங்கில் போய் சேரலாம்" என்று லேகா

சொல்ல.

மஹதிக்கும் லேகாவிற்கும் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது.

"கிடைச்ச வேலையை செய்வோம். முடிஞ்ச அளவு பிரண்ட்ஸ் கிட்டே நிதி திரட்டுவோம். பட்டுப்புடவையில் ரதி எம்ப்ராய்டரி போட்டுக்கொடுத்தால், அதன் விலை நான்கு மடங்கு தெரியுமா லேகா? நம்ம 'செட்'லேயே ஆளுக்கொன்றாய் வாங்கி விடுவார்கள்.''

இதை அவர்கள் மறுநாள் ஹாஸ்பிட்டலில் யசோதாவிடம் சொல்ல, அவளுக்கு சில நிமிடங்கள் பேச்சே வரவில்லை.

"கல்யாணம் நீங்க நினைக்கிறபடி சின்ன விஷயமில்லை. பணம் வேண்டும். கல்யாண வேலை எடுத்துச் செய்ய ஆள் பலம் வேண்டும். ஆனால் ரொம்ப சந்தோஷம்மா. எங்களையும் மதிச்சு உதவி பண்ண...''

நா தழுதழுத்தது அவளுக்கு.

"இவ்வளவு பிரியமா, பொறுப்பா பிள்ளைகளைப் பெறவும் கொடுத்து வைச்சிருக்கணும். உங்க அம்மா, அப்பா ரொம்ப அதிர்ஷ்டம் பண்ணியவங்கம்மா...''

"ஆன்ட்டி என்னவானாலும் பரவாயில்லை. முயற்சி பண்ணுவோம். மாப்பிள்ளை வீட்டுக்காரங்ககிட்டே நெகட்டிவ்வாக ஒன்றும் பேசாதீர்கள். நீங்க குறித்த முகூர்த்தத்தில் திருமணம் நடக்கும். நடக்கணும். அந்த நம்பிக்கை எங்க இரண்டு பேர் கிட்டேயும் இருக்கு. நீங்களும் நம்புங்க ஆன்ட்டி. நம்பிக்கையும், முயற்சியும் நிச்சயம் நினைச்சது நடக்கும்.''

மஹதியும், லேகாவும், மாறி மாறிப்பேசி யசோதாவிற்கு நம்பிக்கை ஊட்டினார்கள்.

அந்த சம்பவத்திற்கு பிறகு மஹதியும், லேகாவும் ஏதோ பெரும் பொறுப்பு ஏற்றது போல் மிகவும் மெச்சூர்டாக நடந்து கொண்டார்கள்.

பணம் வரும் வழியை இருவரும் சின்சியர் ஆக அமர்ந்து யோசித்து விவாதித்தார்கள். கடைசியில் அவர்கள் திறமைக்கு மார்க்கெட்டிங்கில் தான் பணம் வரும் என்று தீர்மானித்தார்கள். செல்போன் கம்பெனி, இன்டர்வ்யூக்குச் சென்றார்கள். அவர்கள் துனி நாக்கு ஆங்கிலமும், அழகும் பேசும் முறையும் 'டார்கெட்' கொடுத்து வேலையும் கிடைத்தது. ஆனால் வேலை அத்தனை சுலபமும் இல்லை. மிகவும் கடினமாக இருந்தது. பணமும் இவர்கள் நினைத்த மாதிரி குவியவும் இல்லை. கல்லூரி தோழர் தோழியரிடம் விஷயம் சொல்லி பணம் புரட்டியது கொஞ்சம் தேறியது. கிடைத்த பணத்தில் நான்கு பிளைனின் பட்டுப்புடவைகள் வாங்கி ரதியிடம் எம்ப்ராய்டரி பண்ணு என்று கொடுத்தார்கள்.

"ஒரு மாசம் முடிஞ்சடுச்சப்பா. நம்ம இதுவரை சேர்த்தது அப்படி ஒன்றும் பெரிய அமவுண்ட் கிடையாது. இன்னும் மூன்று மாசம் இருக்குதுதான். ஆனால் நம்மால் முடியுமான்னு சந்தேகமா இருக்கு.'' மஹதி சொல்ல,

"மஹதி எங்க வீட்டுலே அம்மாவுக்கு ஒரே சந்தோஷம். ஏதோ ஊர் சுத்திட்டு இருந்த பெண் உருப்படியா காரியம் பண்றான்னு.



அவங்களும் நம்ம 'வென்சர்'க்கு லேகா சொல்ல, மஹதியின் முகத்தில் நிறைவான புன்சிரிப்பு படர்ந்தது.

இடையிடையே யசோதாவின் நலம் விசாரித்தார்கள்.

நாட்கள் பறந்தன.

ரதி எம்ப்ராய்டரி செய்த புடவை நான்கையும் நல்ல விலைக்கு விற்றார்கள். இவர்களின் வியாபாரத் திறமையில், முன்பணம் கிடைத்து மேலும் நான்கு புடவை செய்ய ஆர்டரும் வந்தது. இவர்கள் பண்ணுகிற ஸ்டெயிலும், பந்தாவிலும், சொன்ன விலைக்கு புடவைகள் விற்கப்பட்டன. அது கொஞ்சம் அமவுண்ட் தேறியது.

புடவை விற்ற விலையை ரதியிடம் சொன்ன போது, அவள் முகத்தில் இதுவரை தெரியாத தன்னம்பிக்கை ஒளிர்ந்தது. திறமைகள் எல்லோரிடமும் இருக்கிறது. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு திறமை, அதை சரியாக அடையாளம் கண்டு கொண்டு அதில் முழு கவனத்தையும் செலுத்தினால், வெற்றி தான். கைமேல் பலன். முயற்சி, கடின உழைப்பு, தன்னம்பிக்கை ஒரு நாளும் தோற்றதில்லையே.

பணம் சேர சேர யசோதாவிடம் கொடுத்தார்கள்.

யசோதாவிற்கு நம்பத்தான் முடியவில்லை. மஹதியையும், லேகாவையும் பார்த்தாலே கண்களில் கண்ணீர் குளமாக கட்டி விடுகிறது.

இந்த காலத்தில் இப்படியும் பெண்களா? அதுவும் முன் பின் தெரியாத அவளுக்காக?

கனவு போல இருந்தது.

## 7

டி.வி. பார்த்தபடி தூங்கிவிட்ட மஹதி கதவு தட்டப்படும் ஓசையில் கண்களை மலர்த்தினாள். கண்கள் கடிகாரத்தில் நிலைத்தது. மணி இரவு பத்தரை. இந்த நேரத்தில் யார்? 'வெடுக்'கென்று எழும்பி கதவைத் திறந்தாள் மஹதி.

பக்கத்து ரூம் நிலா. கண்கள் செக்கச்சிவந்து, தலை கலைந்து, தள்ளாட்டமான நடையுடன், என்ன ஆச்சு இவளுக்கு. இந்த ஹாஸ்டலிலேயே பயங்கர பந்தாவாக டிரஸ் பண்ணும் பெரிய கம்பெனியில் வேலையில் வேறு இருக்கும் பந்தாவான நிலா நின்றிருந்த கோலம் மஹதிக்கு பரிதாபத்தைக் கொடுத்தது. 'நல்ல ஜுரம் போல அவளுக்கு' மனசு குறிப்பெடுத்துக் கொண்டது.

''என்ன ஆச்சு? ஏதாவது உதவி வேண்டுமா? டாக்டரிடம் போகணுமா?'' கரிசனத்துடன் மஹதி கேட்க,

''மருந்தெல்லாம் சாப்பிட்டாச்சு. வைரல் பீவர். சாயங்காலத்திலேயிருந்து மூட்டுக்கு மூட்டு வலிக்கிறது. நகரவே கஷ்டமாயிருக்கு. இன்னும் ஒரு வாரம் இருக்குமாம்'' என்று பலகீனமான குரலில் பேசிய நிலா தொடர்ந்தாள்.

"நாளை என் ஆபீஸ் வேலை விஷயமாக நான் டெல்லி போகணும். என்கிட்டே மிக மிக முக்கியமான ஆபீஸ் பைல் இருக்கிறது. ரொம்ப கான்பிடென்ஷியல். அதைக் கொண்டு போய் என்னுடைய பாஸிடம் சேர்க்க வேண்டும். கொரியர்லே அனுப்புவதற்கு பாதுகாப்பும் இல்லை. நாளைக் காலை பத்து மணிக்கு மீட்டிங். அதற்கு முன் பைலை ஆபீஸில் சேர்க்க வேண்டும்."

"அடடா இப்போ என்ன பண்ணப் போறீங்க. பைல் கரெக்ட் டைம் போய் சேராட்டி ப்ராப்ளமா?"

"ம்ம் மஹதி. உன் கிட்ட உதவி நாடித்தான் வந்திருக்கேன். ப்ளீஸ் சின்னு சொல்லு மஹதி."

"முதல்ல உள்ளே வாங்க" என்று நாற்காலி எடுத்துப் போட்டு நிலாவை அமரச் சொன்னாள்.

"என்னால் முடிஞ்ச உதவி என்றால், ஐ வில் டூ. நோ ப்ராப்ளம் சொல்லுங்க" என்று ஊக்கினாள் மஹதி.

"எனக்கு பதிலாக இந்த பைலை டில்லியில் என்னோட பாஸிடம் கொடுத்துவிட்டு வரணும். ப்ளைட் டிக்கெட் என்கிட்டே இருக்கு. நாளை காலை ஆறு மணிக்கு. அதே நாள் ஈவினிங் 4 மணிக்கு ப்ளைட்டில் ரிட்டேர்ன் ஆகிவிடலாம். ப்ளீஸ் மஹதி. எனக்கு வேறு யாரையும் நம்ப முடியவில்லை."

என்று அவள் பேசி முடிப்பதற்குள் தளர்ந்து போய் விட்டாள்.

"அட... இவ்வளவு தானா? ஒருத்தருக்கொருத்தர் கஷ்டம் என்றால் இந்த உதவிகூட செய்ய மாட்டார்களா நிலா. இதற்கு ஏன் இவ்வளவு யோசிக்கணும்" மஹதியின் பேச்சில் நிலாவின் முகத்தில் நிம்மதி படர்ந்தது.

அவளுடன் பக்கத்து அறைக்கு சென்று, டெல்லி சென்றவுடன் எங்கு? எப்படி? எங்கே? அவளுடைய பாஸை பார்ப்பது என்ற விவரங்களை சேகரித்துக் கொண்டு, அந்த கான்பிடென்ஷியல் பைல்லையும் வாங்கிக் கொண்டு வெகு பத்திரமாக தன் அறை கப்போர்டில் வைத்தாள் மஹதி. டில்லியில் டாக்ஸிக்கு, சாப்பாட்டிற்கு எமர்ஜென்ஸிக்கு என்று வேலைக்கான பேட்டா மணிபோல் ஒரு தொகையும் நிலா கொடுத்துவிட, பணம் பற்றி கவலை சற்று தீர்ந்தது.

"நாம் உடனே கல்யாணம் பண்ணிக்கணும்னு சொன்னீங்களே ஏன்?"

"நம்ம காதலை என் கணவர் ஆதரிக்கிறார்! அவர் மனசு மாறிடக்கூடாதில்ல."





மறுநாள் காலை டில்லி ப்ளைட்டில் பறந்தாள் மஹதி.

நிலாவிற்கு உதவுவதற்காக போனாலும் பைலை பொறுப்பாக உரியவரிடம் கொடுத்தவுடன், அவள் வேலை முடிந்து விட்டதே. பின் அவள் அவளுக்கென்று சில பல மணி நேரங்கள் டெல்லியில் ஷாப்பிங் போவதற்கும் நேரம் இருக்கும். யசோதா ஆன்ட்டி பொண்ணுக்காக நல்லதாகவும், விலை மலிவாகவும் புடவை நான்கு எடுக்கவும் பணம் வைத்திருந்தாள்.

இந்தியாவின் நகரங்கள் பலவற்றுக்கும் ஊர் சுற்றிப் பார்க்க மஹதி இதற்கு முன் சென்றிருந்தாலும் டெல்லி இதுதான் முதல் முறை.

அதுவும், வேறு ஊருக்கு தன்னந் தனியாக பயணிப்பது இதுதான் முதல் முறை. த்ரில்லிங்காக இருந்தது அவளுக்கு.

டெல்லியில் வேலை முடித்து சென்னை வந்தவுடன், அமெரிக்காவில் இருக்கும் தாயிடம் இது பற்றி பேசிக் கொள்ளலாம் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள். இப்போதே சொன்னால், என்னவோ ஏதோ என்று பயப்படுவார்கள். தேவையில்லாமல் அவர்களை ஏன் கலவரப்படுத்த வேண்டும்?

இப்படி அவள் எண்ணங்கள் பல திசைகளிலும் சிறகடித்துப் பறந்தது.

ஆனால் டெல்லியில் அவள் சந்திக்கப் போகும் நபர் யாரென்று மட்டும் மாய சக்தியில் முன்பே அறிந்திருந்தால், இந்த பயணத்திற்கு மஹதி ஒத்துக் கொண்டிருக்கவே மாட்டாளே?!




நிலா கொடுத்த அட்ரெஸ் ஒன்றும் கண்டுபிடிப்பதற்கு கடினமானது இல்லை. டில்லியில் உள்ள பெரிய நட்சத்திர ஹோட்டல். ஏற்கனவே நிலா ஏர்போர்ட்டிலிருந்து பிக்-அப், டிராப் என்று யாரும் கிடையாது. நீயாகவே தான் டாக்ஸி பிடித்துப் போக வேண்டும் என்று சொல்லியிருந்தாள். அதுவும் வசதியாக போனது.

ப்ரீபெய்டு டாக்ஸியில் ஹோட்டல் பெயரையும் அட்ரஸையும் சொன்னதும், சிரமமின்றி ஹோட்டலில் இறக்கி விடப்பட்டாள். அதுதான் பாதுகாப்பு என்று நிலா பலமுறை சொல்லி அனுப்பினாள்.

ரிசப்ஷனில் போய் ரூம் நம்பரும், யுவன் என்று சந்திக்கப் போகும் நபரின் பெயரையும் சொன்னதும், இண்டர்காம் மூலம் பேசி, அவனிடம் அனுமதி பெற்று, அரை மணி நேரம் கழித்துப் போகச் சொன்னார். அதுவரை லாபியில் வெயிட் பண்ணுங்க என்று அழகாகப் பேசினாள் வரவேற்பு பெண்.

லாபியில் அமர்ந்து அங்கு விசேஷமாக வடிவமைக்கப்பட்ட பூ அலங்காரத்தை ரசித்துப் பார்த்தாள். பின் அலங்காரத்திற்காக வைக்கப்பட்டிருந்த கலைப் பொருட்களை வியந்து பார்த்தாள்.

கொள்ளை அழகு. நேரம் படு வேகமாகச் சென்றது. வரவேற்பு பெண் குறிப்பிட்ட நேரமும் நெருங்க, அவள் சொன்னபடி பதினோராம் மாடியில் இருந்த அவன் அறைக்கு லிப்டில் சென்றாள்.

கதவை தட்டி 'கம்-இன்' என்ற குரல் கேட்டவுடன், முகத்தில் மிதமான புன்னகையுடன் "ஹலோ சார்" என்று ஸ்டைலாக சொல்லியபடி நுழைந்தாள் மஹதி.

நுழைந்தவளின் புன்னகை அப்படியே உறைந்து போனது.

அவன்!?

கடத்தப்பட்டவன்?

அங்கே உட்கார்ந்து தீவிரமாக 'லேப் டாப்'பில் கண்களை ஓட்டிக் கொண்டிருந்தான். அவளின் அதிர்ச்சிக்கு வார்த்தைகளே இல்லை.

இனி என்ன செய்வது என்று வேகமாக சிந்தித்தாள். அவன் வேலையும் மும்முரத்தில் நிமிர்ந்து அவளைப் பார்க்கவேயில்லை. வந்த சுவடே தெரியாமல் ஓடி விடலாம் என்ற நினைப்புடன் பின் பக்கமாக ஓசையில்லாமல் காலை எட்டி போட்டு நகர, சடாரென்று அவன் கண்கள் அவளை நோக்கிப் பாய்ந்தது. அவளைக் கண்டதும் இடுங்கி விரிந்த அவன் கண்கள் சொன்ன செய்தி அவளுக்கு சத்தியமாகப் புரியவில்லை.

அவளை அடையாளம் கண்டு கொண்டானா? இல்லையா? என்று அவளால் கணிக்கவே முடியவில்லை.

சில விநாடிகள் அதிர்ச்சியில் மலங்க மலங்க விழித்தவள் அந்த விநாடி அதிர்ச்சியில் இருந்து மீள, மூளை இரட்டிப்பு சக்தியுடன் வேலை செய்தது.

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பது போல, அதிர்ச்சியில் ஒன்றும் உளறவில்லையே என்று உள்ளூர சந்தோஷம் மேலிட்டது. பின்னே மூன்று மாதங்களுக்கு முன்பு பார்த்தது. அதுவும் அரையும் குறையுமாகப் பார்த்தது. பாதி நேரமும் முகமூடி வேறு அணிந்திருந்தாள்.

எங்கே ஞாபகமிருக்க முடியும்?

முடியவே முடியாது.

கார் இடித்த அன்று தூரத்தில் நின்றான்.

அன்றும் நொடியில் பறந்து விட்டார்களே, சான்ஸே இல்லை. கண்டிப்பாக அவனுக்கு அவளை அடையாளம் தெரியாது என்று உள் மனது வாதிட்டது அது தந்த தைரியத்துடன்.

"சார் ஐம் மஹதி. மிக முக்கியமான பைல் உங்களிடம் சேர்த்து விடும்படி மிஸ் நிலா சொன்னார்கள். அவர்களுக்கு உடல் நலக் குறைவால் வரமுடியாது போயிற்று." என்று பைலை அவனிடம் நீட்டினாள்.

அவள் உள் மனது குழப்பங்களையும், பதட்டத்தையும் அவளின் முகம் கொஞ்சமும் காட்டவில்லை. கடவுளே... தன்னை அடையாளம் கண்டு பிடித்து விடக் கூடாது என்று உள் மனது மறுபடி மறுபடி [illegible]ட்டது.

இமைக்காது அவன் அவளை கண்களை ஊடுருவப் பார்த்த அந்த நொடி... அவளுக்கு பல யுகமாகப் பட்டது. மார்பு படபடவென்று



வேகமெடுத்தது.

தொண்டையை கனைத்தபடி "ஓ... தட்ஸ் குட். நிலாவிடம் அந்த சின்சியாரிட்டிதான் எனக்குப் பிடிக்கும். தாங்க்ஸ் பார் யூ" என்று கை நீட்ட, மெல்ல நகர்ந்து அவன் அமர்ந்திருந்த சோபா அருகில் சென்று நீட்டிய அவன் கையில் பவ்யமாக பைலை கொடுத்தாள். உடனே அவன் பைலை பிரித்து கண்களை அதில் பதிக்க,

மஹதியின் உள்ளம் சீட்டியடித்தது.

துடிக்க மறந்து இருந்த இதயம் பலத்த நிம்மதியோடு சீராகத் துடிக்க தொடங்க,

கண்டு பிடிக்கவில்லை!

அவன் அவளை கண்டு கொள்ளவில்லை?!

எத்தனை பெரிய நிம்மதி? சில நிமிடங்கள் அவள் மனம் பட்ட கஷ்டமும், அதற்கு அவசியம் துளிகூட கிடையாது என்று புரிந்த அபார நிம்மதியில், சந்தோஷத்தில், அவளுக்கு நடனமாட வேண்டும் போல கால்கள் பரபரத்தது. மென்டல் ரிலீபில் உதட்டோரம் சிரிப்பில் துடித்தது. அவனிடம் பைலைக் கொடுத்தவுடன் 'வேலையும் முடிந்து விட்டபடியால்,

"கேன் ஐ டேக் லீவ் சார்?" - என்று மேலும் பவ்யமாக அவள் செல்லுவதற்கு அனுமதி கேட்க,

அவனோ 'ம்ம்ம்...'' என்று பைலை ஆராய்ந்த கண்களை உயர்த்தாமல் சொல்ல, ஆஹா போக அனுமதியும் கொடுத்து விட்டானே. விடுவிக்கப்பட்ட நிம்மதியில் ஓட நினைத்த கால்களை அடக்கியபடி, நிதானம் காட்டி, திரும்பி வாயில் புறமாக நகர்ந்தாள் மஹதி.

ஆனால் திடீரென்று,

"நிலாவை கடத்தி வைத்து இந்தப் பைலை பிடுங்கி வரவில்லையே..." - என்று பின்புறம் இருந்து வந்த அவனின் கம்பீரமான பிசிறு தட்டாத ஆண்மை குரல் கேட்க, மஹதியின் இதயம் துடிப்பதை சில நொடிகள் நிறுத்தியது. கால்கள் நிற்பதற்குரிய தெம்பை இழந்தன.

கண்டு கொண்டிருக்கிறான்.

கடவுளே?

நெஞ்சை பிடித்துக் கொண்டு சரேலென திரும்பி கண்கள் விரியப் பார்த்தாள். அவளின் அழகிய கண்கள் முழுவதும் பயம் வியாபித்திருந்தது.

மஹதிக்கு மட்டும் மாயமாய் மறைந்து போகும் சக்தி இருந்திருந்தால், உடனே மறைந்திருப்பாள்.

நெஞ்சு, தன் கட்டளை உடைத்துக் கொண்டு விழுந்து விடுமோ என்று எண்ணுமளவுக்கு குதித்தது போச்சு... நன்றாக மாட்டிக் கொண்டேன்.

சார் தெரியாமல் செய்து விட்டேன் என்று அன்றைய கடத்தல் வேலைக்கு மன்னிப்பு கேட்கும்படியான காரியத்தையா பண்ணியிருக்கிறாள்?

இந்த எதிர்பாராத சந்திப்பில் என்ன செய்ய என்று உள்ளூர உதைப்பாக இருந்தது. ஆனாலும் மனதை கடினப்பட்டு

தடைப்படுத்தினாள். அவள் அப்படி மன்னிப்பே கேட்கவில்லை என்றாலும் இவனால் அவளை என்ன செய்ய முடியும்? நடந்தது நடந்துவிட்டது. அவன் திருமணம் தடைப்பட வேண்டும் என்று விதி?! அதை செயலாற்ற அந்த விதியால் விதிக்கப்பட்டவர்கள் அவளின் தோழர் தோழியர். இதில் அவளால் என்ன செய்ய முடியும்? இது அவன் வாங்கி வந்த வரம்! மனம் கொஞ்சம் பித்துப் பிடித்து தாறுமாறாக சிந்திக்க...

தன்னை உறுப்பியபடி தடுங்கினை உதட்டைத் திறந்து.

''ஐம் ஸாரி சார்'' என்று அன்றைய கடத்தலுக்கு ஸாரி சொல்ல...


வேறு எதை சொல்ல முடியும் அவளால்.

அவன் கண்களில் 'சட்' என்று தெரிந்த வர்ண ஜாலங்களில் மஹதி பயந்து போனாள். ஏற்கனவே குற்ற குறுகுறுப்பு. இப்போது தனியறையில் அவனிடம் அகப்பட்டு கொண்டது வேறு அவனிடம் பீதியைக் கிளப்பியது.

''எவ்வளவு பணம் வாங்கினாய்? ஆண்கள் கை கூலிகளாய் அடியாட்களாயிருந்ததை பார்த்திருக்கிறேன். ஆனால் பெண்கள்... உலக வரலாற்றிலேயே முதல் முறையாக... ம் சொல்லு எவ்வளவு வாங்கினாய்? யாரிடம் வாங்கினாய்? ஏன்? எதற்காக? இப்போது நிலாவை என்ன செய்தாய்? தொடர்ந்து என்னை இன்னும் என்னவெல்லாம் செய்யச் சொல்லியிருக்கிறார்கள்...'' அவன் அவ்வளவு தீவிரமாகி, அவள் புறமாக நடந்து வந்து நின்று பெரும் பழியை அவள்மேல் சுமத்த, தன்னை அவனிடம் விளக்கிவிடும் முயற்சியாக, அவன் நினைப்பதுபோல் இது பெரிய திட்டமிட்ட சதியில்லை என்பதை, அவனை தவறுதலாகக் கடத்தியதை, தோழியின் காதலை வெற்றியடையச் செய்வதாக மாப்பிள்ளையைக் கடத்த திட்டமிட்டதை பெரும் தவறுதலாக இரண்டு கல்யாண மண்டபம் உள்ள குழப்பத்தில், 'மாப்பிள்ளை' என்று மாறி அவனை அடையாளம் கண்டு கொண்டதை, மாப்பிள்ளையை மாற்றி கடத்தி விட்டதை ஒன்று விடாமல் கூறி மன்னிப்பை கோரி அவள் தெளிவாக விளக்கமாகச் சொல்லச் சொல்ல அவன் கதை கேட்பதுபோல் சுவாரசியமாக கேட்டுக் கொண்டிருந்தான். அவனின் ஒற்றைப் புருவம் வசீகரமாக ஏறி ஏறி இறங்கியது.

அவள் சொன்னது எல்லாமே அவனுக்குத் தெரிந்த விஷயம்தான். மயக்கம் தெளிந்தவுடன்... ஆட்கள் அமைத்து இரண்டே நாட்களில்

''நீ என்னடி சொன்னே...
[illegible]





மொத்த விவரத்தையும் அறிந்தவன்.

அந்த அரைகுறை மயக்க நிலையிலும் பாதி புரிந்த விஷயம்.

''தவறு செய்தவர்கள் தண்டிக்கபடாமல் இருந்ததேயில்லை'' கூர்மையான அவன் வார்த்தைகளில் மஹதிக்கு 'திக்' என்றிருந்தது.

ஏற்கனவே, குற்றவுணர்வு.

அதிலும் இப்படி எதிர்பாராமல் வகையாய் அவனிடம் மாட்டிக் கொண்டது வேறு... அவளை படபடக்க வைத்தது.

இனி என்ன செய்யப் போகிறான்?

போலீசில் சொல்வானா?

பெரும் பணக்காரனை கடத்திய கடத்தல்காரர்கள் என்று இவர்களின் மொத்த குரூப்பும் 'நியூஸ் பேப்பரில்' சிரிப்பாய் சிரிக்கப் போகிறார்களா?

கோர்வையாக ஒன்றையுமே அவளால் சிந்திக்க முடியவில்லை.

## 9

அதே சமயம் புயலைப் போல ஒருவன் உள்ளே நுழைந்து, யுவனை நெஞ்சோடு கட்டி அணைத்தான். தஸ் புஸ் என்று ஆங்கிலத்தில் பிளந்து கட்டிக் கொண்டிருந்த புதியவன் ''ஜஸ்ட் வெயிட்டிங் டு மீட் யுவர் வொய்ப்'' என்று முடித்துவிட்டு, அப்போதுதான் உணர்ந்தது போல் மஹதியை மேலும் கீழுமாக ஆர்வமாக அவன் கண்கள் ஆராய்ந்தது. பின் முகம் முழுவதும் சந்தோஷமாக,

''கங்கிராஜுலேஷன்'' - என்று அவள் முன் கைகளை நீட்ட, மஹதி இது என்ன விளையாட்டு என்பது போல் கால்களை பின்னுக் கிழுத்தாள். உடனே புதியவன் புருவத்தை உயர்த்தி நண்பனைப் பார்க்க,

யுவனின் கண்களில் மின்னல் வெட்டியது போன்ற வெளிச்சம் மின்னியது.

அவன் கண்களில் புரிந்து கொள்ள முடியாத விதமான பாவனையுடன்,

''அவள் கொஞ்சம் ஷை டைப்'' - என்றபடி அவளின் அருகில் நெருக்கமாக வந்து நின்று தோளில் கை போட்டுக் கொண்டு சொல்ல,

ஏற்கனவே அதிர்ச்சியில் இருந்தவளுக்கு, அவனின் திடீர் செய்கையும், பேச்சும் மூளையை கலங்கடித்தது.

ஆனாலும் தன்னிச்சை நிகழ்ச்சியாக அந்நிய ஆடவனின் தீண்டலில் அவள் கைகள் பட்டென்று அவனின் கையை தட்டிவிட்டு, ''வாட்... டீ... டூ திங்க்...'' என்று கோபத்தில் குரல் கொடுத்தவளை கண்டும் காணாதது போல்,

''வாடா அவ ரெடியாகட்டும். நாம கீழே போய் ரிசப்ஷனில் அமர்ந்து பேசலாம். ஏற்கனவே மேடம்... நல்ல மூடில் இல்லை. வா... வா...'' என்று நண்பனை இழுத்துக் கொண்டு அதே சமயம் அவளிடம் திரும்பி,

''டோன்ட் டிஸ்டர்ப் கார்ட் வெளியே தொங்கப் போட்டுட்டேன்.

"அதான் எப்பவுமே கதவில் தொங்குதே டார்லிங்..." என்று சொல்லி அவளைப் பார்த்து கண் அடித்த போதுதான் நிலைமையின் பயங்கரம் அவளுக்கு உறைத்தது.

"கதவையும் வெளியே நான் 'லாக்' பண்ணிட்டு போறேன். நீ நிம்மதியா [illegible] பண்ணு" என்று கதவை படால் என்று அவள் பேசும் முன் இழுத்து சாத்த கதவை.

மது கண்கள் விரியப் பார்த்தாள். குற்ற மனப்பான்மை காரணமாக வாயடைத்து நின்றவளுக்கு உணர்வு வந்தது. உணர்வுடன் கூடவே நிகழ்காலமும், அவன் அவளை ரூமில் பூட்டி வைத்து விட்டுப் போனதும், நண்பனிடம் தன்னைப் பற்றி பேசி விட்டுப் போனதும், அணைப்பது போல் நின்றதும், அனைத்தும் பயங்கரமாக உரைத்தது.

சில நிமிடங்களில் நடந்த நிகழ்வுகளில் செய்வதறியாது திகைத்துப் போனாள்.

ஆகா... அவள் நிலைமை வலையில் தானாகவே விழுந்த மானாக அல்லவா மாறிவிட்டது.

அவள் தோழியருடன் செய்த காரியத்தின் வீரியம் அறிந்தவளாயிற்றே? செய்த தப்பிற்கு தண்டனை அனுபவிக்காமல் போக முடியுமா? ஆனால்... தப்பு அவள் மட்டுமா செய்தாள்? ஐந்து பேர் கூட்டாக நிகழ்த்திய சம்பவமல்லவா? ஆனால் 'மாட்டியது அவள் மட்டும்தானே? மன்னிப்பு கேட்டு, முழு கதையும்தான் அவனிடம் சொல்லி விட்டாளே. இப்பொழுது என்ன செய்யப் போகிறான்? நண்பனிடம், மதுவை தன்னுடைய மனைவி என்று அறிமுகப்படுத்தியது அவளுக்குப் புரிந்தது.

ஆனால் ஏன்?

எதற்காக இந்த மடத்தனம்?

சரி என்னவும் செய்து தொலைகிறான்.

முதலில் அவன் வருவதற்கு முன் இந்த இடத்தை விட்டுப் போக வேண்டும்.

மற்றவர்களுக்காக உதவி செய்தே மாட்டிக் கொள்கிறேன் என்று அவள் மனது சலிக்காமல் இல்லை.

முதலில் ரக்ஷித்தாவிற்காக?


இப்பொழுது நீலாவினால்.

அவளுக்கு ஜுரம், உடம்பு சரியில்லை என்றால் இவளுக்கு என்ன வந்தது. தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருந்தால் அவளுக்கு இந்த ஆபத்து நிகழ்ந்திருக்குமா?

மது தன் போக்கில் பலவற்றையும் சிந்தித்துக் கொண்டிருந்தாலும், ரூமின் கதவைத் திறக்க முயற்சித்தாள் அவள். கதவின் 'லாக்' முழு அளவில் வேலை செய்தது பைவ் ஸ்டார் ஹோட்டல் 'லாக்' பின் எப்படி இருக்கும்?

மேலே என்ன செய்ய வேண்டும் என்று மூளை பரபரவென்று யோசித்தது. இப் மாப்பிள்ளை எப்படிப்பட்டவன், நல்லவனா? கெட்டவனா? என்று அவளுக்கு ஒன்றும் புரிபடவில்லை தனியறையில்





மனைவி என்று சொல்லி அடைத்து வைத்து விட்டுப் போனவனைப் பற்றி நல்ல அபிப்ராயம் ஒன்றும் அவள் மனதில் எழவில்லை.

பால்கனியும் இல்லை. இருந்திருந்தால், பெட்ஷீட், துப்பட்டா என்று தொங்கிக் கொண்டாவது இறங்கியிருப்பாள். கண்கள் வேறு வழிக்காக அறையை சுற்றியது. டெலிபோன் இருந்தது. வேகமாக அருகில் சென்று அதில் இருந்த எண்களில் கண்களை ஓட விட்டாள். ரிசப்ஷன் என் எட்டு என்று கண்களில் படவே, அந்த நம்பரை அமுக்கினாள். மறு பக்கத்தில் பதிலை உணர்ந்ததும்,

''என்னுடைய ரூம் 'லாக்' ஜாம் ஆகிவிட்டது போல் இருக்கிறது. என்னால் உள்ளிருந்து கதவைத் திறக்க முடியவில்லை. குட் யூ ஹெல்ப்? கேன் யூ சென்ட் சம் ஒன்?'' என்று மஹதி இனிமையான குரலில் கேட்க,

ரூம் நம்பர் எல்லாம் அந்த பெண்ணின் காலர் ஐடி போனில் வந்திருக்க வேண்டும் என்று தொடர்ந்த அவள் கேட்ட கேள்வியில் தெரிந்தது.

''நீங்கள் மிஸஸ் புவன்?''

என்ன பதில் சொல்வாள் மஹதி. ஆனால் முதலில் இந்த அறையை விட்டு விலகவில்லை என்றால் ஆபத்து என்று மனதில் கொண்டு,

''ஆமாம்'' என்று சொல்லி வைத்தாள்.

அடுத்த நிமிடத்தில் கதவு வெளிப்புறமாக திறக்கும் சப்தம் கேட்க, மஹதிக்கு அளவில்லாத நிம்மதி.

ஆனால் அவளின் நிம்மதிக்கு ஆயுள் வெகு சொற்ப வினாடிகள்தான்.

கதவைத் திறந்தவன் வெளியே காரிடாரில் மீண்டும் அவனும், நண்பனும் ரூமிற்கு வருவது தெரிந்து 'பக்' என்றிருந்தது.

செய்த முயற்சியும் வீண்.

ஆனால் அந்த முயற்சியும் அவனுக்கு ஆதாரமாகவல்லவா போய் விட்டது.

''சார், நீங்கள் வெளியே பூட்டிப் போனது தெரியாமல், உங்கள் வொய்ப் கதவு 'ஜாம்' ஆகிவிட்டது என்று போன் பண்ணினார்கள்.''

''ஓ... சாரி... பார்த்துக்கிறேன்'' என்றவன் திரும்பி நண்பனிடம், ''ஓகே ஜான் நீ ரெஸ்டாரெண்டில் வெயிட் பண்ணு. நான் இவளுடன் பைவ் மினிட்ஸ்லே வரேன்'' என்றான்.

உள்ளே வந்தவன் அறைக் கதவை சட்டென்று மூடி கதவின் மேல் சாய்ந்தபடி கைகளைக் கட்டிக் கொண்டு நிதானமாக அவளை

''சிரிச்சுகிட்டே இருந்தா எந்த வியாதியும் வராதாம்''

''கல்யாணம் பண்ணாம வாழ்க்கையில எப்படி இருக்க முடியும்?''

—மாயா. ஆறுமுகம், வழுதூர்.





ஆராய்ந்தான். அவள் சொல்லிய கடத்தல் கதை உண்மை என்று அவனுக்குத் தெரியும். அரை மயக்க நிலையிலேயே அவனுக்குப் புரிந்த விஷயம்தான். ஆனால் மீண்டும் மீண்டும் அவளுடைய அரிய முகம், அவனுக்கு கொஞ்சம் திகைப்பாக இருந்தது. இந்த அறிமுகம் எதற்காக நிகழ்கிறது என்று உள்ளுக்குள் சற்று மலைப்பாக இருந்தது.

மஹதிக்கோ, பயம் என்ற உணர்வு கோபத்திற்கு இடம் பெயர்ந்து இருந்தது. அவன் கதவு மேல் சாய்ந்து நின்றிருந்த கோலம் கண்டு சினம் மிகுந்தது. இவள் இப்பொழுது கோபப்பட்டு என்ன சாதிக்கப் போகிறாள்?

கண்களை மூடி சில நொடிகள் தன்னை நிதானப்படுத்தினாள். இவனிடம் கத்தி ஒரு பிரயோஜனமும் இருக்கப் போவதில்லை.' சொல்லப் போனால், அவளின் அருமை கல்யாணம் நின்று போனதின் காரண கர்த்தாவைக் கொன்றாலும் தகும் என்றுதான் நினைக்கத் தோன்றும்... மீண்டும் ஒருவித குற்ற உணர்வு அவனுள் தலை தூக்கியது. ஒரு வேளை அவள் அந்தப் பெண்ணை காதலித்திருந்தால்... பாவம்தான். கோப வார்த்தைகள் பேச துடித்த உதடு, அடங்கி,

''சரி சொல்லுங்கள். இனி என்னை என்ன செய்வதாக உத்தேசம்'' என்று மெல்ல வார்த்தைகளைக் கோர்த்தாள்.

அவனுக்கு உதடு சிரிப்பில் துடித்தது. அவளின் நிதானம் அவனுக்குப் பிடித்தது. அது மட்டுமா? அவளின் சின்னச் சின்ன அசைவுகள், செய்கைகள், அந்த நிலையிலும் அவள் நின்றிருந்த அசாத்திய தைரியம். இவளை என்ன செய்ய... அது வரையில் அவனுள் இந்த நினைவு ஒன்றும் செயலில் இல்லை. ஏதோ கொஞ்ச நேரம் அறையில் பூட்டி வைத்து பயம் காட்டிவிட்டு, புத்தி புகட்டலாம் என்று தான் நினைத்திருந்தான்.

இப்பொழுது அவளே கேட்க, அவனுள் மின்னல் வெட்டியது.

''என் ப்ரெண்ட்.... என்று அவன் மேலே பேச எத்தனிக்க, மஹதி இடைமறித்தாள்.

''பாருங்கள். நான் கல்யாணம் ஆகாத பெண். இந்த மாதிரி உங்கள் நண்பரிடம் என்னை அறிமுகப்படுத்தியதால் என் எதிர்காலம் பாதிக்கும் என்று உங்களுக்குத் தெரியாதா?

''என்னை கடத்தியபோது என் எதிர்காலத்தைப் பற்றிய கவலை உனக்கிருந்ததா? புருவத்தை உயர்த்தியபடி அவன் கேட்க,

''அதுதான். கதைகதையாக உங்களிடம் சொல்லிவிட்டேனே, ஸாரி.. ஸாரி.. ஸாரி... போதுமா?'' என்று கைகூப்பி நின்றாள் மஹதி. முகத்தில் எள்ளும் கொள்ளும் போட்டால் வெடிக்குமளவிற்கு சூடாகிப்போனது.

அவனுக்கு எல்லாமே ரசனைக்குரியதாக இருந்தது போலும்.

''சரி விடு மன்னித்தேன்.'' - என்றான் ஒற்றை வார்த்தையாக.

நம்ப முடியாமல் கண்கள் விரிந்தது அவளுக்கு. மன்னித்து விட்டானா?

''உங்கள் நண்பனிடம் அப்படிப் பேசிவிட்டு... அவரும் அதை உண்மை என்று நம்பி, யாரிடமும் சொல்லிவிடப் போகிறார்...'' என்று வேகமான குரலில் அவள் பேச,

"வேலை வேண்டாம். அவனுக்கு சொல்லியாகிவிட்டது. ஆனால் எனக்கு ஓர் உதவி செய்வாயா?" - என்றான் கண்கள் இடுங்கியபடி.
"உதவியா.. நானா..." என்று இழுத்தாள் மதுநிதி.
"உதவி யாருக்கு உதவி வேண்டும் என்றாலும் ஆபத்தாண்டவன் [illegible] இப்பொழுது அடிபட்டவனுக்கு உதவி போல் [illegible] போது பின் வாங்கலாமா?" வசனம் பேசினான், [illegible] இதழ் வளைவு சிரிப்புடன்.

10

அவன் சீரியஸ் ஆகக் கேட்கிறானா? இல்லை அவளை வம்பில் மாட்டிவிட கேட்கிறானா? என்பது அவன் பேச்சின் தொனியிலிருந்து அவளால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை.

"என்ன?" என்பது போல அவள் நெற்றியை சுருக்கிக் கண்களால் பாவனை செய்ய,

அவன் சொன்னான், அவன் கம்பெனிக்கும் வெளிநாட்டு கம்பெனியினருக்கும் ஒரு வாரம் நடைபெறவிருக்கும் பிசினஸ் சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தையில் யாரையும் நம்ப முடியவில்லையாம். அவன் ஆபீஸில் உள்ளுக்குள்ளேயே பலர் தங்களுக்குள்ளே குழி தோண்டி கொண்டிருக்கிறார்கள். காசுக்காக காட்டிக் கொடுக்கத் தயங்க மாட்டார்கள்.. நேர்மையானவரை காண்பது அரிதாகி விட்டது. இப்பொழுது உன்னை கொண்டு கொடுக்கச் செய்வதும் சூழ்ச்சிதான். நீ மா இருந்தால் இன்னும் கொஞ்சம் வேகமாக [illegible] வேலைகள் நடக்கும். சென்னை பிராஞ்சில் இருக்கும் அவன் கொஞ்சம் [illegible] என் மேல் பலரை குறைக்கும் முயற்சிகொண்டான் …டந்து கொண்டிருப்பது எனக்கு தெரியும். இப்போது பேப்பரில் விளம்பரப்படுத்தி, இன்டர்வியூ வைத்து ஆள் எடுக்கும் 'டைம்' இல்லை. …ன்னோட குவாலிபிகேஷன் போதும். செக்யூரிட்டியும் நியமித்து …ட்டால் [illegible] என்னால் வெற்றி பெற முடியும். …து சகவிதம் நம்பிக்கையான, நான் எதைச்சொன்னாலும் மீறாமல் …யக்கூடிய ஆள் என்று சொல்லி அவளை நோட்டம் விட்டுவிட்டு …டார்த்தான்.

"ஒரு வாரம் இந்த கான்பரன்ஸில் எனக்கு தலைக்கு மேல் வேலையிருக்கிறது. நம்பிக்கையான என்கிறீர்கள், என் மேல் என்ன …பிக்கை?" அழகிய கண்கள் விரிந்தன. மனம் வேகமாக கணக்கிட்டது. …வளவு பெரிய கம்பெனி, இங்கே ஒரு வாரம் வேலை பார்த்தாலும் …ல சம்பளம் கிடைக்கும். பணம்... பணம்...தற்சமயம் அவளுக்கு …மியமாக தேவைப்படும் பணம்.

"நம்பிக்கை என்று பிரமாதமாக ஒன்றுமில்லை. உன்னை விட்டால் …ல்லை என்பதில், ஏற்கனவே அறிமுகம் ஆன பெண் என்பதால்,



தோழிக்கு உதவுவதற்காக, ரிஸ்க் என்று தெரிந்த பின்னும், களத்தில் இறங்கிய உன் தீவிரத்தால்,

சப்பென்றிருந்தது அவனுக்கு. ஆனால் வெளிக்காட்டிக் கொள்ளாமல்,

"வேலைக்கு சம்பளம்? எவ்வளவு பணம் கிடைக்கும்" - கண்களில் ஆவலே உருவாக அவள் கேட்ட தோரணையில் அவன் கண்கள் இடுங்கின.

"பணம்...பணம்...கொடுத்தால் யார் எந்த வேலை செய்யச் சொன்னாலும் செய்வாயா?"

"பணம் இருந்தால் கல்யாணம்..." என்று வேகமாக யோசிக்காமல் பேசியவள் உதட்டைக் கடித்தாள். இவனிடம் எதற்கு இந்த விஷயம் எல்லாம் உளற வேண்டும்.

"ஓ...உன் கல்யாணத்திற்கு பணம் சேர்க்கிறாயா? அதற்கு அவ்வளவு அவசரமா? அவன் குரலில் கேள்வியும் இருந்தது, கேலியும் இருந்தது.

"முதலில் எவ்வளவு பணம் கிடைக்கும் சொல்லுங்கள்" ஆர்வமாக அவள் கேட்க,

பணம் பணம் என்று பேச்சை அதிலேயே நிறுத்திய அவளின் பண ஆசையில் யுவனின் முகம் கறுத்து கன்றிப் போனது. ஐந்து விரல்களை விரித்து காட்டினான்.

"ஐயாயிரமா?" என்று அவள் முகம் வாட கேட்க

"ஐம்பதாயிரம்..." போதுமா? என்றான் அவன் புருவம் உயர.

முகம் பூவாய் மலர்ந்தது அவளுக்கு. யசோதா ஆன்ட்டியின் கல்யாணக் கவலை பாதி தீர்ந்து விட்டதே.

அதற்குள் அறையில் அழைப்பு சப்தம் கேட்க, திறந்தவுடன், நுழைந்தவன் அவனின் தோழன் ஷாம்.

"என்னடா...கலாட்டா முடிந்ததா?" என்றான். சிறிது நேரம் பேச்சும் சிரிப்புமாக நண்பர்கள் நேரத்தை போக்கினார்கள். பின் மதுநிதியிடம் திரும்பி,

"ஸாரி ஸிஸ்டர்! அவனிடம் வேலை செய்தாலும் கொஞ்சம் கேர்புல்லா இருங்க. வெரி டேஞ்சரஸ் பெல்லோ. தென்...லஞ்ச் ரெஸ்டாரெண்டில் ஆர்டர் செய்து விட்டேன். இன்னும் சில நிமிடங்களில்

"வேலூர் மாப்பிள்ளை ரயி லில் வருவார்னு தரகர் சொன்னது பொய்னு இப்ப தெரியுது."
"என்ன விஷயம்?"
"அவர் ரயிலில் வரல பெயி லில் வந்திருக்கார்."
-தேனி முருகேசன், தேனி.



''ரூமில் சர்வ் பண்ண வந்து விடுவார்கள்'' என்று சொல்லி விட்டு வேறு கதை பேசத் தொடங்கினான்.

அறைக்குள்ளேயே பரிமாறப்பட்ட உணவு வெகு சுவையாக இருந்தது. பொரித்துக் கொண்டு வரப்பட்ட பெரிய லாப்ஸ்டர் அவனின் பேவரைட். உணவு புவன் சாப்பிடுகையில் நிறைய பேசினான். மதுமி உண்மையில் அவனின் பேச்சு சாமர்த்தியத்தில் கவரப்பட்டாள். கூடவே சந்தேகமும், நிறைய வேலை என்கிறான். சிரிக்கச் சிரிக்க பேசுகிறான். பயங்கரமாக கதையடிக்கிறான். எல்லாம் பொய்யா... உணவு முடிந்தவுடனும் பேச்சு தொடர்ந்தது.

தங்களுள் ஒருத்தியாக அவளை இணைத்துக் கொண்டது வேறு ஒரு மகிழ்ப்பு அவளுக்கு. அம்மா, அப்பாவிடம் பர்மிஷன் கேட்க வேண்டுமா என்றான்.

செல்போனைக் காட்டி, அம்மாவும் அப்பாவும், அக்காவின் பிரசவத்திற்கு அமெரிக்கா சென்றவர்கள், எப்பவும் தன் தொடர்பில் இருப்பதாக அறிவித்தாள்.

அவனுடைய பின்னணியைப் பற்றி சில குறிப்புகள் அடங்கிய 'புக்லெட்'டை கொடுத்தான். அவனுடைய வேலை விவரங்களையும் விவரித்தான். பெரிய புள்ளிதான்.

அவனுடைய ஸ்வேபார்மா நிறுவனம் மருந்து தயாரிப்பில் முன்னிலை வகித்து வரும் நிறுவனங்களுள் ஒன்றாகும். அதன் விரிவாக்கத் திட்டத்திற்கும், மையப்படுத்துதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இரண்டு கோடி டாலர்களை அதாவது எண்பது கோடி திரட்டியுள்ளது. இவ்வளவு பணத்தை அன்னியச் செலவாணியில் பங்குகளாக மாறக்கூடிய கடன் பத்திரங்கள் வெளியீடு மூலமாகவும், வெளிநாட்டு வணிக கடன்களைப் பெறுவது மூலமாகவும் பல போட்டிகளுடன் திரட்டி முடித்திருந்தான் புவன். அவனின் ஸ்வே பார்மா நிறுவனம் ஐந்து தொழிற்பிரிவுகளை கொண்டுள்ளது. இவற்றுள் இரண்டு தொழிற்பிரிவுகள் ஹைதராபாத்தில் அமைந்துள்ளன. மும்பை மற்றும் புனே ஆகிய நகரங்களில் தலா ஒரு தொழிற்பிரிவினைக் கொண்டுள்ளது. இப்பொழுது சென்னையில் ஒரு தொழிற்சாலை உருவாகி வருகிறது. இங்கு வாய்வழியாக செலுத்தப்படும் திரவ வடிவிலான ஊசி மருந்துகள் தயாரிக்கப்பட உள்ளன.

நான்கு ஐந்து தலைமுறைகளாக தொடர்ந்து செய்யப்படும் தொழிலில் ஆதி முதல் அந்தம் வரை புவனுக்கு அனுபவ அறிவும் பெரியவர்களால் புகட்டப்பட்டிருந்தது. இந்த கடைசி 5 ஆண்டுகளில் தொழிற் போட்டி நினைத்துப் பார்க்க முடியாதபடி மிகவும் பெருகியிருந்தது.

தொழிற்போட்டியில் முன்னேற, சர்வதேச மருந்து நிறுவனங்களுடன் கூட்டு திட்டங்களைச் செயல்படுத்தவும், அந்த கூட்டு திட்டங்களின் வாயிலாக வெளிநாட்டு நிறுவனங்களின் தயாரிப்புகளை இந்தியாவில் சந்தைப்படுத்தவும், ரகசியமாக அவன் ஏற்பாடு செய்திருந்ததுதான் இந்த கான்பிரன்ஸ். முந்திலும் வெளிநாட்டவர்கள்



பங்கேற்கும் மாநாடு.

பக்கத்து அறையை அவளுக்கென்று 'புக்' செய்து சாவியை கையில் தந்தான். ஒரு செட் துணி கூட இல்லாமல் வந்தவள், ஒரு வாரம் இருக்க வேண்டுமே என்ற நினைப்புடன் கையில் தாராளமாகப் பணம் தந்து, இது என் செகரட்டரியாக 'பளிச்' என்று தெரிய நல்லதாக 'ஷாப்பிங்' செய்து கொள், அவளின் ஜீன்ஸ் டாப்ஸை குறிப்பாக நோக்கி, புடவையாக இருந்தால் நல்லது என்று சொல்லி ஹோட்டல் டாக்ஸியை பேசி அவளைப் பாதுகாப்பாக அனுப்பினான்.

ரொம்ப மதிப்பாக தெரிய வேண்டுமே என்று சில்க் காட்டன், தசர், ஆர்க்கென்ஸா, காட்டன், சில்க், ரா சில்க் என்று அமர்ந்த நிறத்தில் விலை கூடுதல் என்றாலும் அம்சமாக இருக்கிற புடவையாக தேர்ந்தெடுத்துக் கொண்டாள்.

உள் மனதின் உந்துதலில் ஒரு ப்யூர் ஷிபான் புடவை, லெமன் பச்சை நிறத்தில் கண்ணை கவரும் விதத்தில் குந்தன் வேலைப்பாடு செய்திருந்ததில் மனம் மயங்கி வாங்கினாள். அட்டாச்டு பிளவுஸ் அதே கடையில் மற்ற பிளவுஸ்களுடன் கொடுத்தாள். இரவு தைத்து எக்ஸ்பிரஸ் ஆர்டர் பேரில், காலை ஹோட்டல் ரூமில் தந்து விடுவதாக கூறி விடவே, அடுத்து உள்ளாடைகள், நைட்டி, சோப், பேஸ்ட் இத்தியாதி... என்று வாங்கிக் கொண்டு அறை வந்து சேர்கையில் மணி ஆறாகி விட்டிருந்தது. குளித்து விட்டு நைட்டியுடன் வந்தவள், செல்போனில், தந்தையுடன் பேசினாள்.

எடுத்துப் படிக்கும் மார்க்கெட்டிங் கோர்ஸில் ப்ராஜெக்ட் வொர்க் வேண்டி ஒரு வாரம் டெல்லியில் இருப்பதாகவும், தங்கியிருக்கும் ஹோட்டல் பெயர் புவனின் கம்பெனி பெயர் என்று எல்லா விவரங்களையும் தந்தையிடம் கூறினாள்.

ஏற்கனவே இது போல 'மார்க்கெட்டிங் கோர்ஸு'க்காக ப்ராஜெக்ட் வொர்க் காலேஜில் சப்மிட் பண்ண வேண்டும். நல்ல கம்பெனி, பாப்புலர் கம்பெனி ஏதாவது சொல்லுங்கள், அங்கே ப்ராஜெக்ட் பண்ண அனுமதி வாங்கித் தாருங்கள் என்று தந்தையின் உயிரை எடுத்துக் கொண்டிருந்ததால் தந்தை மறுத்து கேள்விகள் கேட்காதது நிம்மதியாக இருந்தது.

ஒரு வாரம் இங்கு இருந்து வேலை பார்ப்பதும் ஒரு ''ப்ராஜெக்ட்'' வொர்க்கு சமமானதே. தந்தையிடம் ஒன்றும் பொய் சொல்லவில்லை என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். ஆனால் என்ன, ''மார்க்கெட்டிங் பிரிவு' கிடையாது.

தந்தையிடம் விவரம் கூறி முடித்ததும் 'வொர்க்கிங் வுமன்ஸ் ஹாஸ்டலு'க்கு போன் செய்து தந்தையிடம் கூறியது போல் ப்ராஜெக்ட் என்று சொல்லி, வர ஒரு வாரமாகும் என்று அனுமதி பெற்றாள்.

இவள் ஷாப்பிங்கில் இருக்கும் போது நிலாவிடம் இருந்து 'கால்' வந்திருந்தது. பாஸிடம் பைல் ஒழுங்காக சேர்ந்து விட்டதா? என்று அறிய வேண்டியிருந்தது அவளுக்கு. நடந்ததை நிலாவுக்கு விவரமாக சொல்லி முடிக்க, அவளுக்கும் நிம்மதிதான். பிறகு வேகாவிற்கு போன் செய்தாள்.

மாலைப் பொழுது இப்படியாக கழிந்து போனது.

அந்த ஒரு வாரமும் போன வேகம். அடேங்கப்பா...

மஹதி வாழ்க்கையில் மறக்க முடியாதவை. மூச்சு கூட விட முடியாமல் வேலை என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கிறாள். நிஜத்தில் அந்த ஒரு வாரமும் அந்த வேகத்தில்தான் சென்றது. வேலையை தவிர வேறு எதையும் சிந்திக்க முடியாத அளவிற்கு வேலையில் பளு இருந்தது.

கான்பரன்ஸுக்கு போவதற்கு முன்னால் அவனுக்கு குறிப்புகள் கொடுப்பது. கான்பரன்ஸில் குறிப்புகள் எழுதுவது. பின் அறைக்கு வந்து டைப் அடிப்பது. ஒப்பந்தங்கள் டிராப்ட் செய்வது. கம்ப்யூட்டரில் 'நெட்'டில் போய் வேண்டியதை டவுன்லோட் செய்வது. இ-மெயில் பார்ப்பது. மீட்டிங் ஆர்கனைஸ் செய்வது. அவன் கேட்ட டீடெய்ல்ஸ் புரூப் பார்ப்பது. அவனுடன் ஹோஸ்ட்டாக திரிவது என்று அவனுக்கு வேலை விஷயத்தில் முழுமையாக ஒத்துழைத்தாள்.

வாரம் நொடியாகப் பறந்தது.

வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் திருப்தியுடன் நாடு திரும்பினார்கள்.

மறுநாள் அவள் சென்னை திரும்ப ப்ளைட் டிக்கெட்டும் வந்து சேர்ந்தது.

''மஹதி ஈவினிங் ஏதாவது புரோக்ராம் வைத்திருக்கிறாயா?'' என்றான் புவன்.

''நானா... புல்லா நான் இங்கே உங்க டிப்பெண்டென்ட்... எனக்கு இதில் தனியா புரோகிராம் எங்கே?''

''நெட் டின்னர் உனக்கு என் வீட்டில், நாலு மணிக்கு ரெடியாயிரு'' என்றான் புவன்.

கான்பரன்ஸ் டைமிங் காலை எட்டு மணியிலிருந்து இரவு எட்டு மணிவரை ஓடியதால், இந்த டில்லி டிராபிக்கில் வீடு போய் வர 3 மணி நேரம் டிராவலிங்கில் போய் விடும் என்று அவன் ஹோட்டலிலேயே தங்கிய விஷயம் அவளுக்குத் தெரியும்.

''வீட்டில் யார் யார் இருக்கிறார்கள். தெரிந்தால் ஏதாவது கிப்ட் வாங்கி வர வசதியாக இருக்கும்.'' அவளுக்கு இந்த இடைப்பட்ட காலத்தில் அவனுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்று அறியும் ஆவல் இருந்தது. அது அறிந்து கொள்ளும் ஆவலைத் தவிர வேறொன்றும் இல்லை என்று தனக்குள்ளே மாறி மாறி சொல்லிக் கொண்டு அவன் பதிலுக்காகக் காத்திருந்தாள்.

''என் அம்மா, குட்டி தங்கை ஹிரம்பா ஒரளித்திருக்கிறமை என்பதால் பெரிய தங்கை காதம்பரி தன் குடும்பத்துடன் வருவாள். வேறு முக்கியமாக சொல்வதற்கில்லை.'' என்று முடித்தான்.

அப்படி என்றால் இன்னும் மனைவி இல்லை.



அவள் அனுமதியின்றி மனம் தனை...னா..தனை...னா..என்று மெல்லியதாக மெட்டு அமைத்தது.

''நாம் வருகிறாரா?'' அவள் கேட்டதில் அவன் புருவம் ஏறி இறங்கியது. பின்,

''இல்லை நீ மட்டும்தான்'' என்றான்.

''ரெடியாயிரு, சரியாக நாலு மணி'' என்றபடி போய் விட்டான். ஹோட்டல் வளாகத்தில் இருந்த கடையில் காஷ்மீர் எம்ப்ராய்டரி போட்ட 'ஷால்' ஒன்று அவனுடைய தாய்க்கு என்று வாங்கி கொண்டாள். பிறகு இரண்டு பூங்கொத்து அவன் தங்கைகளுக்கென்று.

மாலை 'டப்'பில வெந்நீர் வெதுவெதுப்பில் நன்கு அமிழ்ந்து குளித்துவிட்டு புத்திசாலித்தனமாக முன்பே வாங்கி வைத்திருந்த 'லெமன் பச்சை' புடவைக்கு மாறினாள். இத்தனை நாள் போனி டெயிலில் ஒளிந்திருந்த அவளுடைய 'லேயர் கட்' கூந்தலை விரித்து விட்டாள். ஹேர் டிரையரின் உதவியால் அது கருள் கருளாக கருண்டு கண்ணாடியாக பளபளத்த கன்னத்தில் ரகசியம் பேசியது. கச்சென்று அளவாக தைக்கப்பட்ட பிளவுஸ், உடம்போடு ஒட்டிய புடவை அவளின் நெளிவு சுழிவுகளையெல்லாம் ஓவியமாகக் காட்டியது. முகம் மிதமான மேக்கப்பில் ஜொலித்தது. கண்கள் காஜலில் வசீகரித்தது.

நான்கு மணிக்கு அவளை அழைத்துச் செல்ல வந்தவனின் ரசனையான பார்வையில் மஹதியின் வெண்பட்டுக் கன்னங்கள் லேசாக சிவந்தன.

## 12

அவன் வீடு மிக அழகாக கலைநயத்துடன் அட்டகாசமாக இருந்தது. வரவேற்பறையில் அலங்காரத்திற்கு இருந்த இரு யானைகள் கிட்டத்தட்ட அவள் உயரத்திற்கு இருந்தது. ஒரே மரத்தின் டிரங்கினால் இழைக்கப்பட்டு அழகிய வேலைப்பாடுகளுடன் இருந்த யானையொன்றுமட்டுமே ஐந்து லட்சம் தாராளமாக இருக்கும். ஒவ்வொரு பொருட்களிலும், ஒவ்வொரு இடத்திலும் செல்வத்தின் வளமை தெரிந்தது. சட்டென்று வந்த பணம் இல்லை. இது பாரம்பரிய வளமை.

முன்னமே அவளின் வரவு வீட்டினருக்கு அறிவிக்கப்பட்டிருந்த படியால், யாவரும் அவளுக்காக எதிர் பார்த்துக் காத்திருந்தது மஹதிக்கு சிலிர்ப்பாக இருந்தது.

மிகப் பிரியமாக பழகினார்கள். அவள் கொடுத்த பரிசுகளையும் ஆசையாக வாங்கிக் கொண்டு மிகவும் போற்றினார்கள். புவனின் சின்ன தங்கை ஹிரம்பா மஹதியை விட இரண்டு மடங்கு வயது சிறியவள். மஹதியிடம் ஒரே அரட்டை... சினிமா, அரசியல், மாடலிங், காலேஜ், பாய்பிரண்ட்ஸ் என்று அரை மணி நேரத்தில் எல்லா டாப்பிக்கையும்

கலந்தழுத்தான்.

காதம்பரியும், தாயும், புன்னகைத்த வண்ணம் அவனிடம் சென்னைக் கொண்டாங் கேள்விகள், பதில்கள், மஹதிக்கு வந்த இடம் புது இடம் என்ற நினைவே இல்லை. ஏதோ பல காலம் பழக்கப்பட்டவர்கள் போல அவளும் அவர்களிடம் பழகினாள்.

இரவு விருந்து அவ்வளவு ருசி. ஒரு வாரம் கழித்து விட்டுக்கு வந்திருக்கும் மகனுக்காக இத்தனை மெனக்கெடலா? இல்லை அவளுக்காகவா?

சாப்பிட்டு முடித்து எழுந்திருக்கவும், அறையே பிரகாசமானது போல் புயல் போல ஒரு பெருகி நுழைந்தாள்.

ம்ம்... மா... எத்தனை அழகு?!!

தந்தத்தால் கடைந்தெடுத்த சிலை போல்!

பட்டால் பறந்த கூந்தல், பாவனை பேசிய கண்கள், ரோஜா நிற சருமம், ஆரஞ்சு சுளையாய் உதடு...

சத்தியமாய் இவ்வளவு அழகிய பெண்ணை மஹதி பார்த்ததே இல்லை. அவளையே அழகு அழகு என்று காலேஜ் படிக்கும் போது ஒரு கூட்டமே சுற்றிக் கொண்டிருக்கும். இந்த புதுப் பெண்ணின் அழகு முன்னால் அவளெல்லாம் தூசி.

''ஹாய் ஆன்ட்டி''-என்றபடி நெஞ்சோடு புவனின் தாயை அணைத்துக் கொண்டாள். அங்கிருந்த காதம்பரிக்கும், ஹீராம்பரிக்கும் அதே நேசமொழுதல் நடந்தது.

அவளொருத்தி நிற்பது கூட அவள் கண்களை எட்டவில்லை.

''புவன் எங்கே ஆன்ட்டி? என்னை வீட்டுக்கு வா...வா... உன்னைப் பார்க்கணும் என்று கெஞ்சிக் கெஞ்சி கூப்பிட்டான். சரிதான் பாவமே என்று வந்தால் எங்கே காணும்?''-என்றபடி சோபாவில் பஞ்சு குவியலாய் அமர்ந்தாள்.

''நான் இங்கு அவனுக்கு வெயிட் பண்ணிட்டிருக்கேன்னு சீக்கிரமாக வரச் சொல் ஹீராம்பரி''-என்று கட்டளை பிறந்தது.

அதே சமயம் அங்கே வந்து நின்ற புவனுக்கு அவளைக் கண்டதும் முகம் விகசித்தது.

அவன் கண்களில் காதல் தெரிந்தது. அவர்கள் இருவரும் கைகளை கோர்த்து தோளை அணைக்க, காதம்பரி மஹதியிடம் பொறிந்து தள்ளினாள்.

''வந்து விட்டாள் ஆள் மயக்கி. கொஞ்ச நாள் அண்ணனை ஆட்டி வைச்சு பிசாசு. இவ கதை ரொம்ப பெரிசு. இவள் அண்ணனை படுத்த பாட்டை அப்புறமாகச் சொல்றேன் மஹதி. இவளுக்கு பயந்துதான், அண்ணன் இவளை கல்யாணம் செய்து விடுவானோ என்று பயந்துதான் வேக வேகமாக அவனுக்கு கல்யாணம் பேசினோம். இங்கேயே கல்யாணம் நடத்தினால், பத்திரிகை, அது இது என்று பிரபலமாகி விடும் என்றுதான், ஒருவர் இங்கே யாருக்கும் சொல்லாமல் எங்க ஊர் மதுரையில் வைத்தோம். கல்யாணம் முடிந்து விட்டால், இவளை ஓட ஓட விரட்டி விடலாம் என்று நினைத்தால், எப்படியோ அண்ணன் கல்யாணத்தை



மோப்பம் பிடித்து வந்து அண்ணனை கடத்தி வைத்து அதையும் கலைச்சிட்டா''-காதம்பரி மெல்ல முணுமுணுப்பாக மஹதியின் காதில் விஷயத்தைச் சொன்னாள். அவள் பேச்சிலிருந்து அந்த ரூபியின் மேல் அவர்கள் குடும்பத்தினர்க்கு இருந்த வெறுப்பு புரிந்தது. கூடவே,

''இந்தக் கடத்தல் பழி இவள் மேலா விழுந்தது'' என்று சிரிப்பு வந்தது.

''எவ்வளவோ புத்திசாலித்தனமான அண்ணனுக்கு இதில் மட்டும் புத்தி மந்தம் என்று நினைக்கிறேன். பொதுவா பார்த்த மாத்திரத்தில் ஆட்களை எடை போட்டு விடுவான். ஆனால் இந்தக் காதல் வந்து விட்டால் புத்தி புல் மேயத்தான் போய் விடும் போல.

புவனையும், ரூபியையும் ஒரு சேர காணப்பிடிக்காமல் குடும்பம் பக்கத்து அறைக்கு இடம் மாறியது. ஹீராம்பரி செல்போனில் பேசியபடி ஒதுங்க, தூர்கா 'டெசர்ட்' ரெடியானதா என்று பார்க்கறேன்'' என்று கிச்சன் பக்கம் சென்றார்.

திடீரென்று காதம்பரி,

''அண்ணன் உன்னை மாதிரி... இல்லை...உன்னைப் பார்த்து மயங்கியிருக்கக் கூடாதா? அப்படி இருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் தெரியுமா?''என்று காதம்பரி வெகுளித்தனமாக படபடவென்று பேச, அந்த குறிப்புக் காட்டலில்... மஹதியின் நெஞ்சு படபடவென்று வேகமாக இயங்கியது. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

'ஆஹா' என்னைப் பார்த்து மயங்கியிருக்கக் கூடாதா? என்ற எண்ணம் சடாரென்று அவளுள் பேரலையாக எழ, மஹதியின் முகம் 'சட்'டென்று சூடாகி சிவந்து போயிற்று. அவள் எண்ணம் போன போக்கில் மஹதி கலவரப்பட்டுப் போனாள்.

அவன் மேல் இது என்ன ஈடுபாடு?

காதலா?

இது அவள் எதிர்பாராதது.

கனவிலும் நினைத்துப் பாராதது.

காதல், கடமை இரண்டுக்கும் பெயரில் மட்டும்தான் வேற்றுமை

''கிரயப்பத்திரத்தில் உங்க கையெழுத்தை போடுவதற்கு பதில் உங்க அப்பா கையெழுத்தை போடுகிறீரே!''

''சிறுவயதில் இருந்தே பிராக்ரஸ் ரிப்போர்ட்டுல் அப்பாவுக்கு பதில் நான் தான் கையெழுத்து போடுவேன்.''

-நாஞ்சில் க. நாகராஜன், பறக்கை.



என்பது எவ்வளவு உண்மை. இவ்வளவு முட்டாள்தனமாக அவளின் மனம், எப்படி எட்டாப்பழமான அவனை நாடுகிறது?!

எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத கணத்தில் நேருவதுதானே காதல்!

காதம்பரி அவளையே குறுகுறுவென்று பார்ப்பதைக் கண்டு, மஹாநிக்கு தன் நிலையை எப்படி சமாளிப்பதென்றே புரியவில்லை. அவளின் நிலைமை மிகவும் பரிதாபகரமாக தோன்றியது. ஏக்கமாக நெஞ்சு விம்மத் தொடங்க, அந்த ஏக்கத்தை மறைக்க,

''நமக்கெல்லாம் அமெரிக்காவில் 'ஆள்' ரெடியாகயிருக்காங்கப்பா...'' என்று சொல்லி கலகலக்க,

பதிலுக்கு காதம்பரி பேச தொடங்கும் முன்பு இடைமறித்தது புவனின் குரல்.

''காதம்பரி, உன் மகன் தூக்கத்தில் எழுந்து உன்னை தேடி அழுகிறான். சமாளிக்க முடியவில்லையாம். கவனி...''-என்று சொல்லியவன், தங்கை நகர்ந்ததும் மஹாநியின் மேல் பார்வையை பதித்தான்.

முதல் முறையாக நெஞ்சம் சலனப்பட, அதன் காரணத்தைச் சரிவர ஏற்கவும், ஒத்துக்கொள்ளவும், நிதானமாக ஆராய்வதற்கும் முன்னால், அவனே, காரணகர்த்தாவே வந்து நிற்க, மஹாநிக்கு அவனை நிமிர்ந்து கூடப்பார்க்க முடியாமல் கன்னங்கள் செம்மையாயின.

அவளின் மாற்றங்கள் கூர்மையான புவனின் கண்களிலிருந்து தப்பவில்லை. கண்ட மாற்றங்கள் மனதுக்கு இதமாகவும் இல்லை.

''கங்ராட்ஸ் மஹாநி... இந்த ஏழு நாட்களில் ஒருமுறை கூட என்னிடம் உன் வருங்கால கணவனைப் பற்றி சொல்லியதே கிடையாதே... யாரந்த அமெரிக்க மாப்பிள்ளை?'' அவன் கேள்வியில் விஷயம் அறிந்து கொள்ளும் வேகம் இருந்தது.

மஹாநிக்கோ...அய்யோ...என்றிருந்தது. தன்னை சமாளிக்க ஏதோ சொல்ல இவன் உண்மை என்று நினைத்து விட்டானே.

''ஓ...அடிக்கடி...ஒதுங்கிப் போன் பேசவாவே...இவன்பிறந்துதானா வரும்?''

அது நானிடம் இருந்து வந்த போன் கால்கள் அல்லவா? உடனே தலையசைத்து மறுக்க நினைக்க, அதற்குள் அவன்,

''அடேங்கப்பா அந்த அமெரிக்க மாப்பிள்ளை பெரிய அதிர்ஷ்டசாலிபோதான். அவனைப் பற்றிய பேச்செடுத்தவுடன் உன் முகம் எப்படி சிவந்து போய்விட்டது'' என்று சொன்னவன் கை நீட்டி அவளின் சிவந்த கன்னங்களை தன்னையும் மீறி நீண்ட, எதிர்பாராத அவனின் நீண்டலில் 'ஷாக்' அடித்தது போல் தன்னிச்சையாக கால்கள் தொடுகையில் ஒரு எட்டு பின்னால் நகர அலங்காரத்திற்காக ஓர் அடி கீழே தாழ்ந்து படிக்கட்டு கொஞ்சமும் பாலன்ஸ் இல்லாமல் அவள் விழப் போக, தொடும் பொழுதுக்கும் வேகமாக அவனின் நீண்ட கைகளிரண்டும் அணைத்தாங்கிப் பிடிக்க, அடுத்த கணம் அவள் நெற்றி அவன் நெஞ்சில் மோதியது. தாங்கிப்பிடித்த அவன் கைகளிரண்டும் அவளை வளைத்துப் பிடித்தன.

நொடிகளோ, நிமிடங்களோ இருவரும் விலகத் தோன்றாமல் நிற்க,

''அண்ணா... அம்மா உன்னிடம்...'' என்றபடி கையில் குழந்தையோடு வந்த காதம்பரி,

அவசர அவசரமாக அணைப்பிலிருந்து விலகிய மஹாநியையும், புவனையும் கண்டு அதிர்ந்து,

''அண்ணா...'' என்று கண்களை கேள்வியாக்க,

''நீ டிசைன் பண்ணிய படியில் விழப் போனாள்.... தாங்கிப் பிடித்தேன். அவ்வளவு தான்! நீ என்னவோ, ஏதோவென்று கற்பனை கோட்டை கட்டி விடாதே''- என்று தங்கையின் கண்களில் தோன்றிய அதிர்ச்சியிலும், அதன் தொடர்ச்சியாக தெரிந்த ஆவலிலும் மறுப்பாக தலையசைத்து, அவளின் தலையை தட்டி விட்டு அவன் அகன்றான்.

மஹாநிக்கும் தன் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. ஏனெனில் சில நொடிகளில், அவனின் அந்த கண நேர அணைப்பில் அவளுமே பெரிய கற்பனைக் கோட்டையை கட்டி விட்டாள் தான்.

நிலை தவறி விழ இருந்தவளை தாங்கிப் பிடித்தான்.

அவ்வளவு தான். அவன் சொன்னது சரி. நோ.. கற்பனை என்று தன் மனதை கடிவாளமிட்டு அடக்க அது திமிறிக் கொண்டு நிமிர்ந்தது. இல்லையே... தாங்கி மட்டும் பிடிக்கவில்லையே.. அணைத்தானே.. கூட அவளும்.. நினையாதே மனமே.. நினையாதே... என்று உள்ளுக்குள் அவள் போராட, குழம்பித் தவித்த அவளுக்கு காதம்பரி உதவினாள்.

இரண்டடுக்காய் கலை நயத்துடன் அமைக்கப்பட்டிருந்த வீட்டை சுற்றிக் காட்டினாள்.

அதுவும் மொட்டை மாடியில் இரண்டு குட்டி போட்டிருந்த 'பக்' இன நாய்க்குட்டியை கண்டு எல்லாமே மறந்து போனது அவளுக்கு.

''இவள் பெயர் 'குயின்' போன வருஷம் அண்ணன் ஜெர்மனி போயிருந்த போது அங்கிருந்து வாங்கி வந்தான். இவள் குட்டி போட்டு இப்பதான் பத்து நாட்களாகிறது''-என்று சொல்ல,

ப்ரவுன் நிறத்தில் முகத்தில் அழகிய கருக்கங்கள் சதை மடிப்பாகத் தொங்க, சப்பை மூக்குடன் கண்களை விரித்துப் பார்த்த நாய்க்குட்டிகள் மஹாநியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

கறுகறுப்பாய் குதித்தபடி காது விரிய நாய்குட்டி ஓடிய அழகும், சத்தமே கேட்காமல் குலைத்த அழகும்...

''ரூபிக்கு ஒரு குட்டி வேண்டுமாம். முப்பது நாட்கள் கழித்து எடுத்துட்டுப் போவாள். உனக்கும் வேண்டுமானால், நீயும் ஒன்று எடுத்துக் கொள்'' என்று மஹாநியின் கண்களில் மின்னிய ஆர்வத்தில் காதம்பரி சொல்ல,

''இல்லை.. அம்மாவுக்கு நாய் குட்டின்னா, அலெர்ஜி, அதனால் வேண்டாம்... எவ்வளவு அழகு இந்த குட்டி'' என்று ஒன்றை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள் மஹாநி.

''இந்த ரூபி வந்துவிட்டால் அண்ணனுக்கு உலகமே மறந்து போகும்...'' என்று பேசத் தொடங்கிய காதம்பரி, மீண்டும் ரூபியை சுற்றிக்

கொட்டியபடி அவளைப் பற்றி பேச,

''கடைசியில் அண்ணனைக் கடத்திட்டாள் தெரியுமா?'' என்று முடித்தாள்.

''அண்ணன் ஏற்கனவே கல்யாணத்தில் இன்ட்ரஸ்டே காட்டவில்லை. அவனுக்கே கல்யாணத்தில் ஏகப்பட்ட குழப்பங்கள். அதுவும், நாங்கள் பார்த்து வைத்த பெண். அவனுக்கு முழு மனதோடு பிடித்தமாதிரியும் இல்லை. கல்யாணம் ஆனால் சரியாகிப் போகும் என்று நாங்கள் தான் கட்டாயப்படுத்தினோம். எல்லாம் இந்த ரூபியிடம் நடிப்பதற்காகத்தான். இவள் அழகும், அவட்டலும், எங்கள் குடும்பத்திற்கு சரி வரும் என்று தோணவில்லை மதுறி. அண்ணன் அவளிடம் மயங்கிக் கிடப்பது போல எனக்கும் அம்மாவிற்கும் சந்தேகம் எப்பப் பார்த்தாலும் அண்ணனிடம் ரகசியமாக கொஞ்சிக் கொண்டிருப்பாள்...

அண்ணனும் அதை அனுமதிக்கிறானே என்று எங்களுக்கும் கவலை...

காதம்பரி பேசிக் கொண்டிருக்க, மதுறிக்கு உள்ளூர பெரும் நிம்மதி வியாபித்தது.

அப்படி என்றால் அன்று அந்த கல்யாணப் பெண்ணை யுவன் ஆசைப்பட்டு மணக்க நினைக்கவில்லை. அவன் மனதில்... குற்ற உணர்வு இருந்து கொண்டே தான் இருந்தது. ஒரு வேளை, நூற்றில் ஒரு பங்காக யுவன் அந்த கல்யாணப் பெண்ணின் மேல் ஆசை வைத்திருந்தால்..?

அவர்கள் கடத்தியதற்கும், திருமணம் நின்று போனதற்கும், எவ்வளவு கவலைப் பட்டிருப்பான் என்று நினைத்து, அவள் எத்தனை நாட்கள் மனதில் பலதை நினைத்து நிம்மதியில்லாமல் இருந்திருக்கிறாள். இப்போதே, பெரிய குற்ற உணர்விலிருந்து விடுதலை கிடைத்தது போல இருந்தது. அவளின் நிம்மதியை குலைப்பதற்கு குற்ற உணர்வுக்கு பதிலாக வேறொரு உணர்வு மெல்ல அவளை முற்றுகையிடுவதை அவள் உணராமல் இல்லை.

ஆனால் அவளால் அதைத் தடுக்க முடியவில்லை.

## 13

காதம்பரியும், ஹிராம்பரியும் மதுறியை விட வேயில்லை. நாளை காலை பத்து மணிக்கு தானே பிளைட். இப்பவே ஹோட்டல் ரூம்லே போய் என்ன செய்யப் போறே. எங்களுடனே இன்று தங்கிட்டு காலையில் ஏர்போர்ட் போகும் போது ஹோட்டல் ரூமை வேகேட் பண்ணிட்டு பெட்டியை எடுத்துக் கொண்டு போகலாம் என்று அன்புத் தொல்லை செய்தார்கள்.

பொதுவாக அண்ணன் யாரையும் சுலபமாக இப்படி குடும்பத்திற்கு அறிமுகப்படுத்தியதில்லை என்பது தான் முக்கியமான காரணம். அப்படி அறிமுகப்படுத்தப்பட்டவர்கள், அண்ணனுக்கு விருப்பமானவர்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். கூடுதலாக மதுறியின் இனிமையான சுபாவம் வேறு பிடித்துப் போனது.

யுவனின் தாயாரும் ''நாளைக்குப் போகலாம் மதுறி''- என்று முடிவாக சொல்லிவிட ஹிராம்பரி இன்னுமா ரூபி கிளம்பவில்லை. அண்ணன் டயர்டா வேறு இருப்பான். அவனுக்கு வேறு வேலை கிடையாது. அவளிடம் இருந்து சீக்கிரம் பிரித்து விடு அவனை'' என்ற படி தூர்காவும் தன் அறைக்குச் சென்று விட,

''போய் நந்தி மாதிரி அவள் போகுமிடமெல்லாம் பின்னாலேயே நின்றால் போய்விடப் போகிறாள் அம்மா. நான் இருந்தால் அண்ணனிடம் வாயே திறக்க மாட்டாள்'' என்று முணுமுணுத்தபடி காதம்பரியும் ஹாலில் நுழைந்தாள்.

ஏதோ தீவிரமாக யுவனிடம் வாதித்துக் கொண்டிருந்த ரூபி காதம்பரியைக் கண்டதும் 'டப்' என்று பேச்சை நிறுத்தி, ''அப்போ நான் கிளம்பறேன் யுவன். நாளைக்கு பார்ப்போம்'' என்று எக்கி அவன் கன்னத்தில் முத்தமிட்டு, ''வரட்டும்மா'' காதி என்று அவளையும் அணைத்து விட்டுக் கிளம்பினாள்.

''அண்ணா மதுறியை அம்மா காலையில் தான் அனுப்பப்போகிறேன்னு சொல்லிட்டாங்க. அவ ஹிரா கூட படுக்கப் போய்விட்டாள். அத்தான் ஊரில் இல்லை. அதனால் நானும் நாளை தான் வீட்டுக்குப் போகிறேன்.

''சரிதான், நானும் அப்படிதான் நினைத்தேன்'' என்று யுவன் இணைந்து பேச,

''நல்ல பெண்ணாக தெரிகிறாள் மதுறி. ரொம்ப நாள் பழக்கமாண்ணா'' மெல்ல விஷயத்தைப் பிடுங்க காதம்பரி பேச,

தங்கையின் கேள்வியின் நோக்கம் புரிந்து யுவன், ஒற்றை விரலால் பத்திரம் காட்டிவிட்டு 'குட்நைட்'- என்று ஒரே வார்த்தையில் தன் அறை நோக்கி நகர்ந்தான்.

காதம்பரிக்கு மூக்கில் வியர்த்தது.

மறுத்து ஒன்றும் பேசவில்லையே!

விஷயம் ஏதேனும் இருக்குமா?

## 14

யுவனின் குடும்பத்தினருடன் பிரியா விடை பெற்று தான் சென்னை திரும்பினாள் மதுறி.

எத்தனை பிரியமான குடும்பம்.

அவளை தங்கத் தட்டில் ஏந்தவில்லை. அவ்வளவு தான். ஆனால் அந்த உணர்வை தந்து விட்டார்கள். யுவன் ஏர்போர்ட்டில் கொண்டு விடுகையில் பேசியபடி பணத்தை அவள் பெயரில் செக் எழுதிக் கொடுத்தான். அவளின் 'விசிட்டிங்' கார்டையும்

சேர்த்துக் கொடுத்தாள்.

"என்ன தேவைப் வேண்டுமானாலும் கேள் மஹதி. இட் வாஸ் நைஸ் ஹாவிங் யூ ஹியர்" என்று சம்பிரதாய வார்த்தைகளை பேச மஹதிக்குத் தான் அழுகை வரும் போல் இருந்தது. இனி இவனை பார்க்க முடியாதா? தன்னை அடக்கியபடி, கை குலுக்க நீட்டிய அவன் கைகளில் அவள் கையை வைக்க, அவன் அவளின் கைகளை பட்டும் படாமலுமாக ஏந்தி குலுக்கியதாக பேர் பண்ணிக் கொண்டு விடுவித்து, விடைபெற்று சென்று விட்டான்.

கண்ணோரம் கரித்த கண்ணீரை யாரும் பார்க்காத வண்ணம் கண்டு விட்டாள். அவன் செல்கையில் அவள் உயிரும் அவன் கூடவே செல்வது போன்ற உணர்வில் தவித்துப் போனாள்.

ஒரே வார பழக்கத்தில் காதல் வருமா? கண நேர பார்வை பரிமாற்றத்திலேயே காதல் உயிர் பெறுவதுண்டே?

இல்லை அவனது வெறும் இனக் கவர்ச்சியா? அவனின் உயர்வோடு எல்லா பெண்களும் அவனை அடைய ஆசைப்படுவார்கள். அவளும் நூற்றில் ஒருத்தி போல் சேர்த்தியா?

அவனுக்கும் அவளுக்கும் எந்த விதத்தில் பொருத்தம்?

காதல் என்பது பொருத்தம் பார்த்தா உண்டாகிறது? அது ஒரு புரட்சி வாதி. திடீரென்று எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராதவர்களிடையே ஏற்படும் கண நேர பார்வை தீண்டல்களில் நிகழ்வதல்லவா?

ஏதோ பித்துப் பிடித்தவளைப் போல பலதையும் நினைத்துக் கண்கள் ஆறாகப் பெருக, பிரயாணத்தைக் கழித்தாள் மஹதி.

## 15

லேகாவிற்கு ஒரே சந்தோஷம்.


"எப்படி மஹி? எப்படி மஹி? ஐம்பதாயிரம் ஒரு வாரத்தில் சம்பாதிச்சே? நம்ம ப்ராப்ளம் சால்வ்ட் தெரியுமா?" என்று கைகொட்டி சிரித்தாள்.

அன்று மாலையே யசோதாவை சந்தித்து சேர்த்து வைத்திருந்த பணத்தைக் கொடுத்தார்கள்.

யசோதாவும் கண்களில் நீர் பெறுக பணத்தை வாங்கிக் கொண்டு கைகளைத் தூக்கி அவர்களைக் கும்பிட்டாள்.

"எல்லாம் நல்ல விதமாக போயிட்டு இருக்கும்மா. என்னோட தோழியும் அவளோத்திற்கு கை மாத்தா ஐம்பதாயிரம் தருவதா சொல்லியிருக்கா. மண்டபம் அட்வான்ஸ், சாப்பாடு செலவு இரண்டையும் அவளே ஏத்துக்கிட்டா. இனி ரதிக்கு நகை எடுக்கணும். மாப்பிள்ளைக்கு டூ வீலர் வண்டி வாங்கணும். பணம் ரெடியாயிடுச்சு. ஆபீஸ்லே என்னோட வேலை பார்க்கும் ஒருவர், என் நிலைமையை பார்த்து பரிதாபப்பட்டு, கல்யாண வேலையை தன் வீட்டு வேலையாக எடுத்து செய்யறாங்க. நாட்டுல எவ்வளவு நல்ல வங்க இருக்காங்க"





என்று சொல்கையில் அவர் அழுது விட்டார்.

"கவலைப்படாதீங்க, உங்க பொண்ணு கல்யாணத்தை எங்க வீட்டுக் கல்யாணமா அமர்க்களப்படுத்துவோம். என்னவெல்லாம் வாங்கணும், செய்யணும்னு லிஸ்ட் போடுங்க, நாங்க அதை பாலோ பண்ணிடறோம். பி ஹாப்பி ஆன்ட்டி. இருபது நாட்களில் கல்யாணம் என்று, மஹதியும், வேகாவும் ஓடி ஓடி வேலை செய்தார்கள். பத்திரிகை கொடுப்பதிலிருந்து, மண்டப அலங்காரம், ஐயர் அரேன்ஜ் பண்ணுவது, கல்யாண பை போடுவது, பாத்திரங்கள் வாங்குவது, பூ மாலை ஆர்டர் செய்வது, போட்டோகிராபர் அரேன்ஜ் பண்ணுவது, மாப்பிள்ளை வீட்டுக்காரர்களை கவனிப்பது.

ஆனால் எல்லா சந்தோஷமும் கல்யாணத்திற்கு நான்கு நாட்கள் முன்பு 'பொட்'டென்று உடைந்து போயிற்று.

மாப்பிள்ளைக்கு ஊனமுள்ள பெண்ணை திருமணம் செய்ய விருப்பம் இல்லையாம்.

பெற்றோர் வற்புறுத்தலில் 'சரி' என்று சொன்னானாம். இப்பொழுது லெட்டர் எழுதி வைத்து விட்டு ஊரை விட்டே ஓடி விட்டான்.

இந்த கல்யாணத்திற்கு என்று ஓடி ஓடி உழைத்த மஹதியும், வேகாவும் ஷாக் அடித்தது போல் அதிர்ந்து போனார்கள்.

மணப்பெண் ரதி கொட்டக்கொட்ட அவர்களின் தோழியாகவே ஆகிவிட்டாள். வாழ்க்கையில் நிறைய சந்தோஷத்தை தொலைத்த அந்த ஊனமுள்ள பெண், மிகுந்த பரிதாபத்துக்குரியவளானாள்.

முதலில் விஷயம் அறிந்ததும் மஹதியும் வேகாவும் யாரிடம் எப்படிச் சொல்வது என்று புரியாமல் மலங்க மலங்க விழித்தனர்.

ஏதாவது செய்ய வேண்டும். இவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமே என்று மஹதிக்கு தலை சுற்றியது. எப்படியாவது மாப்பிள்ளையை கண்டு பிடித்து இரண்டு நாட்களில் கல்யாணம் பண்ணிவிடுவோமா?

இருவரும் பேசிப் பேசி ஒரு முடிவுக்கும் வர முடியாமல், அவரவர் இருப்பிடம் சென்றார்கள்.

தன் அறைக்குள் வந்த மஹதிக்கு இதே சிந்தனை தான்.

அதே சமயம் 'செல்' போன் மணி அடிக்க 'ஹலோ' சொன்னாள்

"30 வருஷமா உங்களோடு குப்பை கொட்டி வாழ்க்கையே வெறுத்து போச்சு."

"இப்படி பக்கமா பேசிச் சொல்றது நீயோ! கல்யாணமாகாமலும் இருந்து நிலை கும் வீட்டை பெருக்கி நான் தானே குப்பையைக் கொட்டிக்கிட்டு இருக்கேன்."

—துளசி ஸ்ரீராம், சாத்தூர்.





மஹதி.

மறுபக்கம் ஒலித்த குரலில் அவளின் நெஞ்சு படபடத்தது.

புவன்.

தடுமாறிய வார்த்தைகளை சரி செய்து,

"எப்படி இருக்கீங்க? என்ன விஷயம் திடீரென்று" என்று மஹதி கேள்விகளை கோர்க்க.

"சென்னை வந்தேன். ஹரிராம்பரி உன்னிடம் கொடுக்கச் சொல்லி ஒரு பார்சலை கொடுத்தாள். நேரில் வருகிறாயா? காபி டே ஷாப்பில் மீட் பண்ணுவோம். இன்னும் அரை மணி நேரத்தில்... ஓகே" என்று அவளின் பதிலை எதிர்பாராமல் போனை வைத்து விட்டான். சில நொடிகள் செல்போனையே பார்த்தாள் மஹதி. புவன் நிஜமாகவே பேசினானா? என்று ஆச்சர்யமாகிப் போனது.

வேகவேகமாக குளித்துவிட்டு, ஜீன்ஸும், குர்தாவுமாக பத்தே நிமிடத்தில் ரெடியாகி, வண்டியை எடுத்துக் கொண்டு பறந்தாள் மஹதி.

புவனைக் கண்டதும் மஹதியின் நெஞ்சம் வேக வேகமாக ஓடத் தொடங்கியது.

இதன் பெயர் இனக் கவர்ச்சியா, காதலா? என்று அவளுக்கு மேலும் குழப்பம் எழும்பியது. அவளைக் கண்டதும் அழகாகச் சிரித்தான்.

காபி ஆர்டர் செய்தான்,

அவளைப் பற்றி நிறைய விசாரித்தான். அம்மா, அப்பா எப்பொழுது வருகிறார்கள் என்று கேட்டான். பதிலுக்கு அவளும், அவளின் வீட்டாரையும், கான்பரன்ஸின் ரிசல்ட் பற்றியும் கேட்க...

காபி வந்தது.

காபியின் அடர்த்தியான நுரையில் அழகான இலைகள் பிரிண்ட் செய்யப்பட்டது போல ஆர்ட் இருந்தது. மிக அழகாக இருந்தது. எல்லா காபியும் ஒரே ருசிதான். ஆனால் 5 ரூபாய் காபிக்கும் நூறு ரூபாய் காபிக்கும் வித்தியாசம் இருக்க வேண்டுமல்லவா? நுரையிலேயே டிசைன், மனிதனின் ரசனையை என்னவென்று சொல்ல.

மஹதி காபியை மெல்ல மெல்ல உறிஞ்ச, அந்த டிசைனும் கூடவே கலைய,

"என்ன மஹதி முகம் எல்லாம் சோர்ந்து தெரிகிறது. என்ன விஷயம்?"

கண்கள் தெரித்து விடுமளவிற்கு கண்களை விரித்தாள் அவள். அவளின் வாட்டத்தை காணும் அளவு அவளை கவனிக்கிறானா? இவனிடம் சொன்னால் தான் என்ன? மன பாரம் குறையாதா? மாப்பிள்ளையை தேட உதவ மாட்டானா? இல்லை வேறு ஐடியா ஏதும் சொல்ல மாட்டானா?

சொன்னாள்.

எல்லாம்.

"ஓ... அப்படி என்றால் பணம் சேர்த்தது உன் திருமணத்திற்காக இல்லையா?" கண்கள் குறுகுறுக்க அவன் கேட்க,

இவள் ஒன்று சொன்னால், இவன் வேறு அல்லவா பேசுகிறான்.

மறுப்பாக தலையசைத்துவிட்டு, அவள் அவனையே பார்க்க,
சில நொடிகள் அவனிடம் பேச்சில்லை.

உண்மையில் உள்ளுக்குள் சிலிர்த்துப் போயிருந்தான். முன் அறிமுகமே இல்லாத குடும்பத்திற்கு பிரதிபலன் எதுவும் எதிர்பார்க்காமல் உதவும் நல்ல மனம் வேண்டுமே? மஹதியின் நல்ல குணங்கள் அவளை அவன் புறம் பலமாகவே ஈர்த்தது.

பிறகு தொண்டையைச் செருமி,

''மஹதி எனக்குத் தெரிந்த பையன், இங்கே நம் சென்னை கம்பெனியில் வேலை செய்கிறான். நல்ல சம்பளம், ஊனமுள்ள பெண்ணுக்கு வாழ்க்கை கொடுக்க வேண்டும் என்று வைராக்கியத்துடன் இன்னும் திருமணம் ஆகாமல் இருக்கிறான். அவனிடம் நான் பேசுகிறேன். எல்லாம் நல்லபடியாக நடந்தால், நீ சொன்ன அதே முகூர்த்தத்தில் மேரேஜ் பண்ணிவிடலாம்.

என்ன வேகமாக யோசிக்கிறான். அவன் சொன்ன செய்தியில் நெஞ்சில் ஒட்டியிருந்த சோகம் எல்லாம் பஞ்சாய் பறந்து போக... நல்ல படியாக நடக்க வேண்டுமே என்று கடவுளை வேண்டத் தொடங்கினாள் அவள். பெண்ணைப் பற்றி மேலும் சில விவரங்கள் கேட்டாள். போட்டோ இருக்கிறதா என்றாள்.

16

பேசியபடி 'காபி ஷாப்பிலிருந்து' வெளி வந்தார்கள். பார்க்கிங்கில் நின்றிருந்த காரின் வரவிற்காக அவன் சிறிது நேரம் நிற்க, மஹதியும் கூட நின்று பேசினாள்.

அந்த சில நிமிடங்களில், எதிர் சாரியில் இருந்த ஒருவன் அவர்களை ஓவியமாக வரைந்தே விட்டான்.

இப்படிப்பட்ட பெரிய இடத்து ஆட்களை வரைந்து உடனே காட்டினால், அவர்கள் பிரம்மித்து, ரசித்து அவன் கேட்ட பணம், கொடுத்து படத்தை வாங்கிக் கொள்வார்கள்.






அவர்களிடம் அனுமதி பெற்ற படம் வரைவது என்றால் நேரம் இல்லை... இது என்ன நியூசென்ஸ் என்று உடனே மறுத்து விடுவார்கள். இது அந்த ஓவியனின் அனுபவம். ஓவியத்தைக் கண்டு மஹதிக்கு ஒரே பிரம்மிப்பு.

''எவ்வளவு அழகாக கோடுகளை வைத்து என்ன பிரம்மாதமாக வரைந்திருக்கிறான்...'' ஐயோ... என் காதில் என்னோட எக்ஸ்ட்ரா ரிங்ஸ் தெரியறபடி... எவ்வளவு நுணுக்கமாக கவனித்திருக்க வேண்டும்...'' என்று மஹதி ரசித்துச் சொல்ல,

அவளின் ரசனையில் அவனின் கண்கள் கனிந்தன.

''பெயிண்டிங், ஆர்ட் எல்லாம் இண்ட்ரஸ்ட் உண்டா மஹதி?'', கேள்வி பிறந்தது அவனிடம்.

''ரொம்ப... பெயிண்டிங் பெர்பக்ஷன் வராது. நல்லா ரசிப்பேன். மைக்கேல் ஆஞ்சலீலோ பெயிண்டிங் பிடிக்கும். அப்புறம் நம்ம ஊர், மது பன்னி பெயிண்டிங், கலம் காரி, வரலி, பட்ட சித்ரா என்று பழங்கால ஓவியங்கள் ரொம்பப் பிடிக்கும். அதுவும் அந்தக் காலத்தில் ராமர், சீதா கல்யாண சமயத்தில் சீதா பிறந்து வளர்ந்த மிதிலை ஊரின் எல்லா வீட்டின் சுவர் முழுக்க வரையப்பட்ட கலர் புல்லான இந்த மதுபன்னி ஓவியம் ரொம்பவே என்னைக் கவர்ந்த பெயிண்டிங்!

''உங்களுக்கு எப்படி...? பெயிண்டிங்கில் ஏதாவது ஞானம் உண்டா?'' கேலியாக உதட்டைக் குவித்து மஹதி கேட்க, அவன் பார்வை அவள் உதட்டில் இருந்ததை மஹதி கண்டு கொள்ளவில்லை.

அவளின் கேள்வியில் அவன் உதடு ரகசியமான சிரிப்பில் விரிந்தது. அதே சமயம் அவன் கண்களில் ஏதேதோ ஜாலங்கள் தோன்றி அவளிடம் கேள்வி கேட்க, மஹதி கலவரப்பட்டுப் போனாள்.

என்ன?

என்ன விஷயம்?

''என்னுடைய ஆர்ட் கேலரியில் நான் வரைந்த ஓவியங்கள் வைப்பதற்கே இடம் இல்லை. நீ... என்னைப் பார்த்து ஓவிய ஞானம்... பற்றி...''- அவன் பேசியபடி சிரித்த சிரிப்பில் அதன் அழகில் கம்பீரத்தில், ஆண்மையில் தன்னைத் தொலைத்தாள்.

பிரமிப்பில் தொலைந்த சில நொடிகளில் தன்னை சமாளித்தாள். அவனுடைய 'பெயிண்டிங்ஸ்' பார்ப்பதற்கு நெஞ்சு வெகுவாக ஆசைப்பட்டது. அவளை உணர்ந்தவன் போல,

''வாய்ப்பு கிடைக்கும்போது, என்னுடைய பெயிண்டிங் காட்டுகிறேன் மஹதி, உனக்கு இவ்வளவு தூரம் கலையில் ஆர்வம் இருக்கும் என்று எண்ணவில்லை'' என்று சொல்ல,

மீண்டும் அவனைச்சந்திக்க கடவுளே வாய்ப்பைக் கொடுத்து விடு என்று வரம் கேட்கத் தொடங்கினாள். அது அவன் செய்த பெயிண்டிங்கை பார்ப்பதற்காக அல்ல. அவனையே உள்ளம் குளிர பார்ப்பதற்காக.

இப்படிப்பட்ட சந்திப்புகளில் தானே அவள் வாழ்க்கையே அடங்கியிருக்கிறது.

# 17

காபி 'டே' யில் அவனை பார்த்த கணம், மஹதிக்கு எதற்காக அங்கே சென்றோம் என்றே நினைவில் இல்லை.

அறைக்கு மீண்டும் வந்து உடை மாற்றும்பொழுது, "அட... ஹீரோ பார்சல் ஏதோ எனக்காக கொடுத்தனுப்பினான் என்றானே. வாங்கிக் கொள்ளவில்லை. யோசித்துப் பார்த்ததில் அவன் அருகில் மேஜையில், சேரில் எங்கும் பார்த்த மாதிரி ஞாபகம் இல்லை. மறந்திருப்பானா, மீண்டும் போன் பண்ணி, எங்கே பார்சல் என்று கேட்க கொஞ்சம் கூச்சமாகவும் இருக்கவே, அவனே அழைப்பான் என்று காத்திருந்தாள்.

மறந்தான்.

போன் செய்தான்.

ஆனால் பார்சல் விஷயத்தைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. மாப்பிள்ளை பையனைப் பற்றிப் பேசினான். "அவனிடம் விஷயம் எல்லாம் பேசியாகி விட்டது. அவன் அப்பா, அம்மா, தம்பி எல்லாம் பெண் பார்க்க இன்னும் ஒரு மணி நேரத்தில் அந்த பெண் வீட்டிற்கு வருவார்கள். தேவையான ஏற்பாட்டை செய்துவிடு" என்று பேசிவிட்டு வைத்து விட்டான்.

உடனே லேகாவுக்கு இவள் போன் செய்ய, இருவருமாக அரை மணி நேரத்தில் யசோதாவின் வீட்டில் இருந்தார்கள்.

ரதியை விரும்பி ஒரு மாப்பிள்ளை ஒரு காசு கூட வாங்காமல் மணக்க தயாராக இருப்பதாக அறிவித்தார்கள்.

ஓடிப்போன மாப்பிள்ளை விஷயத்தையும் மெதுவாகச் சொல்லி, அடுத்த மாப்பிள்ளை தயாராக இருப்பதையும் கூடவே சொன்னதால் அதிர்ச்சியில்லாமல் தப்பித்தார்கள். இன்னும் அரை மணிநேரத்தில் மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வருவார்கள். ரதியை ரெடி பண்ணுவோம் என்று, அவசரப்படுத்தினார்கள்.

பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டில் மாருதி காரில் வந்தார்கள். படித்த குடும்பம், பார்வை, பேச்சு ஒன்றிலும் அலட்டல் இல்லை. மூச்சுக்கு முன்னூறு முறை "சார்ரே" சொல்லிட்டாங்க. இதுக்கு மேலே வேறு என்ன வேணும். சார் சொன்னால் சரியாகத் தான் இருக்கும் என்று மாறி மாறி யுவனைப் பற்றி மரியாதையாக பேசிக் கொண்டார்கள்.

அவன் வேலை பார்க்கும் ஆபீஸ் அட்ரஸ், இடத்தின் முகவரி, உறவினர்களின் வீட்டு அட்ரஸ், சொத்து, இருப்பு, சம்பளம் எல்லாம் சொன்னார்கள். "பெண் கொடுக்கப் போகிறீர்கள், முடிந்த அளவு நன்றாக விசாரித்துக் கொள்ளுங்கள்" என்று பெரும் தன்மையாகப் பேசினார்கள்.

யசோதாவிற்கு மகளின் அதிர்ஷ்டத்தைக் கண்டு வாயடைத்துப் போனது.

நிச்சயித்திருந்த நாள் திருமணம் நடந்தது.

ரதி முகத்தில் அழுகையும் சிரிப்பும் கலந்து மஹதி, லேகாவின்



காலில் விழுந்து சேவித்தாள்.

"எல்லாம் உன் பக்கத்துணை நிலையினால் நடந்தது. அவருக்குத்தான் தாங்க்ஸ் சொல்லணும். இல்லாவிட்டால் அந்த பெரிய மனிதன் அறிமுகம் நமக்கெப்படி கிடைக்கும். சூப்பர்... மஹதி" என்று லேகா சொல்ல,

மஹதியுவன் அவர்கள் இட்டம் போட்டு சொதப்பின கடத்தல் மாப்பிள்ளை என்ற விஷயத்தை லேகாவிடம் சொல்லத் தயங்கினாள்.

"ரதி, ராஜன் கல்யாணத்திற்கு அவரும் வருவார் என்று எதிர்பார்த்தேன் மஹதி. இருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்."

"அதை விடு, யசோதா ஆன்ட்டிக்கு பத்துவயசு குறைஞ்சது மாதிரி முகம் எவ்வளவு பிரகாசிக்குது தெரியுமா?" என்று மஹதி சொல்ல,

"எங்க அம்மா அப்பாவுக்கு என்ன சந்தோஷம் தெரியுமா? பொண்ணுக்கு பொறுப்பு வந்துடுச்சுன்னு? எப்படி?ன்னு ஒரே மலைப்பு. அதுவும் யசோதா ஆன்ட்டி அவுங்க கையை பிடிக்க கண் கலங்கிட்டாங்களாம். நம்ம இரண்டு பேரும் இல்லாட்டி இந்த ஜென்மத்தில் அவங்க பொண்ணுக்கு கல்யாணம் நடந்திருக்காதுன்னு." என்று லேகா சொல்ல,

"அப்ப வீட்டிலே உனக்கு ராஜமரியாதைன்னு சொல்லு"

"இல்லப்பா. ராணி மரியாதை" கண் சிமிட்டி சிரித்தாள்.

நாட்கள் பல சென்றன.

அம்மா அப்பாவை மனம் தேடத் தொடங்கியது.

வாழ்க்கையில் சுவாரசியம் குறைந்தது போல் இருந்தது.

ரதியின் திருமணம் என்று கொஞ்ச நாட்கள் ஜெட் வேகத்தில் போன நாட்கள், அதன் பிறகு நகரவேயில்லை. இடையில் இருமுறை ஹிராம்பரி போன் செய்தான். காதம்பரியும் ஹலோ சொன்னாள். டில்லிவந்து ஒரு வாரம், அவர்களுடன் தங்கும்படி அழைப்பு விடுத்தாள். ஆனால் சம்பந்தப்பட்டவன் சீனில் வரவேயில்லை.

# 18

கோடை லீவில் அமெரிக்க விசா முடிந்து விட்டது என்று தாயும் தந்தையும் சென்னை திரும்ப மஹதிக்கு அப்பாடா என்றிருந்தது.

வந்ததிலிருந்து இரட்டையர்களின் புராணம் தான். குழந்தைகள் கண்ணுக்குள்ளேயே இருந்தார்கள். மஹதி ஏற்கனவே ஈ மெயிலில் இரட்டையர்கள், போட்டோவைப் பார்த்திருந்தாள். டி.வி. விளம்பரப் படங்களில் பார்த்த குழந்தைகள் போல அவ்வளவு அழகு. நேரில் பார்த்து கொஞ்ச அவளுக்கு ஆசை நிரம்பியது.

"இப்போ மாப்பிள்ளையோட அம்மா அங்கே வந்திருக்காங்க. அதனால் குழந்தைகள் பார்க்க ஹரிணி [illegible] மாட்டா. விசா கிடைக்க எவ்வளவு கஷ்டமா இருக்குப்பா" என்ற தாயார் மூத்த மகளின்

நினைவாகவே இருந்தாள். ஆனால் மஹதி ''அமெரிக்காவில் மாப்பிள்ளை'' ரெடியாகியிருக்கிறது என்று எந்த வாய் முகூர்த்தத்தில் சொன்னாளோ... அது நடந்துவிட்டது.

''அங்கே உன் அக்காவின் பக்கத்து பிளாட்டில் ஒரு பையன். அடா அடா என்னவொரு ஹேண்ட்சம் தெரியுமா? உனக்கும் அவனுக்கும் ஜோடி பொருத்தம் அப்படி... இருக்கும்.

''ஹேண்ட்சம் விடு. வெரி இண்டலிஜெண்ட். சக்தி வளைத்து பார்த்தால், நம்ம தாத்தச் சொந்தம் வேறு... குணம் தங்கம். அங்கே எங்களுக்கு எப்படி ஹெல்ப் பண்ணினான் தெரியுமா? உன் போட்டோவைப்பார்த்து அவனுக்கு ரொம்ப விருப்பம். அடுத்த வாரம் இந்தியா வராப்பல. கடவுள் அருளால் நீயும் அக்காவும் பக்கத்து பக்கத்துலேயே இருக்கப் போறீங்க.''- என்று தாயும், தந்தையும் மாறி மாறி பேசநினைத்தாள் மஹதி.

''முடிவே பண்ணிட்டீங்களப்பா.'' அவள் பேசுகையில் சப்தமே எழவில்லை.

''ஆமாம்டா... இதைவிட நல்ல சம்பந்தம் கிடைக்கறது கஷ்டம். உனக்கு எல்லா விதத்திலேயும் இணை. எங்களுக்கு ரொம்ப பிடிச்சிட்டது.''

என்ன சொல்லி மறுப்பாள்?

புவனின் மேல் இருந்தது காதலா இனக் கவர்ச்சியா என்ற பெரிய கேள்வி, அவளின் கல்யாண பேச்சு தொடங்கிய மாத்திரத்தில் ஐயம் திரிபட புரிந்து போயிற்று.

புவன் அவள் இதயத்தில் சின்ன குண்டூசி கூட நுழைய முடியாத அளவிற்கு நிரம்பி இருந்தான். அவனைத் தவிர யாரையும் அவளால் கணவனாக வரிக்க முடியாது என்பது புரிந்தபோது, திகைத்துப் போனாள். அழகிலும், செல்வத்திலும், கண்ணியத்திலும், அடக்கத்திலும் எத்தனை உயர்ந்தவன். அவனின் உயர்வோடு அவனை அடைய எல்லா பெண்களும் தான் ஆசைப்படுவார்கள். இதில் அவள் என்ன சிறப்பு? அவள் அறிந்தே, அவனையே சுற்றிக் கொண்டு ரூபி. ரூபியை புவன் காதலிக்கிறானா? இந்தக் கேள்வி மிகப் பெரியதாக அவளுள் எழுந்தது. விடை கிடைக்காமல் தலை வெடித்துச் சிதறி விடும் போல் வலித்தது.

காதல் ஓர் உந்து சக்தியைக் கொண்டது. எதையும் அசைத்துப் பார்க்கிற ஆற்றல் அதனிடம் இருக்கிறது. இந்த காதல் இல்லாவிட்டால் வாழ்க்கையில் சுவாரசியம் ஏது?




புவனுக்கு அவளைப் பற்றின நினைப்பு இருக்குமா? இங்கே மஹதி என்றொரு ஜீவன் இருப்பதையே மறந்திருப்பானா?

''ஏய் மஹதி, என்ன பேச்சையே காணும். அதற்குள் கல்யாண கனவா''- குலுங்கிச் சிரிக்கும் தந்தையே நேர் பார்வையாகப் பார்த்தாள் மஹதி.

''அப்பா 'வாக் கொன்றும்' கொடுத்துவிட வில்லை. கல்யாணம் செய்து கொள் என்று என்னை போர்ஸ் பண்ண மாட்டீங்கதானே.''

''முதலில் அவன் வரட்டும்...பார்... உனக்கு கண்டிப்பாகப் பிடிக்கும்.''

''பிடிக்கவில்லை என்றால்?''

''கல்யாணம் பண்ணிட்டு வாழப் போறது நீ. உனக்கு பிடிக்காட்டி எதுவும் இல்லை. அதுக்குள்ளே ஏன் உன் கண் கலங்குது?''- பதட்டமானாள் தாய்.

''சுதந்திரமாக வளர்க்கப்பட்டவள் நீ. நல்லது கெட்டது உனக்குத் தெரியும். புரியும். நீ எது செய்தாலும் அது சரியாக இருக்கும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு உண்டு. உனக்குப் பிடிக்காதது எதுவும் நடக்காது. சின்னப் பிள்ளை மாதிரி கண் கசக்கக் கூடாது.''

19

ஆறுமாத காலம் அமெரிக்காவில் நண்பனாக பல விஷயங்களில் உதவிய காந்தனுக்கு வீட்டில் ஓர் அறை ஒதுக்கப்பட்டது.

குறும்பு கூத்தாடும் கண்களுடன், வசீகரமாக இருந்த காந்தன் எப்பொழுதும் மஹதியிடம் வம்புக்கு வந்தான். ஒரு நல்ல நண்பனுக்குரிய அத்தனை தகுதிகளும் அவனிடம் இருப்பதாக மஹதி உணர்ந்தாள். அதை அவனிடம் சொல்லவும் செய்தாள்.

''லெட் அஸ் ஸ்டார்ட் எஸ் ப்ரண்ட்ஸ்'' என்று உடனே அவனோடு ஒட்டி பேசினான்.

சிரிக்க சிரிக்கப் பேசினான். அவனுக்குப் பன்னிரண்டு வயசாகும் போது குடும்பம் மொத்தமும் யூ.எஸ்க்கு குடி புகுந்ததாம். தாய், தந்தை, தங்கை, தம்பி எல்லோரும் அங்கு தானாம். ஆனால் தமிழ் சுத்தமாக பேசினான். சொந்த பந்தங்கள் நிறைய இந்தியாவில் இருந்தார்கள்.

தாய், தந்தை தந்த சுதந்திரத்தில் அவனிடம் நிறைய உரிமை எடுத்துக் கொண்டான். அவன் அம்மா, தங்கை யூ.எஸ். லிருந்து தந்திருந்த இந்திய ஆடைகள் அடங்கிய லிஸ்ட்டுடன் மஹதியுடன் கடை கடையாக ஏறி ஷாப்பிங் செய்தான். விமலாவும் சில சமயங்களில் அவர்களுடன் சேர்ந்து கொள்வார்.

அவன் ஊர் திரும்பும் நாளும் நெருங்கியது. ஒரு நாள் இந்திய கைவினைப் பொருட்கள் வாங்க வேண்டும் என்று, அவளும் காந்தனும் கிளம்புகையில் லேகாவும் வர, அவளும் அவர்களுடன் சேர்ந்து கொண்டாள்.

இந்திய கைவினைப் பொருட்களுக்கு பெயர் போன, 'பூம்புகார்' கடையில் நுழைந்தவுடன், காந்தன் ஒரு புறமாகவும், மஹதியும் லேகாவும் எம்ப்ராய்டரி பகுதிக்குள் நுழைந்தார்கள்.

லேகாவும் எம்ப்ராய்டரி பிடித்துத்தரலாம் போலவிருக்கு லேகா,

''நீக்குக்கூட இங்கே ஆர்டர் பிடித்துதரலாம் எம்ப்ராய்டரியிலும் நல்ல ஃபினிஷிங் இருக்கு. வா அவன் போகும் எம்ப்ராய்டரியிலும் விசாரிப்போம்'' என்று மஹதி சொல்ல,

''நேற்று ரிஜிஸ்டர் டிபேட்டரில் பார்த்தேன் மஹதி, ஹஸ்பண்ட் கூட வந்திருந்தாள். ரொம்ப சந்தோஷமாயிருக்கிறாள். பார்க்கும் போது சந்தோஷமாக இருந்தது''- என்று பேசியபடி நடந்த லேகா, திடீரென்று,

''மஹதி...''. என்று அவள் கையைப் பிடித்து இழுத்து தூண் மறைவில் நிறுத்தினாள்.

''என்ன லேகா? என்ன ஆச்சு? என்ன விஷயம்? யாரைக் கண்டு ஒளிகிறாய்?''- புருவத்தை சுருக்கியபடி மஹதி கேட்க, லேகா பதில் பேசாமல் யாரையோ எக்கி எக்கி பார்ப்பதைக் கண்டு சிரிப்பு வந்தது.

''யாரடி இப்படி உத்து உத்துப் பார்க்கிற. உன்னைப் பார்த்தால் தமாஷா இருக்கு.''- என்று சிரிக்க,

''அடி... மஹதி, நீ தானே சொன்னே, தப்பித் தவறிக் கூட அவன் கண்ணில் படக் கூடாதென்று, அவனுக்குப் பயந்து மதுரைப் பக்கமே தலை வைத்துப் படுக்கக் கூடாதுன்னு சொன்னது நீ தானே. அந்த அவன்... டூப் மாப்பிள்ளை... நம்மை கண்டு பிடிக்க சென்னையில் தான் திரியறான் போல...

உதட்டைக் கடித்தாள் மஹதி.

இதுவரை உயிர் தோழியான லேகாவிடம் ஒரு விஷயத்தையும் அவள் மறைத்ததில்லை.

யுவன் விஷயத்தை, அறிமுகத்தை ஏன்? தன்னால் லேகாவிடம் பகிர்ந்து கொள்ள முடியவில்லை என்பது மஹதியின் உள் மனதிற்கு தெரியும்.

சிறுவயதிலிருந்து கூடவே இருக்கும் லேகா, யுவன் பற்றி மஹதி பேச ஆரம்பித்த நொடியில் தோழியின் சலனத்தை கண்டு கொள்வாள். பின் அந்த ஒருதலைக் காதலினால், அவள் பரிதாபத்தையும் தாங்கிக் கொண்டு, இருப்பதென்னவோ... மஹதிக்கு விருப்பமில்லை. கடைசி வரை மறைத்து விடலாம்... என்று எண்ணினாள், இன்று வகையாக மாட்டிக் கொள்வாள் போலிருக்கிறதே, கலவரமானாள் மஹதி.

லேகா மஹதியின் மாற்றங்களை கவனிக்கவில்லை. அவள் கவனம் முழுவதும் ''டூப் மாப்பிள்ளையிடம் இருந்தது.

''யாரோ ஒரு பெண்ணும் அவன் கூட நிற்கிறாள். வேறே... கல்யாணம் பண்ணிட்டான் போல. இவ்வளவு நாட்கள் வைத்திருப்பானா? எனக்கென்னவோ அவன் கண்டு பிடிப்பான் என்று தெரியவில்லை. வேண்டுமானால் ஒரு முறை அவன் முன்னால் ஒரு நடைப் போவோம். கண்டு பிடித்து விட்டால்... ஏதாவது சொல்லி சமாளிக்க நமக்கா... தெரியாது.

அதுவும் முடியாவிட்டால், வாசல் பக்கமா தான் இருக்க... விடுஜூட் தான்...'' என்று கண்களைச் சிமிட்டியபடி லேகா எக்லைட்டாக,

மஹதி பதட்டமானாள்.

''இல்லே... வேண்டாம் லேகா''- என்று மஹதி சொல்வதை காது கொடுத்துக் கேட்காமல், மஹதியின் கையை அவள் கையுடன் இறுக கோர்த்துக் கொண்டு லேகா, துருப்பாக முன்னாடி நடக்க,

யுவன் மஹதியைப் பார்த்து விட்டான்.

மஹதியைக் கண்டதும் அவன் கண்களில் மின்னல் வெட்டியது போன்ற ஏதோ சங்கேத மொழி தோன்றி மறைந்தது.

''மஹதி...'' என்று அழைத்தபடி அவன் ஒற்றைப் புருவத்தை அழகாக உயர்த்தியபடி அவளை நோக்கி வர லேகா அதிர்ச்சியடைந்தாள்.

''மஹதி முகம் மட்டும் இல்லை, பெயர் கூட தெரிந்து வைத்திருக்கிறான். சட்டென்று வாசலில் இறங்கி ஆட்டோவில் ஏறி பறந்திடுவோம். காந்தனை செல்போனில் பேசி நாம் இருக்கிற இடத்திற்கு வரச்சொல்லி சமாளிப்போம்.

இந்த பீக் அவர் டிராபிக்கில் நம்மை ஃபாலோ பண்ண முடியாது என்று லேகா அவசரப்பட்டு நகர முயற்சிக்க, இந்த முறை அழுத்தமாக அவள் கையைப் பற்றி தடுத்து நிறுத்தியது மஹதி.

அதற்குள் யுவனும் அவர்கள் அருகில் வந்து விட,

அவன் 'ஹலோ'விற்கு பதில் 'ஹலோ' சொல்வது அவள் முறையாயிற்று. அவனுடன் வந்திருந்த பெண்ணையும், கூடவே நின்றிருந்த சில வெளிநாட்டு நண்பர்களையும் அவன் அறிமுகப்படுத்த, மஹதிக்கு லேகா பிரம்மை பிடித்தது போல் அதிர்ந்து நிற்பது புரிந்தது.

தன்னை சமாளித்தபடி,

''என் உயிர் தோழி லேகா''- என்று தோழியை அறிமுகப்படுத்த அவளை அறிந்து கொண்ட விதமாக, அவன் ஒற்றை புருவம் ஏறி இறங்கியது. உதடு சிரிப்பில் துடித்தது.

அவனுடன் வந்திருந்த வெளிநாட்டினர், வாங்கிய பொருட்களை

''தலைவருக்கு ஆனாலும் ரொம்ப அதிகமான தொலை நோக்குப் பார்வை தான்!''

''எதைச் வச்சு சொல்லறீங்க?''

''தனக்கு வரப்போற கொள்ளு பேரன் பேத்திக்காகவும் இப்பவே, சொத்து சேர்க்கி றாங்களா பாரேன்!''

-ர.யமுனா ரங்கநாதன், திருச்சி.



'பில்' போடுவதற்காக பில் கவுண்டர் சென்று விட, புவனின் கண்களில் குறும்பு கூத்தாடியது.

''உங்களுடைய 'கூட்டு கடத்தல்' சமாச்சாரத்தில் அடிபட்ட மத்த மூவரை எப்பொழுது அறிமுகப்படுத்தப் போகிறாய் மஹதி.''

பதிலாக மஹதி அவனிடம் ஏதோ பேச, கண்கள் தெரிந்து விடும் போல மஹதியை முறைத்துக் கொண்டு நின்றாள் லேகா.

அதற்குள் காந்தனும் அவர்களைத் தேடி வந்து விட, அவனையும் புவனுக்கு அறிமுகப்படுத்தினாள்.

அமெரிக்காவில் இருந்து வந்திருக்கிறான் என்றதுமே, புவன் புரிந்து 'போய் புருவம் உயர்த்தி கேள்வியாய் மஹதியை நோக்க, பதில் சொல்ல முடியாமல் தலையை கவிழ்த்தாள் மஹதி. புவன் என்ன நினைக்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

ஆமாம் என்று சொல்லவும் பிடிக்கவில்லை. இல்லை என்று மறுக்கவும் பிடிக்கவில்லை. அறிமுகப்படுத்தப்பட்ட புவனும், காந்தனும் சுவாரசியமாக பேச, அதிர்ச்சி தெளிந்த லேகா, மஹதியை கண்களாலேயே கேள்விகள் கேட்டாள். பதில் ஒன்றும் சொல்ல முடியாமல் மஹதி அவள் புறம் முகத்தை திருப்பவேயில்லை. முடிவில்,

''மஹதி காதம்பரி உன்னிடம் கொடுக்கச் சொல்லி ஒரு பார்சல் கொடுத்தாள். மாலை ஐந்து மணிக்கு, போன முறை மாதிரி காபி டேவில் மீட் பண்ணலாமா?... சரியாக ஐந்து மணி'' என்று சொல்லி விடை பெற்று, வந்திருந்த வெளிநாட்டவருடன் கிளம்பி விட்டான்.

போன முறை ஷிராம்பரி கொடுத்த பார்சலையே வாங்கிக் கொள்ளவில்லை. எத்தனை ஆசையாய் அவர்கள், இவளுக்காக வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள். அவர்களிடம் பழகியது சில மணி நேரங்கள் தான். அதிலேயே எத்தனை பிரியம்!!

''அது என்ன போன முறை மாதிரி... இது மாதிரி எத்தனை வாட்டி அவனை மீட் பண்ணியிருக்கே...? என்னவெல்லாம் நடந்தது? இன்னும் எதை எல்லாம் என்கிட்டேயிருந்து மறைச்சிருக்கே. அவன் விட்டால் உன்னை கண்களாலேயே விழுங்கி விடுவதைப் போல் பார்க்கிறான். மஹதி டெல் மீ வாட் இஸ் ஹாப்பனிங்?'' காந்தனுக்கு கேட்காமல் மஹதியின் காதில் கேள்விகளை மூச்சு விடாமல் லேகா கேட்க,

பதிலொன்றும் பேசாமல் மஹதி குறிப்பாக காந்தனைப் பார்க்க, லேகா மௌனமானாள்.

வீட்டின் தனியறையில், மஹதியிடம் ஒன்று விடாமல் விஷயத்தை வாங்கிய லேகா பிரமித்து தான் போனாள்.

''இத்தனை விஷயங்கள் நடந்திருக்கிறது! இதில் நீ என்னிடம் இருந்து மறைப்பதற்கு... அது தான் ஏன்... புரியவில்லை'' என்று லேகா புருவத்தை உயர்த்த,



அவனின் கேள்விக்கு மஹதியின் சிவந்த கன்னங்கள் பதில் தர, லேகா அதிர்ந்தாள்.

மாலை புவனைப் பார்க்க என்று அவள் வீட்டிலிருந்து காபி 'டே' ரெஸ்டாரெண்டிற்குக் கிளம்பும் போது, காந்தனும் ''மஹதி'' என்று அழைத்தபடி வந்தான்.

''ஆர் யு கோயிங் அவுட்? உனக்கு தெரியுமில்லை? டுமாரோ ஐம் லீவிங் டு அமெரிக்கா. அதற்கு முன் உன்னிடம் பேச வேண்டும். தட் வில் கீப் மீ எனர்ஜிடிக் ஃபார் சம் டைம்.''

அவனிடம் நேரிடையாக 'மறுப்பு' சொல்லி விட்டாள் என்றாலும் சுற்றிச் சுற்றி அவளை திருமணம் செய்வதிலேயே நின்றான்.

''இரண்டு பேருமா வெளியே போய்ட்டு வாங்களேன்'' தாயின் அனுமதியில் ''தாங்க்யூ ஆன்ட்டி...'' என்று சந்தோஷமாக கத்தியபடி அவன் காரை எடுத்தான்.

உதட்டைக் கடித்தபடி ஸ்கூட்டியை ஓரமாக நிறுத்தி விட்டு, அவனுடன் காரில் ஏறி அமர்ந்தாள்.

இவனிடம் என்ன சொல்ல என்று மனம் வேகமாக வேலை செய்தது.

''ஒரு ஃப்ரண்டை பார்க்க வேண்டியதும்.''

''தட்... சேப்.. பூம்புகார் கடையில் பார்த்தோமே அவர் தானே, உன்னைக் கூட காபி ஷாப் வரச் சொன்னாரே... நைஸ், வெரி ஸ்மார்ட் அண்ட் இன்டலிஜண்ட். நானும் ஒரு ஹலோ சொல்லுறேன்.

புவனிடம் தனிமையில் என்று பேசுவதற்கு தான் பெர்சனலான விஷயங்கள் அவளிடம் இருக்கிறதா என்ன? அதனால் காந்தன் கூட வருவதொன்றும் பெரிய விஷயம் இல்லையே...''

மனம் சொன்னாலும்... இருந்தாலும்...

மஹதியையும், காந்தனையும், சேர்ந்தாற் போல கண்டதும் புவனின் புருவங்கள் ஏறி இறங்கியது.

ஹாய் காந்தன் என்று இவனும், ஹலோ புவன் என்று அவனும் உடனேயே நட்புறவாடினார்கள். சில நிமிடங்கள் வேறு பேச்சில் கழிந்தது.

''அடுத்த முறை இந்தியா வருவதென்றால், அது என் கல்யாணத்திற்குத்தான்'' - என்று புவனின் கேள்விக்கு காந்தன் சொல்ல, புவனின் நேசர் பார்வை, மஹதியை ஊடுருவியது. அவன் பார்வையில்

''டாக்டருக்கு ரொம்ப கடமை உணர்ச்சி...''

''எதை வைச்சு சொல்றே?''

''பேஷண்ட் அவுட்டானாலும் ஆபரேஷனை முடிக்காமல் வரமாட்டார்!''

-உதய்குமார், விக்கிரமசிங்கபுரம்.



தெரிந்த சலனத்தில் அர்த்தம் மதுநிக்கு புரியவில்லை. ஆனால் அவன் கண்கள் மதுநியிடம் ஏதோ மிரட்டுவது போன்ற உணர்வை, அவனுக்குத் தந்தது.

''உங்க மேரேஜ் எப்போ?'' என்று காந்தனிடம், மதுநியைப் பார்த்தபடியே கேட்க,

காந்தனுக்கு முகத்தில் ஒளிவட்டம் தெரிந்தது.

''கூடிய சீக்கிரம்...'' என்று கூறி விட்டு மதுநியிடம் கண்ணடிக்க, மதுநி வேறெங்கோ பார்த்தாள். காந்தன் பேசியது அவளுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. இருந்திருந்து அதுவும் இந்த... புவனிடம்... போய்...

அதற்குள் நான்கு டேபிள் தள்ளி காந்தனுடைய உறவினர்கள் யாரோ இருக்க, அவன் எக்ஸ்க்யூஸ் மீ என்று நகர,

''அடிக்கடி சென்னை வருவீர்களா?'' மதுநி காந்தன் பேசிய பேச்சில் இருந்து கவனத்தை திசை திருப்ப கேள்வி கேட்க சில நொடிகள் அவன் கண்கள் அவளிடம் நிலைத்தது. பின், தொண்டையை செருமியபடி,

''என் சென்னை தொழிற்சாலை வேலைகள்... கிட்டத்தட்ட முடிவடைகிற நிலையில் வந்து விட்டது. தொழிற்சாலை இன்னாகுரேஷன் வேலை தான் முதலில் இருக்கும் என்று நினைத்தேன், ஆனால் அதற்கு முன் வீட்டில் திருமணம்...''

அவனை பேசி முடிக்க விடவில்லை, அவள். அவளின் இதயம் கனக்கப் போனது. அந்த கனங்களின் வேகத்தோடு,

''என் கல்யாணம் உங்களுக்கா..?'' . கேட்டு, அவன் பதிலுக்காக காத்திருந்த சில பல நொடிகள். அவள் நெஞ்சம் வேலை செய்வதை நிறுத்தியிருந்தது.

அவன் பார்வை நேரச் கூர்மையுடன் அவளை மீண்டும் துளைக்க அவள் அதன் அர்த்தம் புரியாமல் இமைத் தாழ்த்தினாள்.

''நான் காதலிக்கும் பெண் வேறொருத்தரை மணந்தால் நான் அவளை மறந்து வேறு பெண்ணை நாடிவிட வேண்டும் என்று எந்த வேதம் சொல்கிறது.'' அழுத்தமான அவன் குரலில்,

முகத்தில் அறை வாங்கியது போலிருந்தது அவளுக்கு. அவன் வாய் வழி, அவன் ஒரு பெண்ணை நேசிக்கிறான் என்று கேட்டது, அவளை இம்சித்தது.

வேறொரு பெண்ணை நேசிக்கும் அவனை அவள் உயிராக நேசிக்கிறாள் என்பது பெரிய வேதனையாக இருந்தது.

இங்கே புவன் மனநிலையோ...

காந்தன், கல்யாணம் என்று மதுநியை கட்டிக் காட்டி பேசியது புவனை கடுமையாக தாக்கியது. அவன் மனதில் மதுநி இருக்க, அவள் வேறொருவனை மணக்கப் போகிறாளா? என்ற பேச்சு, அவனை இறுக வைத்தது.

அமெரிக்க மாப்பிள்ளை என்று மதுநி முன்பே கூறியிருந்த போதும், மதுநியின் செய்கைகள் பல மெல்ல மெல்ல தன்னால் அவள் ஈர்க்கப்படும் அறிகுறிகள் தெரிந்ததால், எப்படியும் அவள் மனம் தானாக அவன் மேல் படரும் என்று நம்பியிருந்தான்.



அவன் மனதில் என்னவிருக்கிறது என்று அறியாமல் அவன் மனதை திறந்து காட்டுவது அவனின் ஆண்மைக்கு அவமானம்.

அவன் ஒருவன், அவள் வாழ்க்கையில் இருக்கிறான் என்பதை நினைவூட்டவே அடிக்கடி இந்த சந்திப்புகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறான். சதுரங்கத்தில் காய்களை நகர்த்தி ஆட்டத்தை கைப்பற்றுவது போல, மெல்ல அவள் மனதை முற்றுகையிட அவன் ஒவ்வொரு கட்டத்தையும் யோசித்து வைத்தான்.

அவன் தோற்று விடுவானா?

## 21

நாட்கள் பல உருண்டோடியது.

ஒரு நாள் எதிர்பாராத விருந்தாளியாக வந்தவர்கள், புவனின் தாயார் துர்காவும், காதம்பரியும்.

''நீ வீட்டில் இருக்கிறாயா மதுநி? இன்னும் அரை மணி நேரத்தில் உன் வீட்டில் இருப்போம்'' - என்று போனில் காதம்பரி பேசியதிலிருந்து ஆவலோடு அவர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

''வாங்க'' என்று முகம் முழுக்க புன்னகையோடு வரவேற்று தன் பெற்றோரையும் அறிமுகம் செய்து வைத்தாள்.

ஹீராம்பரிக்கு திருமணம் நிச்சயமாகியிருக்கிறதாம். திருமண அழைப்பை எடுத்து வந்திருந்தார்கள்.

ஒரு பெரிய வெள்ளித் தட்டில், தாய்க்கும், அவளுக்கும் பட்டுப் புடவை, தந்தைக்கு பட்டு வேஷ்டி சட்டை, பூ, பழம் வைத்து பத்திரிக்கை கொடுத்தார்கள். ''திருமணத்திற்கு ஒரு வாரம் முன்பே வர வேண்டும்'' என்று குடும்பம் முழுவதற்கும் அழைப்பு விடுத்தார்கள்.

அன்று புவனும், ஹீராம்பரியின் திருமணத்தைப் பற்றித்தான் பேசியிருப்பான் போல. இவள்தான் முந்திரிக் கொட்டை போல் ஏதேதோ கேட்டு வாங்கி கட்டிக் கொண்டாள். அன்று தொலைந்தது அவள் நிம்மதி.

துர்கா பெற்றோருடன் பேசிக் கொண்டிருக்க, காதம்பரிக்கு வீடு முழுவதும் சுற்றிக் காட்டினாள். அவளுடன் பேசியபடி வேண்டிய விவரங்களையும் அறிந்து கொண்டாள். முக்கியமாக ஒன்று.

அவளுக்கும் திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றனவாம். ஏதோ வெளிநாட்டு பையனாம். காதல் திருமணம் முழுக்க, முழுக்க புவனின் முனைப்பால் நடக்கிறதாம்.

புவன் இடைக்க மாட்டான் என்று தெரிந்தவுடன் அவளும் வேறு பக்கம் மனதை மாற்றி விட்டான் என்று நினைக்கிறேன். ஆனால் கொஞ்ச நாட்கள் அவன் அண்ணனை படுத்திய பாட்டில், எங்கே அண்ணன் ரூபியின் மேல் 'காதல்' என்று விடுவானோ என்று எப்படி பயந்தோம் தெரியுமா?

இந்த ரூபியால் எங்கள் குடும்பத்திலேயே முதன் முறையாக ஒரு இங்கிலீஷ்காரன் மருமகனாக நுழைகிறான். மாயா முத்திலும் எதிர்ப்பு.

புவன் அண்ணா பேசிப் பேசி மாமாவை கரைத்து விட்டான்.

ரூபியை அவன் காதலித்திருந்தால்... காதம்பரி சொல்வதைப் பார்த்தால் அவன் காதல் ஈடேறுவதற்கு தடை ஒன்றும் இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை.

ஆனால் அன்று காபி டேயில் நடந்த பேச்சை நினைத்த போது, அன்று சொன்னானே,

தான் காதலித்த பெண் வேறொருவரை மணந்தால் நானும் உடனே வேறொருத்தியை நாட வேண்டும் என்று எந்த சாஸ்திரத்தில் சொல்கிறது என்று.

அப்போது... அவன் காதலித்த பெண் ரூபி என்றல்லவா முடிவு வருகிறது.

அவளையே நினைத்துக் கொண்டு, வேறு மணம் செய்யவும் மாட்டானா?

காதல் படுத்தும் பாட்டை நினைத்து அவளுக்கு விசித்திரமாக இருந்தது.

## 22

திருமண வைபவம் கொண்டாட்டம் பெருமளவு வட இந்திய பாணியில் நடைபெற்றது. ஒரு வாரமும் திருவிழாக் கோலம்தான். குடும்பத்தின் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர்.

புவன் அவசர வேலை நிமித்தமாக வெளிநாடு போயிருப்பதாகவும், திருமணத்திற்கு இரண்டு நாட்கள் முன்னதாக வருவான் என்றும் இவளுக்கு செய்தி கிடைத்தது.

மெஹந்தி பங்ஷன் ஒன்றும் நடத்தினார்கள். கல்யாணப் பெண்ணிற்கு கையில் மருதாணி இடும் விழா. பாட்டும் நடனமுமாக வீடே களை கட்டியிருந்தது.

காதம்பரிக்கு மட்டுமில்லாமல், வீட்டுப் பெண்களுக்கும் மெஹந்தி இட்டார்கள். கடல் நீல வண்ணத்தில் காக்ரா சோளியும் சமிக்கிகளால் டிசைன் செய்யப்பட்ட நீண்ட ஸ்கர்ட்டுமாக ரூபியும் ஒரு பாட்டிற்கு காதம்பரியுடன் சேர்ந்து நடனமாடினாள். ஒரே கை தட்டும் விசிலும் பறந்தது.

அழகான காதல் பாட்டிற்கு நடனமாடிய ரூபியின் இந்தப் பாட்டும், ஆட்டமும் மிக நளினமாக இருந்தது. கல்யாணமான, ஆகாத என்ற வித்தியாசம் இன்றி ஒரே ஆட்டம், பாட்டம் தான். இடை இடையே 'காதம்பரி'யை இளவட்டங்கள் கிண்டல் செய்து உண்டு இல்லை என்றாக்கினார்கள்.

மறுநாள் காலை உணவு சாப்பிடுவதற்காக டைனிங் அறையில் நுழைகையில் 'புவன்' இருந்தான்.

அவளைக் கண்டதும் அவன் கண்களில் ஆராய்தல் இருந்தது. ஒற்றை





புருவம் வில்லாக வளைந்தது. அவள் அமர நாற்காலியை கண்களால் சைகை காட்டினான்.

ஒவ்வொருவரும் ரெடியாக ரெடியாக, டைனிங் டேபிள் வந்து சாப்பிட்டு விட்டு நகர்ந்து விடுவார்கள். அவள் இங்கு இருந்த நான்கு நாட்களும் இப்படித்தான் சென்றது.

"அம்மா, அப்பா வரவில்லையே?''- என்று தலை முடியை கோதியபடி அவன் கேட்ட தோரணை அவளுக்குப் பிடித்திருந்தது. அவன் செய்வது எதுதான் அவளுக்குப் பிடிக்கவில்லை? காதம்பரியும், ஹீராவும் சேர்ந்து நுழைய, பின்னாலேயே அவனின் அத்தைகள், பிள்ளைகள் என்று நுழைய, கொஞ்ச நேரம் பேச்சு, சிரிப்பு என்று நேரம் சுவாரசியமாகக் கழிந்தது.

மஹதி, புவனின் பார்வை ஒருவர் அறியாமல் மற்றவரை பார்ப்பதிலேயே இருந்தது.

மஹதிக்கு ஒரு விஷயம் மட்டுமே சரியாகவே புரியவில்லை.

அவன் எப்படி இந்த வீட்டாரைக் கவர்ந்தான்?!

சத்தியமாகப் புரியவில்லை.

சின்னச் சின்ன விஷயங்களுக்கும் மஹதி மஹதி என்று அவளை கூப்பிட்டுக் கொண்டே இருந்தார்கள்.

ஹீராம்பரிக்கு ஹேர் ஸ்டைலில் மாற்றினாலும் நன்றாயிருக்கிறதா என்று மஹதி வந்து சொல்லட்டும் என்று அழைத்தார்கள். யார் வந்தாலும் அவள் வீட்டிலொருத்தியாக அறிமுகப்படுத்தப்பட்டாள்.

சின்னச் சின்ன கல்யாணச் சடங்கிலும் அவளையும் ஈடுபடுத்தினார்கள். மணப் பெண்ணுக்கு நலங்கு சுற்றும் வைபவத்திலும் முதலில் அவளைத்தான் செய்யச் சொன்னார்கள்.

இயல்பிலேயே எல்லாவற்றிலும் முதல் ஆளாக எதையும் எடுத்துச் செய்யும் மஹதி, கல்யாண வீட்டில் நடந்த ஏற்பாடுகளில் சின்னச் சின்ன மாற்றங்களை ஆர்கனைஸரிடம் சொல்லவே, எல்லோருக்கும் முக்கியமானவளாக ஆனாள்.

புவன் வேறு அவன் பங்கிற்கு.

"மஹதி, கல்யாணவீட்டில் கவனப்பிசகாக இந்த பெட்டி தொலைந்து போகும். மிக முக்கியமான பெட்டி, உன்னிடம் பத்திரமாக வைத்திரு''-






என்று சொல்லிவிட்டு போனான்.

பெட்டியோடு வரும்பொழுது, அவள் எதிர்பட்டதால் அவளிடம் கொடுத்துவிட்டு போய் விட்டானா? அவன் வீடு, இதில் அவன் அறையில் பூட்டி வைக்காமல் என் என்னிடம் கொடுக்கிறான். எங்கேயோ இடித்தது அவளுக்கு. அவன் நகர்ந்தவுடன் தானே மூளையே வேலை செய்து, கேள்வி கேட்கிறது.

கல்யாணத்திற்கு முதல் நாள், துர்காவும், காதம்பரியும் ஹீராம்பரி முகூர்த்தத்திற்கு அணிவதற்கான நகைகளை எடுத்து வைத்துக் கொண்டிருக்க, அறைக்குள் எட்டிப்பார்த்த மஹதியையும் அவர்களுடன் சேர்த்து அவளிடமும் அபிப்ராயம் கேட்டார்கள்.

"குந்தன் செட் போடலாமா? டைமண்ட் போடலாமா?''- மஹதி.

"கல்யாணத்திற்கு டைமண்ட்ஸ் செட் நல்லாயிருக்கும்''- என்று அவள் அபிப்ராயம் சொல்ல, மறு பேச்சின்றி அவள் சொன்னது போல எடுத்து வைத்தார்கள்.

அப்பொழுது மஹதி, திடீரென்று நினைத்தாற்போல,

"அக்கா, நீங்கள் எனக்கென்று ஒரு முறை புவனிடம் ஏதோ பார்சல் கொடுத்திருந்தீர்களே, சென்னையில், வாங்க மறந்துவிட்டேன். ஸாரி. என்ன கொடுத்திருந்தீர்கள்?'' என்று ஆசையாக கேட்க,

"என்னது? நானா...? பார்சலா...? புவன் சொன்னானா? சொல்லி... பிறகு கொடுக்கவில்லையா?'' கதை கேட்டாள் காதம்பரி.

"வா என்று காப்பி 'ஷாப்'க்கு கூப்பிட்டார். போனேன், பேசியபடி காபி சாப்பிட்டு கிளம்பியதில் மறந்துட்டேன்.

"அடடா...''- என்று துர்காவும், காதம்பரியும் சேர்ந்து சொல்லி ஒரு சேர சிரிக்க.

"ம்ம்... அப்புறம் வேறு என்ன சொன்னான்? துர்காவின் கண்களில் குறும்பில் நட்சத்திரங்கள் மின்னியது.

அதை கவனிக்காமல்,

"அதுக்கு முன்னாலும் அப்படித்தான், "ஹீராம்பரி கொடுத்த பார்சலை வாங்க காபிடே'க்கு...''

காதம்பரியின் கேலியான சிரிப்பு மஹதிக்கு அப்பொழுது தான் உறைத்தது.

"நாங்க இதுவரை ஒன்றுமே கொடுத்து விட வில்லையே? உன்னைப் பார்த்துப் பேச ஏதாவது சாக்கு சொல்லியிருப்பானாயிருக்கும். அதற்கு எங்க தலையையா அவன் உருட்டினான்'' காதம்பரி சொல்ல உதட்டை கடித்தாள் மஹதி.

எதற்கும், எப்பொழுதும், காதம்பரி தொடக்கத்திலிருந்தே முடிச்சு போடுவது அவளுக்கு புரிந்தது.

அதற்குள் புவன் வர,

காதம்பரி அவனிடம்.,

"ஏன் அண்ணா மஹதி ஏதேதோ கேட்கறாப்பல... எங்களுக்கு புரியவேயில்லை. ஏதோ பார்சலாம்... 'காபிடே'யாம்...''- என்று கண்களில் சிரிப்புடன் இழுக்க.

உதட்டை கடித்தான் புவன். "இந்த சி.ஐ.டி. வேலையெல்லாம் பிறகு பார்க்கலாம்" என்று காதம்பரியிடம் சொல்லிவிட்டு, "இதே மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்திருக்கிறாங்களாம்மா. அதை கவனிக்காமல் இவன் சொல்வதை நம்பிக் கொண்டு என்ன அரட்டை..." - கண்களால் சிரித்த வண்ணம், பேச்சில் அழுத்தம் கொடுத்துப் பேசிவிட்டு நகர்ந்தான் அவன்.

மூச்சடைத்தது மஹதிக்கு.

தன்னறையில் அமர்ந்து யோசித்தவளுக்கு நினைவுகள் எங்கெங்கோ பறந்தன.

அவனுக்கும் அவள் மேல் ஆசையிருக்குமா? இருந்தால்?

ஆனால் இவர்கள் பார்சல் ஒன்றுமே கொடுத்தனுப்பாமல் புவன் ஏன் போய் சொல்ல வேண்டும்.

அதுவும் இருமுறை.

மனக்குள் கற்பனைக் கோட்டை பிரம்மாண்டமாக எழும்பியது.

அதில் அவளும் அவனும் மட்டும்.

## 23

ஆனால் மறுநாள் மாலை, தூர்கா, புவனின் முறை பெண் என்று ஒரு அழகிய பெண்ணை அறிமுகப்படுத்தி வைக்க அவளின் கற்பனை கோட்டை எழும்பிய வேகத்தில் சரிந்தது.

அந்த பெண் கீர்த்தி.

"புவன் அத்தான், புவன் அத்தான்" - என்று அவன் பின்னாலேயே ஓட, மஹதி மெல்ல ஒதுங்கத் தொடங்கினாள்.

கீர்த்தியைக் கண்டது முதல் அவள் வாழ்வில் இதுவரை உணர்ந்தறியாத 'பொறாமை' உணர்ச்சி அவளை பாடாய்படுத்த.

புவன் இருக்கும் இடத்தை முற்றிலும் தவிர்த்தாள்.

ஒரு முறை அப்படியும், புவன் அந்த பெண் கீர்த்தியிடம் பேசியது, கீர்த்து எல்லாம் கேட்டது.

"கல்யாணத்திற்கு பிறகு இந்த கதை எல்லாம் இல்லை" - என்று புவன் சொல்லி சிரிக்க,

"போங்கள் அத்தான்" - என்று அவள் முகம் சிணுங்கி சிவக்க, கண்கள் கரித்தது அவளுக்கு. உடனே சென்னை பறந்து சென்று விட எண்ணம் மேலிட்டது.

மாலை அந்தாக்ஷி விளையாட்டு குடும்பத்தினர் ஆண்களும், பெண்களுமாக இரு பிரிவாக பிரிந்து உற்சாகமாக, கல்யாணப் பெண்ணை கலாட்டா செய்து கொண்டிருந்தார்கள். திடீரென்று மஹதியின் இதயம் படபடவென்று இயங்கியது. அவளின் கண்களும் உதடுகளும் துடித்தன.

காரணம் புவன்,

வெண்பட்டு குர்த்தா பைஜாமாவில் மஹதியின் பிரிவுக்கு எதிராக வந்து அமர்ந்தான். ஹீராம்பரியிடமும், அவன் சிநேகிதிகளுடனும் ஏதோ பேசிச்சிரித்தான். அதற்குள் ரூபி அவனைக் கண்டு கன்னத்தில் முகம் பதிந்து கொஞ்சி பேசியபடி அவன் இருந்த அணியில் சேர்ந்து கொண்டாள். அவன் மறுபக்கத்தில் சிவந்த முகத்துடன் கீர்த்தி இவன் என்ன ஆயர்பாடி கண்ணனா? சுற்றிலும் எத்தனை பெண்கள்?! மஹதியின் நெஞ்சம் கருகியது.

கடைசியில் அணியின் தலைமையில் இந்த பக்கம் புவன், அந்த பக்கம் மஹதி, காதம்பரி, ஷாம் என்று கொஞ்சம் இளவட்டங்கள்.

என் பக்கத்திற்கு ஆட்கள் பத்தாது என்று கூறி சிவந்து போய் புவனை ஒட்டியபடி நின்ற கீர்த்தியை தங்கள் பக்கம் இழுத்தாள் மஹதி. இது என்ன? என்னதான் கட்டிக் கொள்ளப் போகிறவள் என்றாலும் இத்தனை பேர் எதிரில் ஒட்டிக் கொண்டு நிற்பது பார்ப்பதற்கு நன்றாகவா இருக்கிறது? என்று பொறாமை கொண்ட மனம் செயலாற்றியது.

விளையாட்டை தொடங்கும் முன், எல்லோரும் புவனை ஒரு முழு பாட்டு பாடி ஆரம்பிக்கச் சொன்னார்கள். மஹதி விழி விரியப் பார்க்க, பக்கத்திலிருந்த ஹீராம்பரி, "அண்ணன் மிக அருமையாக பாடுவான். பாடினால் கேட்டுக் கொண்டேயிருக்கலாம் போலிருக்கும்" - என்று பெருமையாகச் சொல்ல,

எல்லோர் விருப்பத்திற்கிணங்க அவன், பாடிய கனாக் கண்டேன் பாட்டில் உருகிப் போனாள் மஹதி. அவன் பாடிய பொழுது முழு கவனமும் அவன் மேலோ... என்று எண்ணும்படியாக அவன் பார்வை அவளையே சுற்ற... மஹதிக்கு நெஞ்சு துடித்தது. அருகே அமர்ந்திருந்த கீர்த்தியைக் கண்டதும் தான் உணர்வே வந்தது அவளுக்கு. கடவுளே அவன் பார்வை கீர்த்தியின்... மேல்...

கண்களை கரித்தது அவளுக்கு. இருந்தாலும், கல்யாண வீட்டின் களை குறைந்துவிடக் கூடாது என்பதே கவனமாக, விளையாட்டில் மனதை செலுத்தினாள் மஹதி. ஆனால் அது வெகு கடினமாகயிருந்தது.

'அந்தாக்ஷி' விளையாட்டு முடிந்தது, கூட்டம் கலைய,


"மஹதி..." என்று அழைத்தபடி வந்த புவனை கவனியாதவள் போல வேகமாக மறுதிசை நோக்கி நகர்ந்தாள் மஹதி.

அவன் அருகாமையில் அவள் தன் மனதை காட்டிக் கொடுத்து விடுவாளோ என்ற பயம் அவளை வேகமாகப் பிடித்தது. அவன் இருந்த

"ஆட்டோ டிரைவரை பெட்ரோல் பங்கில் வேலைக்கு சேர்த்தது தப்பாபோச்சா? ஏன் என்னாச்சு?"

"மீட்டருக்கு மேலே போட்டுக்கொடுங்கன்னு கேட்கிறான்"

எம். எஸ்.



பக்கம் செல்வதைத் தவிர்த்தான்.

அதை கவனித்தது போல, காதம்பரி வேண்டுமென்றே மஹதியை, ஏதோ ஒரு வேலை சொல்லி யுவனிடம் மறுபடி மறுபடி அனுப்ப, மஹதி உதட்டைக் கடித்தாள். கடைசியில்,

"முக்கியமான விருந்தாளி மஹதி, நீயும் யுவனுடன் போய் வாசல் வரை அவரை வழியனுப்பி விட்டு வா" என்று அனுப்ப,

தன் விதியை நொந்தபடி மஹதி அவனுடன் செல்ல, ஏதேச்சையாக அவன் தோளோடு அவள் தோள் உரச தைத வேல்டேஜ் கரண்ட் உடம்பெல்லாம் ஊடுருவியது போல உணர்ச்சி. அவளை வியாபிக்க விருட்டென விலகினாள்.

அதை கவனித்த அவன் முகம் கருக்கியது.

24

ஓவி ராம்பரியின் திருமணம் இனிதே முடிந்தது. மஹதியின் பெற்றோரும் முகூர்த்தத்திற்கு சரியாக வந்துவிட்டார்கள். மறுநாள் மஹதி அவர்கள் கிளம்பும் போது தானும் அவர்களுடனே செல்வதாக, காதம்பரியிடம் சொல்லி விட்டாள். இனி துர்கா ஆன்ட்டியிடமும் விடை பெற வேண்டும்.

மாலை பிளைட் டிக்கெட் புக் பண்ணி ரெடியாக வந்தது.

கல்யாண வீட்டில் தொலைந்துவிடப் போகிறது. இது முக்கியமான பெட்டி. பத்திரமாக வைத்துக் கொள் என்று அவன் கொடுத்து சென்ற சின்ன பிரீப் கேஸை அவனிடம் கொடுத்துவிட்டால் அவளும் கிளம்பி விடலாம்.

ஆனாலும் பீரோவில் வைத்து பூட்டாமல் அவனிடம் ஏன் கொடுத்தான்?

யுவன் பிஸியாக இருப்பானோ என்னவோ? கண்களில் காணவேயில்லை.

ஆயிரம் வேலையை வைத்திருப்பவன். கையில் இறக்கை முளைத்தது போல பறப்பவன்.

அதிலும் அந்த கீர்த்தியின்... நினைவால் உலகத்தை மறந்திருப்பவன், என்று அவள் மனம் சலிக்க...

பெட்டியுடன், அவனுடைய அலுவல் அறையை எட்டிப் பார்த்தாள். அங்கும் இல்லை. மெல்ல ஹாலில் நுழைந்தாள்.

"எங்கே பெட்டியும் கையுமாக கிளம்பி விட்டாய்?"- என்று அவனின் நேர் குரலில் திரும்பினாள். அவளுக்கு பின்னாலேயே வந்தானா?

"உங்கள் பெட்டி... மறந்து விட்டீர்களா?" உங்களைத்தான் தேடினேன்.

"என்.. ஓ... கொடு"- என்று கையை நீட்டினான்.

மஹதியின் உள்ளம் சரிவர புரியாமல், கல்யாணம் முடிந்ததும், அவனிடம் சொல்லாமல், கொள்ளாமல் போய் விடுவாளோ என்று உள்ளூர தோன்றிய சந்தேகத்தால் தானே, பெட்டியை அவனிடம் கொடுத்து வைத்திருந்தான்.

எப்படியும் பொறுப்பை ஒப்படைக்க தனிமையில் அவனை அவள் சந்திப்பாளே.

பெட்டி கை மாறுகையில் இருவர் விரல்களும் சுவாதீனமாக உரச, மஹதிக்குள் தான் 'ஷாக்' அடித்தது போல அதிர்வலைகள் உடலுக்குள் பரவலாயின.

அவளின் சலனத்தை உணர்ந்தது போல் அவன் கண்கள் இடுங்கியது. இருவர் கண்களும் ஒரு விநாடி தாங்கி நின்றன.

தொண்டையை கனைத்தபடி பார்வையை பிரித்தவனும் அவன்தான்.

"என்னோட பெயிண்டிங் பார்க்கணும்னு கேட்டியே வா"- என்று அவளை அழைத்தபடி அறைகள் பல தாண்டி கடைசியாக இருந்த அறைக்குள் அவளை அழைத்துச் சென்றான். அவன் பின்னாடியே தொடர்ந்தாள் அவள்.

"இதோ இது என்னுடைய பர்ஸ்ட் 'ச்சார் கோல்' பெயிண்டிங்"- என்று அவன் அறையின் வாசலிலேயே முதலாவதாக மாட்டியிருந்த பெயிண்டிங் முன்னே சட்டென்று நிற்க.

அறையின் உள்ளே போகிறான் என்ற நினைப்பில் தொடர்ந்த மஹதி அவன் சட்டென்று நிற்க, அவனை மோதி உரசியபடி நின்றாள். மீண்டும் 'ஷாக்' அடித்தது போல் அவளுள் அதிர்வலைகள் பரவ, வேகமாக ஓர் அடி பின் வைத்து நகர, சட்டென்று அவளின் மணிக்கட்டை பிடித்தான் அவன்.

கண்கள் சிப்பியாய் விரிந்தது மஹதிக்கு.


"என்ன?"- என்று அவன் பிடியிலிருந்து கைகளை விடுவித்துக் கொள்ள முயற்சி பண்ணியபடி கேட்ட மஹதியின் நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது.

"என்னை என்ன பெண் பித்தன் என்று நினைத்தாயா?" நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். என்னை கண்டு ஒளிந்து கொள்வதும், கண்டு விரல் பட்டால் கூட ஏதோ நான் உன்னை 'ரேப்'

"கிரிக்கெட் போட்டியில விளையாடிப் புரிக்கட்டை, கரண்டி, கிண்ணத்தை எல்லாம் என் மீது வீசுறியே?"

"கவலைப்படாதீங்க! என்வீட்ல கிரிக்கெட் போட்டியின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே இருக்கும்.!"

-சு. அருணாசலம், தென்காசி.



போலவே விளைந்துக் கொள்வதும்...''

செய்து விட போவது போல அவனின் சாடலில் மறந்துக்கு மூளை மரத்துப்போய் எதிர்பாராத அவனின் சாடலில் மறந்துக்கு மூளை வேலை நிறுத்தம் செய்தது. இவனை கவனித்துக் கொண்டேதான் இருக்கிறானா?

"உனக்கு அந்த அளவு நம்பிக்கையிருந்தால், இங்கே உன்னை யாரும் அழைக்கவில்லை. நீ போகலாம்" சொன்னவனின் உதடு அழுத்தமாக இறுகியிருந்தது.

அவன் அவள் கையை விட்டால் என் நிற்க போகிறாள்? பறந்து விடுவாளே.

குறிப்பாக அவளின் கண்கள் விடு என் கையை என்பது போல், அவனுடைய கையை பார்க்க, அவன் கண்கள் அவளை அங்குலம் அங்குலமாக துளைத்தது.

விடுவிப்பதற்கு பதிலாக, சட்டென்று அவள் கையை சுண்டி இழுத்தான். அவள் அவன்மேல் மொத்தமாக விழுந்தாள்.

விருட்டென விலகிய அவளை அவனுடைய பலமான கரங்கள் இறுக அணைத்தன. முதலில் அதிர்ந்து திமிறிய மதுநிதியின் உடலும் நெகிழ தொடங்க,

மதுநி கலங்கிப்போனாள். 'ப்ளீஸ் விடுங்க'- என்று அவள் சொன்ன வார்த்தைகள் புவனின் காதை கூட எட்டாத அளவிற்கு மெல்லியதாக இருந்தது. மதுநிதியின் நெகிழ்ச்சியை உணர்ந்தவனின் கைகளும், உதடுகளும் எல்லைகள் மீற,

"அண்ணா..."- என்றபடி காதம்பரி வந்து நின்றாள்.

வெளியுலகம் மறந்து அணைப்பிலிருந்தவர்கள் இருவரும் வேகவேகமாக நகர,

இருவரின் எக்கு தப்பான நிலையை கண்டு, காதம்பரியின் உதடு சிரிப்பில் விரிய கண்களில் குறும்பு கூத்தாடியது.

"எப்பவுமே நான் பூஜை வேளை கரடிதான்... ஸாரி"- என்று ஓடியே விட்டாள்.

மதுநிதியின் முகம் இரத்தமென சிவந்து போயிற்று. என்ன காரியம் செய்துவிட்டான். இவளால் இதற்கு என்ன விளக்கமளிக்க முடியும்? அவன் அணைப்பிற்கு ஒரு சின்ன எதிர்ப்பு கூட அவள் தெரிவிக்கவில்லையே?

அவளை என்னவென்று நினைப்பான்? இதை எல்லாவற்றையும் விட, காதம்பரி பேசியதன் பொருள் புரிந்து, முகம் சூடாயிற்று. இதை வேறு சமாளித்தாக வேண்டுமே?

மனதில் ஆழமாக பதிந்துவிட்ட உணர்ச்சிகளை அடிப்படையாக கொண்டு சில சம்பவங்கள் ஞாபகத்திற்கு வருவதுண்டு மனக்கிடங்கிலிருந்து அவ்வப்போது தலைகாட்டுவது உண்டு.

முன்பு இதே போல சம்பவத்திற்கு அவள் அளித்த விளக்கங்கள் அவனுக்கு மறக்குமா? அடிக்கடி அதை நினைவுப்படுத்திக் கொண்டு தானே தன்னையே அடக்கி வைத்திருக்கிறான்.

"சீக்கிரம், சீக்கிரம்...- காதம்பரியிடம் சொல்லுங்கள். விஷயம்



அவர்கள் நினைப்பது மாதிரி ஒன்றும் இல்லை என்று. வேறு ஏதேனும் அர்த்தம் பண்ணிக் கொள்ளப்போகிறார்கள். சீக்கிரம்...''- அவன் முகம் திரும்பி பார்க்காமல் மறுபுறம் கண்களை ஓட்டியபடி அவள் அவசரப்பட,

"என்னவென்று சொல்லச் சொல்கிறாய்?" நொடியில் முகம் இறுக சீறினான் அவன்.

"அதாவது... ஏற்கனவே அவர்கள் கண்டதையும், நினைத்துக் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். நீங்கள் திருமணம் புரிய நினைப்பது நான் இல்லை என்று தெளிவாகச் சொல்லிவிடுங்கள். இல்லை என்றால் பெரும் பிரச்சனையாகிவிடும்''

அவள் பேசப் பேச அவன் தாடை இறுகியது.

"யாருக்கு பிரச்சனையாகும் என்கிறாய்? இந்த பிரச்சனை வெளியே தெரிந்தால், அது உன் காதலை பாதித்துவிடுமோ? உன் ஆருயிர் அமெரிக்க காதலன் உன்னை சந்தேகப்படுவான் என்று பயமாக இருக்கிறதா?''- கடித்த பற்களினூடே வார்த்தைகளை வீசினான் அவன்.

அவனின் பார்வையில் அவள் நெஞ்சம் மெல்ல காந்தியது. அவனுடைய காதலை பாதுகாக்க அவள் பேசினால், இவன் என்ன பேசுகிறான்? எனக்கு அவனின் முறைப்பெண் விஷயம் தெரியாதென்று நினைக்கிறானா? அவளை திருமணம் புரிவதாக பேசிய பேச்சு அவளுக்கு புரியவில்லை என்று நினைக்கிறானா? எதற்காக இரட்டை வேடம்? அதை தெளிவாக்கும் முயற்சியில்,

"எனக்கில்லை பிரச்சனை, பிரச்சனை உங்களுக்கு தான். இந்த பிரச்சனையால் உங்களை கீர்த்தி சந்தேகப்படுவாள். சீக்கிரம் காதம்பரியிடம் விளக்கவில்லை என்றால், விஷயம் கண், காது, மூக்கு வைத்து பரவி விடும். உங்களை காப்பாற்ற எண்ணினால் என்மேல் என்ன பழி?'' உன் விஷயம் எனக்கு தெரியும், என்கிற மாதிரி மூச்சிறைக்க அவள், வெகு வேக வேகமாக மனதில் கனன்று கொண்டு அவளை நின்ற விஷயங்களை சொல்ல,


அதுவரை கொலை வெறி தாண்டவமாடிய அவனின் முகத்தில் சொல்ல முடியாத நிம்மதி மெல்ல மெல்ல பரவ, அவனின் ஒற்றை புருவம் மிக வசீகரமாக உயர்ந்தது.

"எனக்கு எந்த பிரச்சனையும் வரப்போவதில்லை. நீ சொல்வதைப் பார்த்தால்... உனக்கும் பிரச்சனை இல்லை என்று எனக்குத் தோன்றுவதால்...''- என்று பேசியவனை அவள் பேசும் மொழி

"ரஜினி, கமல், விஜய் யார் ஆட்டம் உனக்கு பிடிக்கும்?"

"எங்க அப்பா குடிச்சிட்டு வந்து இரவில் பாம்பாட்டம் போடு வாரு அதுதான் எனக்கு பிடிக்கும்."

எம். எஸ்



புரியாதவள் போல் கண்களை இமை கொட்டாது பார்த்தாள் அவள்.

அவன் இதழ் மிக விகாரமாக விரிந்தது.

''உனக்கும் பிரச்சனையில்லை. எனக்கும் பிரச்சனையில்லை, அதனால் சொல்லிவிட்டு போகட்டும்''

என்ன உறவு இது? என்ன சொல்கிறான்? அர்த்தம் புரிந்து தான் பேசுகிறானா?

புரிந்தும் புரியாமலுமாய்... இது... எப்படி சாத்தியம்

அவளுக்கு... புரிந்தும்- புரியாமலும் கண்டவளின் முகம் சிரிப்பில் மலர்ந்தது.

அவன் கண்களில் குறும்பைக் கண்டவள் அவன் புறமாக நகர்ந்து கைகளால் அவனின் சிவந்த முகத்தை ஏந்த,

புரிந்தும், புரியாமலிருந்த கேள்விகள் எக்கச்சக்கமாக மனதை வியாபிக்க, அவன் அண்மை வேறு தலையை கிறுகிறுக்க வைக்க,

''எனக்கு போகணும்''. என்று பந்தய குதிரை வேகத்தில் ஓடிய வார்த்தைகளுடன் வேகமாக அவன் நெஞ்சத்தோடு முணு முணுப்பான வார்த்தைகளுடன் பிடியில் இருந்து நகர்ந்து வெளியே ஓடியே விட்டாள் மஹதி.

25

அறைக்குள் புயலைப் போல் நுழைந்தவளுக்கு ஒன்றுமே யோசிக்க முடியவில்லை. காரணம் காதம்பரி!

அவளுடன்கூடவே நுழைந்த படி,

''ஹாய்..லோ..ஹாப்பி...''-என்றாள்.

''நீங்கள் நினைப்பது போலில்லை...''-மெல்லியதாக வாய்விட்டு மஹதி சொல்ல, சிரித்தாள் காதம்பரி.

''அண்ணன் இன்னும் உங்களிடம் சொல்லவில்லையா... அந்த பேச்சு தொடங்கும் முன்பே... வா...''- என்று ராகம் போட்டு பேசி மீண்டும் காதம்பரி சிரிக்க, மஹதியின் கன்னங்கள் செம்மையுற்றன.

''ஹீரா கல்யாணம் முடிஞ்சவுடன்.. உன்னிடம் சொல்லிடறேன்னு ப்ராமிஸ் பண்ணது அண்ணன் தான்.''

''ப்ளீஸ்... புரியும்படி பேசுங்களேன்''-கண்களை தரையில் ஓட்டியபடி மஹதி பேசிய வார்த்தைகள் தெளிவாக இருந்தாலும் மிகவும் பலகீனமாக இருந்தது.

''மஹதி 'மடலேறுதல்' என்று கேள்விப்பட்டிருக்கிறாயா?'' பொங்கி பொங்கி வந்த சிரிப்பை அடக்கிய படி காதம்பரி கேட்க, மஹதி காதம்பரியை இமைக்காமல் பார்த்தாள். நேற்றிலிருந்தே காதம்பரி இதே போல அடிக்கடி அவளை பார்த்து இரகசிய சிரிப்பு சிரிக்கிறாள்.

அவள் நிலைமைதான் சிரிப்பாய் சிரிக்கிறதே. இதில் யாரை குறை சொல்ல.

''சங்க காலத்தில் 'மடலேறுதல்' என்பது ஒரு விதம். இது பெருந்திணைப் பகுதியில் அமையும் பிரிவு. ஒரு பருவ மங்கையை



காணும் இளைஞன் அவளை அடைய விரும்புவானாம். அவளுக்கு அவன் மீது அன்பு ஏற்பட்டாலும், அவனுக்கு அவள்மேல் அன்பு இருக்கிறதா? என்று தெரியாமல் அன்பில்லாத துப்போல் நடந்து கொள்வாளாம். அதனால் கோபமுறும் அவன், தாங்க முடியாத ஒரு சமயத்தில் அவளைப் போல் உருவத்தைத் தீட்டி அதை தெரு தெருவாகக் கொண்டு காண்பித்து 'இவள் எனக்கு உரியவள்' என்பதைச் சொல்லாமல் சொல்வானாம். இப்படிப்பட்ட செயலுக்கு, மடலேறுதல் என்று பெயர்.''

எதற்கு இந்த பழைய காலத்து இலக்கியத்தை காதம்பரி மெனக்கெட்டு சொல்கிறாள் என்று புரியாமல் மஹதி கண்களை விரிக்க,

''புரியவில்லையா மஹதி?..ம்ம்?'' என்று கண்களில் கட்டிதனம் மின்ன காதம்பரி கேட்க,

ஏதோ வம்பு பண்ணுகிறாள் காதம்பரி என்பது மட்டும் புரிய குனிந்து உதட்டை கடித்தாள் மஹதி.

''இந்த 'மடலேறுதல்' காலம் காலமாக நடக்கிறது. நடந்துக் கொண்டேயிருக்கிறது என்று எனக்கு நேற்று தான் புரிந்தது தெரியுமா? ஆனால் காலத்துக்கு தகுந்த மாதிரியான மாற்றங்களோடு?'' என்றவளின் கண்களில் அத்தனைக் குறும்பு.

''நீ இன்னும் பார்க்...'' என்று அவள் தொடங்க...

''மஹதி...'' என்று அழைத்த படி அறைவாசலில் வந்து நின்றவன் புவன்.

அண்ணனை மஹதியின் அறையில் கண்டதும் அவள் முகத்தில் மீண்டும் சிரிப்பலைகள்.

''நான் வரேன் மஹதி. ஆல்த பெஸ்ட் அண்ணா'' என்று அவள் கண்ணடித்து புவனைப் பார்த்தபடியே செல்ல,

''வாலு..'' என்று சிரித்தவனின் முகம் சிவந்து கிடந்தது.

''மஹதி...'' என்றபடி அறைக்குள் வந்தவன் மேலே என்ன பேசுவது என்று புரியாமல் தடுமாறி நின்றான்.

அதற்குள் துர்காவும் மஹதியறைக்கு வந்தாள்.

''மஹதி..., காதி சொன்னா, நீ உன் அப்பா அம்மாவுடன் இன்று நைட்டே கிளம்ப போறியாமே..? ஹீரா போனதே வீடு வெறிச்சென்று கிடக்கு. நீ இன்னும் கொஞ்ச நாள் இருந்துட்டு போகக் கூடாதா..?''

''பார்பர் ஷாப்பிலே தலைவர் ஏன் சண்டை போடுறாரு?''

''அவருக்கு துணியை போர்த்தினதும் கைத் தட்டணுங்கிறாராம்''

-தேவி, பாபநாசம்.



என்று பேசியபடி உள்ளே வந்தவர், முகம் சிவந்து கையால் தலையை கோதியபடி மூச்சை வேகமாக உள்ளிழுக்கும் மகனைக் கண்டும்; உதட்டைக் கடித்துக் கொண்டு தலையை குனிவதும், நிமிர்ந்து புவனை பார்ப்பதுமாக இருந்த மஹதியை கண்டு, ஒருவாறு நிலைமையை அறிந்து விட்டார்.

தைரியமாக காதலை சொல்ல முடியாமல்..., எங்கே? சொன்னால் மற்றவரிடம் பிரதிபலிப்பு இருக்குமா..? என்று அவர்கள் இருவரும் தயங்கியபடி இருக்க,

ஆனால் வீட்டில் உள்ளவர்களுக்கு இருவர் கண்களும் ஒருவரறியாமல் மற்றவரை பார்க்கும் பார்வையில் எல்லா விஷயமும் புரிந்து போயிருந்தது. புவனின் ஆசை மஹதியிடம் இருப்பதை உணர்ந்திருந்தே வீட்டில் யாவருக்கும் மஹதி மிகப் பிரியமானவளானாள்.

அங்கு அப்போது பரவியிருந்த சூழ்நிலையை உணர்ந்த துர்கா,

"புவன்... உங்களையும் அடுத்த முகூர்த்தத்திலேயே முடிச்சுடுவோமா?"- கண்களில் கோடி கோடியாக ஆசையையும், ஆனந்தத்தையும் அடக்கியபடி அவர் கேட்க,

"அம்மா.. ப்ளீஸ்..." என்று புவன் முகம் சிவக்க, கைகளால் கூந்தலை அளைந்தபடி சொல்ல, துர்கா வாழ்க்கையில் முதல் முறையாக வெட்கப்படும் மகனை நெஞ்சு நிறைய பார்த்து பூரித்தபடி நகர்ந்தார்.

அவர் அறையைவிட்டு சென்ற சில பல நொடிகள் மவுனத்தில் கரைந்தது. பேசுவதற்கு அவனும் வார்த்தைகளை தேடினான்.

"உன் அம்மா, அப்பாவிடம் நம் திருமணத்திற்கு பேசட்டுமா..? மஹதி... உனக்கு சம்மதமா? யோசித்து யோசித்து அவன் வார்த்தைகளை கோர்த்த விதம் அவளுக்கு ஏனோ மனதிற்கு ஏமாற்றமாக இருந்தது.

அவன் பேச்சில் காதல் இல்லை....

ஆனால் ஏன்?

எப்படி திடீரென்று அவனால் இப்படி கேட்க முடிந்தது.

அவனுடைய முறைபெண் என்ன ஆனாள்?

ஒரு வார்த்தைக்கு நூறு வார்த்தைகள் பேசும் மஹதி அவனின் வார்த்தைகளுக்கு உதட்டை கடித்துக் கொண்டு நின்றிருந்த விதம் புவனுக்கும் ஏமாற்றமாக இருந்தது.

"ம்ம்..மஹதி..." பதில் வராமல் போகவே வார்த்தைகளில் அழுத்தத்துடன் பதட்டமுடன் புவன் கேட்க,

மஹதியால் கேள்வியை அடக்கவே முடியவில்லை.

"என்ன திடீரென்று...?"

அவனுடைய கேள்வியில் அவன் உதடு அழுத்தமாக இறுகியது. சில



நொடிகள் அவளை வைத்த கண் எடுக்காமல் பார்த்தவன், பின் மெல்ல நடந்து அவளருகில் வந்து, அவள் மணிக்கட்டை பிடித்தான். அவன் செய்கையில் அவள் புருவத்தை உயர்த்த,

"வா என்னோடு.."- என்று அவள் கரம்பற்றி மீண்டும் அவனுடைய பெயிண்டிங் வைத்திருந்த இடத்திற்கு அழைத்து வந்தான். அப்படி அழைத்து வந்தவன்.

பின், அந்த அறையின் மறு கோடியில் அவளை நிறுத்தினான்.

அங்கே கண்ட காட்சியில்,

மஹதி வார்த்தைகளால் வடிக்க முடியாத உணர்ச்சியால் ஆக்கிரமிக்கப்பட்டாள்...

வரிசையாக அங்கிருந்த மூன்று பெரிய கேன்வாஸில் மஹதி ஓவியமாக இருந்தாள்.

இரண்டு கண்கள் மட்டும் தெரிய முகமூடி அணிந்திருந்த மஹதியின் கண்கள் மட்டும்..

"முதன்முதலில் நான் உன்னால் கவரப்பட்டது... உன் கண்கள்". அழுத்தமான அவனின் ஆண்மை நிரம்பிய குரல் அவள் காதருகே ஒலித்தது.

நாற்காலியில் முகமூடி கழுத்துவரை இறக்கப்பட்ட மஹதி கண்மூடி தூங்கிய கோலம் முழு உருவமாய், அவளை அத்தனை அழகாக வரைந்திருந்தான்.

"மை ஸ்லீப்பிங் ப்யூட்டி.. என்னை நீண்ட நாட்கள் தூங்க விடாமல்... நீ தூங்கிய கோலம்" காதில் கிசுகிசுப்பாய் அவன் குரல்.

அடுத்த பெயிண்டிங்,

அவளும் லேகாவும் அவனுடைய வெண்ணிற டோயோட்டாவை இடித்து விட்டு ஸ்கூட்டியை திருப்பிய கோலம்.


"இனி பார்ப்போமா? விதி தானாக உன்னை என்னிடம் சேர்க்குமா? என்று நான் ஏங்கிய சமயம் மீண்டும் உன்னை என் காரின் முன்னாலேயே கண்ட கோலம்.

"நீ கேட்டது போல் இது திடீரென்று முளைத்த காதல் தான் மஹதி... ஆனால் இப்பொழுதல்ல. அது கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு முன் உன்னை முதன் முதலாக உன் கண்களால் வசீகரிக்கப்பட்டு அந்த கணநேரத்தில் திடீரென்று உன்மேல் காதல் வைத்தேன். அந்த திடீர் காதல்,

"ஆபீஸ் போகும் போதும் பூ வாங்கிட்டு போறீங்களே, எதுக்கு?"

"எங்க ஆபீஸ் டைபிஸ்ட் ஷோபாவுக்கு!"

—உதயகுமார், விக்கிரமசிங்கபுரம்.



என் மனதில் எப்படி விருட்சமாக வளர்ந்திருக்கிறது என்று எனக்கு மட்டும் தான் தெரியும்.''

அவன் அருகே நீண்டும் தூரத்தில் நின்று அவன் முணுமுணுத்த வார்த்தைகளை கேட்டதும், மஹதியின் தலை நெறுநெறுத்துப் போனது. நெஞ்சம் படபடவென்று ரெட்டிப்பு வேகத்துடன் வேலை செய்தது.

''என்னை மயக்கி கடத்த உன்னால் முடியுமா மஹதி? என்னை ஓர் அறையில் அடைத்து வைக்க, பெண்களிருவரால் முடியுமா? நான் அத்தனை சுலபம் இல்லை மஹதி. கராத்தே, ஜூடோ, என்று பல வித்தைகளை கற்றவன். உன் இரு கண் வீச்சால் அதன் தாக்கத்தால் நான் கடத்தப்பட என்னை அனுமதித்தேன். தெரியுமா...?''.

உண்மைதானா?

அவனின் நெடுநாளைய சந்தேகத்தை கொண்டு, வேகாவும் இவனும் மோதிய அன்று காரின் ஸ்டிக்கரை கொண்டு கொண்டிருக்க மாட்டான் என்று போது அவன் அடையாளம் கூட கண்டு நினைத்தால், அவன் அந்த நிகழ்ச்சியை தத்ரூபமாக வரைந்து வர்ணம் தீட்டியிருக்கிறான்!

அவள் மேல் ஆசையில்லாமல், காதலில்லாமல், எப்படி? இப்படி? அவளை ஓவியமாகத் தீட்ட முடியும்?

பிரமிப்பு, சந்தோஷம், நாணம், என்று எல்லா உணர்வுகளும் அவளுள் கலந்தடிக்க, அதை தாங்க முடியாமல் அவள் கால்கள் துவண்டன.

துவண்டவளை தாங்கின புவனின் வலிமையான தோள்கள், விலகத் தோன்றாமல் மஹதியும் கன்னங்கள் குங்குமமாக சிவக்க அதே நிலையில் நின்றாள்.

மஹதியின் சம்மதம் அந்த மவுனத்தில் புரிந்தாலும்...

''மஹதி ஐ லவ் யூ?'' என்று அடக்க முடியாமல், ஆனால் அழுத்தமாக புவன் தெளிவாகக் கேட்க, மஹதியின் சிவந்த இதழ்கள் அழகாக விரிந்தன.

''என் புவன்... என் ஐ... லவ்.. யூ.. ஸோ மச்...'' - என்று நீட்டிய படி மஹதி சொல்ல,

அவனுடைய கரங்கள் அவன் தோளில் சாய்ந்திருந்த மஹதியை மெல்லத் திருப்பியது.

அவளின் சிவந்த முகத்தை,

கைகளில் ஏந்தினான்.

கண்களில் ஆர்வம் ஜொலிக்க,

''நிஜம்...?'' என்று அவன் கண்களில் இருந்து பார்வையை விலக்காமல் கேட்க, அவன் பார்வையின் தீட்சண்யத்தை தாங்க முடியாமல், படபடத்த நெஞ்சத்தோடு, பார்வையை தழைத்தபடி ''ஆமாம்'' என்று சொல்ல, புவனின் உதடுகள் காதலோடு அவளின் உதடுகளை சிறை பிடித்தன.

விலகவே தோன்றாமல் இருவரும் நின்றார்கள்.

அங்கே மன்மதனும், ரதியும் மாறி மாறி தங்களின் பாணத்தை எய்தபடியாக விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு கட்டத்தில் மஹதியை விலகத் தோன்றாமல் விலக்கினான் புவன்.

''இந்த சமயத்தில் வழக்கம் போல 'காதம்பரி' என்ட்ரியை எதிர்பார்க்கலாம். அதனால.. என்னிடமிருந்து தப்பித்தாய் மஹதி'', என்று அவன் ஒற்றை புருவம் வசீகரமாக ஏற உல்லாசமாக மஹதியையே பார்த்தபடி பேச,

மஹதி உச்சி முதல் அடிவரை செக்கச் செவேல் என்று சிவந்து போனாள். ஒரு பெருமூச்சோடு அவளையே பார்த்து புவனின் கண்கள் கனிந்தன. அவளை அருகில் இருந்த இரட்டை சோபாவில் அமர வைத்து தானும் அமர்ந்தான். சற்று தன்னை சமாளித்த மஹதிக்கு அவனிடம் கேட்க வேண்டிய கேள்விகள் ஒவ்வொன்றாக ஞாபகம் வர,

''உங்கள் முறை பெண்...''-என்று மஹதி கேட்க,

''அவளுக்கென்ன.. சந்தோஷமாக ஷாமை கல்யாணம் செய்யப் போகிறாள். முறைப்பெண் என்றால் என்னைத்தான் திருமணம் செய்ய வேண்டுமா?''

ஆனால் நிறைய குறிப்பு காட்டல்கள் அந்த பெண் ஹரிணி வந்ததிலிருந்து இருந்ததே. அதை அவனிடம் கேட்க,

''அம்மாவுக்கு, நீ இன்னும் விலகி விலகி போவதாக சந்தேகம். உன் பொறாமையைத் தூண்டினால் உன் காதலை வலுவாக உனக்கு உணர்த்தலாமே என்று சொல்லியிருக்கிறார்கள்.''

''அம்மாவுக்கெல்லாம்... எப்படி..''

''உன்னை முதன் முதலில் வீட்டுக்கு அழைத்து வரும்போதே, அம்மாவிடம் உங்கள் மருமகளை அழைத்து வருகிறேன் என்று தானே சொல்லி உன்னை அழைத்துச் சென்றேன். உன்னிடம் இதைப் பற்றிப் பேசியதில்லை. கொஞ்சம் பொறுமையாக இருக்கச் சொன்னேன். அவர்கள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள். நீ ஜாடையாக கூட உன் விருப்பத்தை யாரிடமும் காட்டாததால்.. உன் பொறாமையைத் தூண்ட, ஹரிணியை இழுத்தார்கள் என்பது எனக்குத் தெரியும்.''

''அதுவும் காதம்பரிக்கு, விஷயம் தெரியாமலேயே முதலில் இருந்து சந்தேகம், அதுவும் நேற்று என்னுடைய ஆர்ட் கேலரியில் உன்னோட படத்தைப் பார்த்ததிலிருந்து என்னை ஒரே கிண்டல்தான்..''

மஹதிக்கும் சிரிப்பு வந்தது.

''உங்களை கல்யாண நேரத்தில் ஆள் வைத்து கடத்தியது ரூபி என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்'' -என்று குறும்பு கூத்தாட மஹதி சொல்ல,

''ரூபி நல்ல பெண் மஹதி, 'இன்டெர்னெட் சாட்டிங்' வழியே ஒரு வெளிநாட்டு பையனை காதலித்தாள். அதை குறித்து அவளுக்கு கைப்பட்ட விசாரிப்புகள். அதுவும் ஒரு முறை, நான் பிசினஸ் நாட்டுக்கு போன போது அந்தப் பையனைப் பார்த்துப் பேசிவிட்டு வந்தேன். விசாரித்தும் பார்த்தேன். அதைப் பற்றி இங்கு யாருக்கும் தெரியாது. அதனால் அடிக்கடி அவளுக்கு சப்போர்ட்டாக, ரகசியமாக பேச நான் வேண்டும். இது மாதிரி இன்னும் நிறைய அவளுக்கு உதவியிருக்கிறேன்.

ஆனால் அம்மாவும், காதம்பரியும் அவன் என்னோடு இணைந்து விடக்கூடாதே என்று மும்முரமாக அவனை கண்காணிக்க, வேண்டுமென்றே, இல்லாததை இருப்பது மாதிரி காட்டி வெறுப்பேற்றி கொண்டிருப்பாள்.

விளையாட்டுப் போல இருப்பதால், அதை நான் பெரியதாக எடுத்துக் கொண்டதில்லை.

"மஹதி நீயும் கார்த்தனை பற்றி ஒன்றும் சொல்லவேயில்லை. அடுத்த முறை வந்து உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள போவதாக, எத்தனை தீவிரமாக இருக்கிறான் என்று உனக்குத் தெரியுமோ இல்லையோ எனக்கு நன்றாகத் தெரியும்.

"புவன்... அமெரிக்காவில் ஆள் ரெடியாக இருக்கிறான் என்று சொன்னது, உங்களிடம் இருந்து என் உண்மையான மனநிலையை மறைப்பதற்கு. ஆனால் நிஜமாகவே ஒருவனை அம்மா, அப்பா நிறுத்தியபோது நான் அரண்டு போனேன். கார்த்தனிடம் கல்யாணப் பேச்சை எடுக்காதீர்கள் என்று பலமுறை சொல்லிவிட்டேன், இருந்தாலும் மண்டையில் ஏற்றிக் கொள்ளவே மாட்டார்கள். அதற்கு மேல் வேறு என்னால் எதை சொல்ல முடியும்?

மஹதியை அவன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டு, நெஞ்சு நிறைய காதலை கண்களில் சுமந்துக் கொண்டு,

"மஹதி கல்யாணத்தை நாளையே முடிச்சுடுவோமா...? ஐ டோன்ட் திங் ஐ கேன் வெயிட் எனிலாங்கர்... என்று காதலுடன் பேச, மஹதியின் முகம் வெட்கத்தில் சிவக்க,

வீட்டின் வரவேற்பறையில் துர்கா, மஹதியின் தாய், தந்தையிடம், புவன் மஹதி கல்யாண விஷயத்தை முகம் ஜொலிக்க, மனம் நிறைந்து பேச, அடுத்து வந்த சுபமுகூர்த்தத்தில் புவன் - மஹதி திருமணம் அரங்கேறியது.

**-முற்றும்-**

